DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

பஞ் சொக்கலிங்கம்
BROKER
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
# உதயன்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1340 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 10, 2021




## இந்திய முப்படைகளின் தளபதி பிபின் ராவத்... உட்பட 13 பேரின் உடல்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி செலுத்தினார்

தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் குன்னூரில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த முப்படைகளின் தளபதி பிபின் ராவத் அவரது மனைவி மதுலிகா ராவத் உள்ளிட்ட 13 பேரின் உடல்களுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று வியாழக்கிழமை அஞ்சலி செலுத்தினார். நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே நிகழ்ந்த ஹெலிகாப்டர் விபத்தில், இந்தியாவின் முப்படைகளின் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா ராவத், ராணுவ அதிகாரிகள் உள்பட 13 பேர் உயிரிழந்தனர்.

*(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

## உலகில் பல நாடுகளில் இடம்பெறும் இனப்படுகொலைகளை 33 நாடுகள் கண்டித்திருந்தும் தொடர்ந்தும் இவ்வாறான படுகொலைகள் இடம்பெறுவது கவலையளிக்கின்றது

### ஸ்காபுறோவில் நினைவு நாளில் அரிஸ் பாபிகியன் எம்பிபி தெரிவிப்பு



உலகில் பல நாடுகளில் இடம்பெறும் இனப்படுகொலைகளை இதுவரை 33 நாடுகள் கண்டித்திருந்தும் தொடர்ந்தும் இவ்வாறான படுகொ-லைகள் இடம்பெறுவது கவலையளிக்கின்றது. எனவே உலகெங்கும் இடம்பெற்ற மற்றும் நடைபெறுகின்ற இனப்படுகொலைகள் பற்றிய வலிகள் மற்றும் பாதிப்புக்கள் ஆகியவற்றை எமது இளைய தலைமுறையினருக்கும் எடுத்துரைத்து இவ்வாறான கொலைகளும் கொடுமைகளும் தொடர்ந்து இடம்பெறாமல் இருக்க வல்லமை மிக்க உலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்“

இவ்வாறு ஸ்காபுறோவில் இடம்பெற்ற “இனப்படுகொலைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவு மற்றும் இனப்படுகொலைக் குற்றங்களை தடுப்பதற்கான சர்வதேச தினம்“ நினைவு நாளில் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும் இனப் படுகொலைகள் தீவிரமாக இடம்பெற்ற ஆர்மேனியன் நாட்டிலிருந்து வந்து கனடாவில் குடியேறி-யவருமான திரு அரிஸ் பா-பிகியன் தெரிவித்தார.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கத்தில் பக்கத்தில்)*

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com





## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### WALK-OUT BASEMENT FOR RENT

**Steeles / Staines** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட **walk-out basement** உடனடியாக வாடகைக்கு உள்ளது. கார் **parking** ஒன்று வழங்கப்படும்.
தமிழர் கடைகள், பாடசாலைகள் மற்றும் பஸ் வசதிகள் ஆகியன அருகில்.
தனியாக **washer & dryer** ஆகியன வழங்கப்பெறும்.

தொடர்புகளுக்கு:
(416) 579-3022 அல்லது (647) 521-8022

### காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்ளம் வழங்கப்படும்.
அத்துடன் Kitchen Helper, Dishwasher தேவை.

**Call: (416) 701-0003**

### திருமண மையம்

கனடா, அமெரிக்கா, ஸ்ரீலங்கா & மற்ற நாடுகள்.
மணப்பெண் / மணமகன்
திருமணம் / மறுமணம்
தமிழ் & தெலுங்கு & மலையாளம் & மற்ற மொழிகளும்.
அந்த அந்த நாட்டிலும் & இந்தியாவில் இருந்து மாறி வருபவர்களும் உள்ளனர்.

ஹரி ஐயர் ஜோதிடர்
**24 hours -- 7 days**
**Whatsapp: + 91 86673 25268**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### COURIER DRIVERS WANTED

Courier Drivers wanted with your own car in Scarborough, GTA, Mississauga, Brampton, Etobicoke, Woodbridge and Pickering area.

Full time or partime.

**Pala: 416-320-1446**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6

Office: (416) 613 8998

Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### பெண்களுக்கான வேலை வாய்ப்பு

தொழிற்சாலை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

பெண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
**ஜெயா:**
**(647) 669-2739**

### CAREGIVER WANTED (LIVE-IN)

- Looking for a Male caregiver to look after a 91-year-old father and 78-year-old mother
- The language requirement will be English and Tamil
- Someone who is caring, trustworthy and who would live with them like a part of the family
- Previous experience, related training and passion for the job will be an asset
- Salary will be negotiated
- Interested candidates, please email your resume to **nmaithely@gmail.com**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் மாணவர் சமூகத்தின் போராட்டங்களுக்கு 'சாவு மணி' அடித்து வரும் சனாதிபதியின் பிரசங்கம்

இலங்கையில் மாணவர் சமூகத்திலிருந்தே எழுச்சி மிக்க அரசியல்வாதிகள் தோன்றும் சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால், அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றும் தந்திரங்களை எளிதாகப் புரிந்து கொள்ளும் மாணவர் சமூகம் இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் பல போராட்டங்களை பல தடவைகள் நடத்தியுள்ளது என்பது பலருக்கு நினைவிருக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெறும் மாணவர் போராட்டத்திற்கு 'பயங்கரவாதம்' மற்றும் 'இனப் போராட்டம்' என்று முத்திரை குத்தும் பெரும்பான்மை இன முதலாளித்துவ அரசியல்வாதிகள். தென்னிலங்கை சிங்கள மாணவர்கள் அரசாங்கங்களின் சட்டங்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்தும் போது, அவற்றை 'மாவோயிஸ்ட்டுக்களின் போராட்டம்" அல்லது 'கொம்யூனிஸ்ட்களின் போராட்டம்' என்று முத்திரைகளைக் குத்திய வண்ணம் மக்களுக்கு மாணவர்களின் போராட்டத்தில் நியாயமில்லை என்பதை காட்ட முனைந்து வந்துள்ளன.

இவ்வாறு வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் நடைபெறும் மாண-வர் போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதற்காக இராணுவத்தையும் காவல்துறையையும் ஏவிவிடும் தென்னிலங்கை அரசாங்கங்கள் கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளை கொன்றும் சிறை-களில் அடைத்தும் அடக்கு முறைகளுக்கு உட்படுத்தியுள்ளது.இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் தமிழ் முஸ்லிம் மாணவர்களும் அடங்குவார்கள்.

இவ்வாறு மாணவர் போராட்டங்களுக்கு முழு விரோதியாகவும் எதிராளியாகவும் விளங்கும் தற்போதைய சனாதிபதி கோட்டாபாய மாணவர் சமூகம் பாதிக்கப்படுவதனை தாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதுவும் இந்த அறிவிப்பை எங்கு வைத்து விடுத்துள்ளார் என்றால். மக்கள் போராட்டங்களையும் மாணவர் போராட்டங்களையும் ஒடுக்குவதற்கு என பயிற்றியளித்து பட்டம் வழங்கும் ஒரு விழாவில் தான் இவ்வாறு அறிவித்துள்ளார். சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இந்த ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் நேற்று பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அரசாங்கத்திற் புறம்பாக பல்கலைக்கழகங்களை நிறுவுவதனை எதிர்ப்பது துயரம் மிகுந்தது என்பதுடன் பாரிய குற்றமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் இவ்வாறான குறுகிய எண்ணங்களுடன் செயற்பட்டால் அது மாணவர் சமூகங்கள் பலவற்றை பாதிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு மாணவர்கள் பாதிக்கப்படுவதனை தாம் அனுமதிக்கப்-போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு துரித கதியில் அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் உயர் கல்வியில் விரிவான மாற்றம் செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால். இவ்வாறு தெரிவித்துள்ள ஜனாதிபதியும் அவரது சகோ-தரர் மகிந்தாவும் அவரது புதல்வர்களும் எத்தனையோ மாணவர்கள் போராட்டங்களை அடக்கியவர்கள் என்பது பழைய வரலாறு.

ஏமாறுகின்றவர்கள் உள்ளவரையில் உலகில் எங்கும் ஏமாற்றுகின்றவர்களும் தங்கள் 'வேலைகளை' தொடர்ந்து செய்தே முடிப்பார்கள்.

# சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இராஜாங்க அமைச்சரை இன்னும் பதவியில் வைத்திருப்பது நாட்டின் நீதித்துறையின் அவலட்சணத்தைக் காட்டுகின்றது

## பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விபரிப்பு



அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மதுபோதையில் சென்று அங்கு பல வருடங்களாக விசாரணைகள் எதுவும் இன்றி வாடும். தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இராஜாங்க அமைச்சரை ஜனாதிபதி இன்னும் பதவியில் வைத்திருப்பது நாட்டின் நீதித்துறையின் அவலட்சணத்தைக் காட்டுகின்றது

இவ்வாறு இலங்கைப் பாராளுமன்றத்தில் விபரித்து தனது கண்டணத்தைத் தெரிவித்தார் பாராளுமன்ற உறுப்பினர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நீதி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு,தொழில்நுட்ப அமைச்சு, அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சு,கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டில் பாரிய குற்றவாளிகள், கொலைகாரர்கள் திருடர்களுக்கு குற்றத்தீர்ப்பு வழங்காது விடுதலை செய்யப்படும் நிலைமையே காணப்படுகின்றது. நாட்டின் நீதித்துறையின் தரம் மற்றும் பெறுமதி எந்தளவில் உள்ளது என்பதற்கு இவை நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது. இலங்கையில் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் பலர் அரச நண்பர்களாக இருக்கின்ற காரணத்தினால் விடுவிக்கப்படுகின்றனர்.

சிறைக்கைதிகள் முழுமையாக அரச கட்டுப்பாட்டில், அரச பாதுகாப்பில் இருப்பவர்கள். அவர்கள் சந்தேக நபர்கள் என்பது வேறு விடயம், ஆனால் அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அவ்வாறான நிலையில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலைக்கு சென்று கைதிகளை அச்சுறுத்தியுள்ளார். அதன் பின்னர் குறித்த இராஜாங்க அமைச்சரின் இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதாக ஜனாதிபதி ஊடக மையம் அறிவித்துள்ளது, எனினும் குறித்த அமைச்சர் இன்றும் இராஜாங்க அமைச்சராக உள்ளதுடன இன்றைய தினம் நீதி அமைச்சின் விவாதத்தில் நீதி அமைச்சருக்கு அருகிலேயே அமர்ந்துள்ளார். இதுதான் இந்த நாட்டில் நீதித்துறையின் நிலைமையாகும்.

பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்றும் நீண்ட காலமாக சிறையில் உள்ளனர். சர்வதேச நியமனங்களுக்கு அமைய ஏனைய நாடுகளில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நபர்கள் எந்த காரணமும் இல்லாவிட்டால் நீண்டகாலம் தடுத்து வைக்கமாட்டார்கள். அரசாங்கத்தின் தனி நிலைப்பாட்டில் இவர்கள் நீண்டகாலம் சிறையில் இருக்கும் அதே வேளையில், குற்றவாளிகள் வெளியில் உள்ளனர். இதுதான் இலங்கையின் சட்டமாக உள்ளது.

அதேபோல் இளம் தவறாளர்களின் புனர்வாழ்வு முகாம்கள் நாட்டில் பத்து இடங்களில் உள்ளன. ஆனால் வடக்கு கிழக்கில் அவ்வாறான முகாம்கள் இல்லை, இதனை நீதி அமைச்சர் கருத்தில் கொள்ள வேண்டும். அதேபோல் நீதிமன்ற கட்டமை பொறுத்தவரை, வடக்கு கிழக்கில் நீதிமன்றங்கள் உள்ளன. அங்கு சிங்கள மொழியில் அவை இயங்கிக்கொண்டுள்ளன, அங்கு சிங்கள மக்களின் இருப்பு காரணமாக சிங்கள நீதிமன்றமாக இயங்கிக்கொண்டுள்ளது. ஆனால் கொழும்பிலோ அல்லது தெற்கிலோ சகல நீதிமன்றங்களும் சிங்களத்தில் இயங்குவது நியாயமில்லை. தமிழர்கள் வாழும் மலையக பகுதிகளில் கூட முழுமையாக சிங்கள மொழியில் நீதி மன்றங்கள் இயங்கிக்கொண்டுள்ளன. ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு. வடக்கு கிழக்கில் மற்றும் தமிழர்கள் வாழும் பகுதிக-ளில் ஏன் தமிழ் மொழியில் இயங்க முடியவில்லை. ஆகவே இதன் பின்னணியில் பாரிய நிகழ்ச்சிநிரல் ஒன்று இயங்கிக்கொண்டுள்ளது. என்றார்.

# நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட கடினயக் குடும்பம் ஒன்றுக்கு . . . ( கடைசிப் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி அறிக்கைகள் தற்போது கனடிய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

மேற்படி அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் 2021ஐ விட 2022ல் உணவுக்காக கிட்டத்தட்ட மாதம் ஆயிரம் டாலர்கள் அதிகமாகச் செலவழிக்கும் என எதிர்பார்க்கலாம்.

காலநிலை மாற்றம் மற்றும் விநியோகச் செயற்பாடுகளின் சீர்குலைவுகளால் உந்தப்பட்டு, 2022 ஆம் ஆண்டில் உணவு விலைகள் இன்னும் வேகமாக உயரும், குறிப்பாக உணவகங்கள் மற்றும் பால் பொருட்களுக்கு இந்த நிலை ஏற்படும். இது தொடர்பாக நோவா ஸ்கோசியா மாகாணத்தில் உள்ள டல்ஹவுசி பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் உணவுப் பகுப்பாய்வு ஆய்வகத்தின் சமீபத்திய உணவு விலை அறிக்கையின்படி. வெள்ளம் முதல் தீ வரை கோவிட்-19 இன் தொடர்ச்சியான விளைவு வரை, "2021 ஒரு பேரழிவு தரும் ஆண்டாகும்" என்று உணவு விநியோகம் மற்றும் கொள்கையில் முதன்மை எழுத்தாளரும் டல்ஹவுசி பேராசிரியருமான சில்வைன் சார்லபோயிஸ் தெரிவித்துள்ளார்.

12வது ஆண்டு அறிக்கை உணவுப் பொருட்களின் விலைகள் ஒட்டுமொத்தமாக ஐந்து முதல் ஏழு சதவீதம் வரை உயரும் என்று கணித்துள்ளது. பால் பொருட்கள் மற்றும் உணவகங்களின் விலைகள், ஆறு முதல் எட்டு சதவி-கிதம் போன்ற சில பிரிவுகள் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்ராரியோவின் குல்ப் பல்கலைக்கழகம், சஸ்காட்செவன் மாகாணப் பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டிஸ் கொலம்பியா பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்பட்ட அறிக்கையின்படி, இறைச்சி மற்றும் கடல் உணவுகள் விலையில் இரண்டு சதவீதம் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஏனைய வகைகளும் இன்னும் நிலையானதாக இருக்கும். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News


# பாகிஸ்தானில் கொல்லப்பட்ட எனது கணவனின் கொலைக்கு நீதி வழங்குங்கள் என்கிறார் பிரியந்த குமாரவின் மனைவி

பாக்கிஸ்தானில் கொல்லப்பட்ட இலங்கை பிரஜையின் மனைவி தனது கணவரின் கொலைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சியால்கோட்டில் கொல்லப்பட்ட இலங்கை பொறியியலாளர் பிரியந்த குமாரவின் மனைவி தனது கணவரின் மரணம் குறித்து பாக்கிஸ்தான் இலங்கை அரசாங்கங்கள் நேர்மையான முறையில் விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.








செய்திகள் மூலமே அவர் கொடூரமான விதத்தில் கொல்லப்பட்டதை நாங்கள் அறிந்தோம் என பிரியந்த குமாரவின் மனைவி தெரிவித்துள்ளார். அதன் பின்னர் நான் இணையத்திலும் பார்த்தேன் அவர் மிகவும் அமைதியான மனிதர் என பிரியந்த குமாரவின் மனைவி தெரிவித்துள்ளார்.



குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதன் மூலம் எனது கணவருக்கும் எனது இரு பிள்ளைகளிற்கும் நீதியை வழங்குமாறு இரு நாடுகளினதும் தலைவர்களை கேட்டுக்கொள்கின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னார் சாந்திபுரம் பகுதியில் கேஸ் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது



மன்னார் சாந்திபுரம் பகுதியில் வீடு ஒன்றில் சனிக்கிழமை (04) இரவு 10 மணி அளவில் கேஸ் அடுப்பு தீப்பற்றி எரிந்தது டன் அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கடந்த வாரம் கொள்முதல் செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர் ஊடாக இரவு நேர சமையல் மேற்கொண்ட நிலையில் திடீரென அடுப்பு முழுவதும் தீ பற்றியதுடன் சிறிது நேரத்தில் அடுப்பு முற்று முழுதாக வெடித்ததாகவும் உடனடியாக சிலிண்டரை அப்புறப்படுத்திய மையால் பாரிய தீ விபத்து ஒன்று தடுக்கப்பட்டதாகவும் உரிய வீட்டார் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் தீப்பற்றிய வீட்டில் சமையல் எரிவாயு சிலிண்டரிலோ, ரெகுலேட்டர்களிலோ, வயர்களிலோ எந்த தீ பரவலும் ஏற்படவில்லை என்பதுடன் அடுப்பு மட்டுமே தீ பற்றி எரிந்தது டன் வெடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



# யாழ்ப்பாணம் சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலைக்கு ரட்ணம் பவுண்டேசன் – பிரித்தானியா, வன்னிஹோப் – அவுஸ்திரேலியா நிறுவனங்களின் அனுசரனையில் கணனிகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட மிகவும் பின்தங்கிய அடிப்படை வசதிகள் குறைவான வறுமை கோட்டிற்குட்பட்ட சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலைக்கு ரட்ணம் பவுண்டேசன் பிரித்தானியா மற்றும் வன்னிஹோப் அவுஸ்திரேலியா ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரனையில் கணனிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்விற்கு வலிகாம் கல்வி வலயத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் ஞானலிங்கம் ஆதவன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு. நாகராஜா அம்பிகைபாகன், வன்னி ஹோப் மற்றும் யு.எஸ்.டி.எப் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் கலந்துக்கொண்டனர்.

இந்த பாடசாலையில் நூற்றுபத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலுவதுடன் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை காணப்படுகின்றது. இந்த பாடசாலையானது கடந்த கால உள்நாட்டு யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மாணவர்களின் பெற்றோர்களில் பெரும்பாலோனோர் விவசாயம் மற்றும் அன்றாட கூலி தொழில் செய்கின்றனர். இந்த பாடசாலை மாணவர்களுக்கு கணனி வசதிகள் கிடைத்தமை இங்குள்ள மாணவர்களது தகவல் தொழிநுட்ப கல்வி வசதிகளை மேம்படுத்த கிடைத்தமை வரபிரசாதமாகும். மேலும் பிரதமவிருந்தினர் தமது உரையில் இப் பாடசாலை முகாமைத்துவத்தின் அர்ப்பணிப்பும் நல்லாளுகையுமே பாரிய சமூக மாற்றத்திற்கு வித்திட்டுள்ளது. பாடசாலைகள் தமது இணைபாட விதானங்களையும் சமூக ஒருங்கினைவுச்செயற்பாடுகளையும் எவ்வாறு திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கு எமது வலயத்திலே சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை முன்னுதாரணமாக திகழ்கின்றது.எந்த வளங்களும் வசதிகளும் அற்ற நிலையில் இருந்த இப்பாடசாலை இன்று சகல வசதிகளும் கொண்ட நகர்ப்புற பாடசாலை போன்று காட்சியளிக்கின்றது.










இப் பாடசாலையின் அதிபர் ஸ்ரீகமலநாதன் பல தனிநபர்களிடமிருந்தும் ,தேசிய சர்வதேச அமைப்புக்களிடமிருந்தும் இந்த உதவிகளைப் பெற்று வளம் கொலிக்கும் பாடசாலையாக மாற்றியுள்ளார். கடந்த ஆண்டிலே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100ூசித்தி பெற்றமை போன்று 2021இலும் 100ூசித்தியுடன் சிறப்புற மிளிர வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# எரிவாயு சிலிண்டர் களஞ்சியத்தை அகற்றக் கோரி யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

எரிவாயு சிலிண்டர் களஞ்சியத்தை அகற்றக்கோரி யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான விநியோக களஞ்சியத்திற்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் கொட்டடி வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள களஞ்சியம் முன்பாகவே செவ்வாய்கிழமை (7) இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில்





“மக்களின் உயிரா பண பலமா, அச்சமற்ற வாழ்விடம் வேண்டும், உயிர் அச்சுறுத்தலான எரிவாயு களஞ்சியத்தை உடனே அகற்று, தரமற்ற எரிவாயுக் கசிவுக்கு யார் பொறுப்பு” போன்ற வாசகங்களை எழுப்பியிருந்தனர்.

இந்தியா செய்திகள் India News

# நின்று போன இதயத்துடிப்பை செயல்பட வைத்த தமிழகத்தின் தாதி வனஜா.. உயிர் பிழைத்த மாணவன்



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே சாலை விபத்தில் காயமடைந்த கல்லூரி மாணவன் வசந்த்தை அவ்வழியாக சென்ற அரசு மருத்துவமனை தாதியான வனஜா, உடனடியாக CPR சிகிச்சை செய்து இதய துடிப்பை மீட்டு உயிரை காப்பாற்றினார். செவிலியர் வனஜாவின் செயலை பொதுமக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர். கடவுள் மனித ரூபத்தில் அவ்வப்போது வருவது உண்டு. தேவதை ரூபத்தில் வந்து பலரை காப்பாற்றிய கதைகளை நாம் படித்திருப்போம். வெள்ளை உடை அணிந்து வந்த தேவதையின் வெள்ளை உள்ள கதையை, உண்மை சம்பவத்தை இப்போது பார்ப்போம். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியாற்றி வருபவர் வனஜா. இவர் மன்னார்குடி அடுத்த கோட்டூர்தோட்டத்தை சேர்ந்தவர் ஆவார். செவிலியர் வனஜா நேற்று மதுக்கூர் அருகே உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றார்.

பின்னர் தனது குடும்பத்தினருடன் காரில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அவரது கார் மன்னார்குடி அருகே 6-நம்பர் வாய்க்கால் பகுதியில் வந்து கொண்டிருந்தது. இவரது காருக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் மாணவர் வசந்த் சென்று கொண்டிருந்தார். அப்போது மாணவர் வசந்த் சென்ற இருசக்கர வாகனத்தின் குறுக்கே ஆடு ஒன்று வந்ததால் ஆட்டின் மீது இருசக்கர வாகனம் மோதி கீழே விழுந்ததில் வசந்த் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடினார். இதை பார்த்த செவிலியர் வனஜா உடனடியாக காரை நிறுத்தி அருகில் சென்று சற்றும் தாமதிக்காமல் வசந்த்தாவின் உடல் நிலையை பரிசோதனை செய்தார்.

அப்போது அவர் நாடித் துடிப்பு நின்று ஆபத்தான நிலையில் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக செவிலியர் வனஜா சி.பி.ஆர் என சொல்லப்படக்கூடிய இதயத்துடிப்பை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டுவரும் மார்பின் மீது அழுத்தி முதலுதவி சிகிச்சை செய்தார். இதனால் மீண்டும் அந்த இளைஞரின் இதயத்துடிப்பு பழைய நிலைமைக்கு திரும்பி நாடித்துடிப்பும் சீரானது. இளைஞருக்கும் சுயநினைவு திரும்பியது. இதனிடையே தாதியான வனஜாவின் கணவர் ஆனந்தன் 108 ஆம்புலன்ஸக்கு தகவல் தெரிவித்தார். ஆம்புலன்சும் வந்து சேர்ந்தது. உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் வசந்த் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் கல்லூரி மாணவர் வசந்த் மேல் சிசிக்சைக்காக தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வசந்த் ஆபத்து நிலையிலிருந்து மீண்டது குறித்து அறிந்த பின்னரே செவிலியர் வனஜா மருத்துவமனையில் இருந்து வீட்டிற்க்கு கிளம்பி சென்றிருக்கிறார். விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் இருந்த இளைஞருக்கு சரியான நேரத்தில் முதலுதவி சிகிச்சை அளித்து உயிரை காப்பாற்றிய மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தாதியான வனஜாவின் செயலை பொதுமக்கள் பெரிதும் பாராட்டி வருகிறார்கள். காயம் அடைந்த மாணவர் வசந்த் மன்னார்குடி அடுத்த கருவாகுறிச்சியை சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவரின் மகன் என்பதும், அவர் மல்லிப்பட்டிணம அடுத்த மனோராவில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரியில் 3-ம் ஆண்டு படித்து வருவதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், காவல்துறையினர் தாதியான வனஜாவின் செயலை வெகுவாக பாராட்டி வருகிறார்கள்.

# நாசா விண்வெளிப் பயணத் திட்டத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனில் மேனன் தேர்வு



நாசாவின் விண்வெளிப் பயணத் திட்டத்துக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள பத்து பேரில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனில் மேனன் இடம் பெற்றுள்ளார். நிலவு, செவ்வாய் கிரகம், சர்வதேச விண்வெளி நிலையம் ஆகியவற்றுக்கு மனிதர்களை அனுப்பி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா திட்டமிட்டுள்ளது. இதற்காக விண்வெளி வீரர்களை தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வந்தன. இந்தப் பணிகளுக்காக 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களிலிருந்து 4 பெண்கள் உள்ளிட்ட பத்து பேர் தேர்வாகியுள்ளனர். இந்த பத்து பேரில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 45 வயதான அனில் மேனனும் ஒருவர். இவர், அமெரிக்க விமானப்படையில் லெப்டினன்ட் கர்னலாக பணியாற்றி வருகிறார். ஹவார்வர்டு பல்கலைக்கழகத்தில் நியூரோபயாலஜியில் இளங்கலைப் பட்டமும், ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியல் முதுகலைப் பட்டமும் பெற்றவர் அனில் மேனன். நாசாவின் முந்தைய விண்வெளி ஆய்வுகளிலும் பணியாற்றிய அனுபவம் பெற்றுள்ளார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private 1st Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

# பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்கப்படும் என பாகிஸ்தான் அரசு அறிவிப்பு

உலக செய்திகள் World News



பாகிஸ்தானில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட இலங்கையரின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்கப்படும் என பாகிஸ்த்தான் அரசாங்கம் அறிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளனன.

பாகிஸ்தான் தகவல் தொடர்புகள் அமைச்சரும், அரசாங்க ஊடகப் பேச்சாளருமான பவாத் சௌத்திரி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கையிலிருந்து வெளிவரும் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டியில் பாகிஸ்த்தான் பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நட்டஈட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளை பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் சியால்கோட்டில் உள்ள வசிராபாத் வீதியில் அமைந்துள்ள, தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளர் பதவியில் இருந்த இந்த இலங்கையரான பிரியந்த குமாரை அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர், ஏனைய ஊழியர்களினால் சித்திரவதைக்கு உள்ளாகி எரியூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட நபர் பிரியந்த குமார என்ற இலங்கையைச் சேர்ந்தவர் என்றும் சியால்கோட் மாவட்ட காவல்துறை அதிகாரி உமர் சயீத் மாலிக் உறுதிபடுத்தியுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு பாகிஸ்த்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் தலைவர்களும் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள நிலையில், இந்த கொலைச் சம்பவத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொர்புபட்ட 100க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க.பாகிஸ்தான் - சியல்கொட் தொழிற்சாலையில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் கொலைக்கான காரணத்தை உறவினர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

தொழிற்சாலையில் இனவாத குழுவொன்றினால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டதாக கொலை செய்யப்பட்டவரின் சகோதரனான கமலசிறி ஷாந்தகுமார தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுவடைந்த நிலையிலேயே தனது சகோதரன் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனது கணவரின் கொலைக்கான நியாயத்தை பெற்றுத்தருமாறு அவரது மனைவி நிரோஷி தசநாயக்க கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.



சம்பவத்தில் உயிரிழந்தவர் மிகவும் ஒழுக்கமானவர் எனவும், கடின உழைப்பாளி என அவருடன் நெருக்கமான நட்பைக் கொண்டிருந்தவர்கள் பலர் இலங்கையிலும் பாகிஸ்த்தானிலும் தெரிவித்துள்ளனர்.

# 6 லட்சம் ஏ.கே. 203 ரக துப்பாக்கிகள் வாங்கி குவிக்கிறது இந்தியா

## இந்தியா-ரஷ்யா இடையே ரூ.5,200 கோடிக்கு ஒப்பந்தம்





பிரதமர் மோடி - ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பங்கேற்கும் இரு நாடுகள் இடையேயான 21ஆவது உச்சி மாநாடு டெல்லியில் நடைபெறுகிறது. இதனையொட்டி, இரு நாடுகள் இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி மற்றும் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக இரு நாடுகளின் பாதுகாப்புத்துறை மற்றும் வெளியுறவுத்துறைகளுக்கு இடையேயான 2+2 பேச்சுவார்த்தை நடைபெற்றது. ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கேய் லால்ரோவ், பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கேய் ஷொய்கு உடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்த பேச்சு வார்த்தையின்போது இந்தியா - ரஷ்யா இடையே ரூ.5,200 கோடிக்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. ராணுவம், சரக்கு போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

மேலும், ரஷ்யா நாட்டின் தயாரிப்பான நவீன ரக ஏ.கே.203 தானியங்கி துப்பாக்கிகளை இந்திய ராணுவத்துக்கு வாங்க ஒப்பந்தமிடப்பட்டது. 6 லட்சத்து ஆயிரத்து 427 ஏ.கே. 203 ரக துப்பாக்கிகளை இந்தியா வாங்குகிறது. 2031 வரை 10 ஆண்டுகளுக்கு ரஷ்யாவிடம் இருந்து ஏ.கே.203 ரக துப்பாக்கிகளை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் அமேதியில் உள்ள தொழிற்சாலையில் துப்பாக்கிகள் தயாரிக்கப்பட உள்ளன.

இதோடுமட்டுமல்லாமல், இந்த பேச்சுவார்த்தையின்போது ஆப்கானிஸ்தான் விவகாரம், தீவிரவாத அச்சுறுத்தலுக்கான வாய்ப்பு ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இன்று பிற்பகலில் டெல்லி வருகிறார். அவர் ஐதராபாத் இல்லத்தில் தங்குகிறார். அவரை பிரதமர் மோடி வரவேற்கிறார். பிரதமர் மோடி - ரஷ்ய அதிபர் புதின் இடையேயான உச்சி மாநாடு இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது. இந்த சந்திப்பின்போது இரு நாடுகள் இடையேயான நல்லுறவுகள் குறித்தும், திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்படும். பிரதமர் மோடியுடன் சந்திப்புக்கு பிறகு இரவு 9.30 மணிக்கு புதின் டெல்லியில் இருந்து ரஷ்யா புறப்பட்டு செல்கிறார்.

# அக்கினிக்குஞ்சு இணைய இதழ் ஆசிரியர் யாழ். பாஸ்கர் அவுஸ்த்திரேலியாவில் மல்லிகை ஜீவா நினைவு விருது பெறுகிறார்






மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டு காலத்தில், இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக்ஜீவா அவர்களினால் இலக்கிய உலகிற்கு 1970 களில் அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்தாளர் முருகபூபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை) நடந்தாய் வாழி களனி கங்கை (கட்டுரை) பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்) நூல்களின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 19 ஆம் திதி (19-12-2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு அவுஸ்திரேலியா மெல்பனில் Berwick senior citizens hall (112 High Street, Berwick VIC 3806) மண்டபத்தில் நடைபெறும்.

மெல்பன் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தி சிவக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு, திருமதி மேகானந்தா சிவராசாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெருந்தொற்றினால் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக்ஜீவாவின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, அவரைப்பற்றிய நினைவுரை நிகழ்த்தப்படும்.

இந்த அரங்கில் எழுத்தாளரும் நாடகக் கலைஞரும் நீண்ட காலமாக அவுஸ்திரேலியாவிலிருந்து அக்கினிக்குஞ்சு இதழை முதலில் அச்சு வடிவிலும், பின்னர் இணைய இதழாகவும் வடிவமைத்து வெளியிட்டுவரும் யாழ். பாஸ்கருக்கு மல்லிகை ஜீவா நினைவு விருது வழங்கப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்படுவார்.

அவுஸ்திரேலியாவில் கலை, இலக்கிய, சமூகச் செய்திகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் அக்கினிக்குஞ்சு இணைய இதழ், இங்கிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் தொடர்ச்சியாக எழுதிவரும் படைப்பாளிகளுக்கு போதிய களம் வழங்கி வருகிறது. அத்துடன் புதிய தலைமுறை படைப்பாளிகளின் ஆக்கங்களையும் வெளியிட்டு ஊக்கமளித்து வருகிறது. இதற்கெல்லாம் பின்னணியிலிருந்து அயராமல் உழைத்துவரும் அக்கினிக்குஞ்சு ஆசிரியர் திரு. யாழ். பாஸ்கரின் கடின உழைப்பினை பாராட்டி, ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு தனது வாழ்நாள் முழுவதும் உழைத்த கர்மயோகி (அமரர்) மல்லிகை ஜீவா அவர்களின் நினைவாக பாராட்டு விருது வழங்கப்படவிருக்கிறது.

சினிமா

# இந்த வயதில் எவ்வகையான பாத்திரங்களில் நடிப்பது என்பது குறித்த தடுமாற்றத்தில் உள்ள நடிகர் ரஜினி



ஒரு காலத்தில் ஒரு வருடத்திற்கு 20 படம் நடித்து 20 படமும் சூப்பர் ஹிட் படங்களாக கொடுத்து வந்த சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கடந்த சில மாதங்களாக ஒரு கதையை தேர்ந்தெடுக்க தடுமாறி வருகிறார் என்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்த வயதில் தனக்கு எந்த மாதிரி கதாபாத்திரங்கள் ஏற்று நடிக்க வேண்டும் என்ற தெளிவே இல்லாமல் இருக்கிறாராம் நடிகர் ரஜினிகாந்த்.

அண்ணாத்த படத்தை ஆகா ஓகோ என ரஜினி ரசிகர்கள் கொண்டாடினாலும் அனைத்து தரப்பு ரசிகர்களையும் அந்த படம் திருப்தி செய்ததா என்று சொன்னால் சந்தேகம்தான். அதேபோல் கடந்த சில வருடங்களாகவே ரஜினியின் படங்கள் முன்னர் போல் இல்லை என்பது ரசிகர்களின் கருத்தாக உள்ளது. அண்ணாத்த படத்திற்கு பிறகு திடீரென உடல்நிலை சரியில்லாமல் போன ரஜினிகாந்த் இனி சினிமாவில் நடிக்க மாட்டார் என பேச்சுக்கள் எழுந்த நிலையில் தற்போது கிட்டத்தட்ட ஆறு இயக்குனர்களிடம் கதை கேட்டு வைத்துள்ளாராம். அடுத்த படத்தை எவ்வளவு வேகமாக முடிக்க முடியுமோ அவ்வளவு வேகமாக முடித்து விட வேண்டும் என்ற ஒரு கண்டி'னும் இதில் உள்ளது.

மேலும் தனக்கு தெரிந்த சில இளம் இயக்குனர்களை அழைத்து கதை கேட்ட நடிகர் ரஜினிகாந்துக்கு எதிலும் திருப்தி ஏற்படவில்லை. இதனால் கிட்டத்தட்ட ஏழு வருடங்கள் கழித்து தன்னுடைய ஆஸ்தான சூப்பர் ஹிட் இயக்குனரான கேஎஸ் ரவிக்குமார் உடன் இணைந்து ஒரு படம் செய்வதில் ஆர்வமாக இருக்கிறாராம் ரஜினி. தனக்கு எந்த மாதிரி கதை எழுதி ரசிகர்களிடம் அதைக் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்பது அவருக்கு நன்றாக தெரியும் எனவும் தன்னுடைய வட்டாரங்களில் தெரிவித்து வருகிறாராம். இதனால் அனேகமாக ரஜினியின் அடுத்த படம் கே எஸ் ரவிக்குமார் உடன் தான் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை இந்தப் படம் கைவிடப்பட்ட படமாக இருக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால் விரைவில் இந்த படத்தை முடிக்க வேண்டும் என்பதால் கண்டிப்பாக அது ஒரு புதிய கதையாகத்தான் இருக்கும் எனவும் கே எஸ் ரவிக்குமாரின் பழைய கமர்சியல் ஹிட் பட வரிசையில் இந்த படமும் இணையும் எனவும் எதிர்பார்க்கிறார்கள்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் வைத்தியசாலையின் தேவைக்காக 15,600 கனடிய டாலர்களைச் சேகரித்து வழங்கிய Senior Tamils Society of Peel மற்றும் Mississauga Tamils Association

கனடாவில் மிசிசாகா மாநகருக்கு உட்பட்ட பிரதேசத்தில் இயங்கிவரும் பீல் பிராந்திய தமிழ் முதியோர் சங்கம் மற்றும் மிசிசாகா தமிழ்ச் சங்கம் (Senior Tamils Society of Peel மற்றும் Mississauga Tamils Association) ஆகியன இணைந்து அண்மையில் நடத்திய நடைபவனியின் மூலம். 15.600 கனடிய டாலர்களை சேகரித்து மிசிசாகா Trillium Health Partner வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளன. இந்த இரண்டு தமிழர் அமைப்புகளுக்கும் கனடா உதயன் மற்றும் நண்பன் ஊடக நிறுவனங்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றன.

----



Senior Tamils Society of Peel (STSP) and Mississauga Tamils Association (MTA) together organized Annual Walk-A-Thon 2021 on October 24, 2021 and raised over $15,600.00. The cheque was handed over to Trillium Health Partner representative Deloan D'sa, Senior Development Officer, Philanthropy, on December 7, 2021 following brief ceremony at Mississauga Valley Community Centre with seniors. STSP have reached the target of $50,000 donation to THP since 2018. As such a room at Credit Valley Hospital is to be named on behalf of Senior Tamils Society of Peel.

This is the 19th Walk A Thon and so far, STSP has donated more than $165,000.00. Although it is a drop in the need of Trillium hospitals, it is a token of gesture from the Canadian Tamil Communities expressing their gratuity to the hospitals and the health workers.



STSP is an incorporated not for profit organization serving seniors in the Peel Region since the year 2000. It has over 600 active seniors as members. STSP acknowledge the support from all three level of governments to continue and sustain the service to seniors in the Peel Region.

Nadarajah Moorthy
Secretary
Senior Tamils Society of Peel





TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


## JOB POSTING - Project Coordinator
## Date: December 10, 2021

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors and others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active and healthy lifestyle by organizing weekly activities and health seminars.
The project coordinator will report to the STSP President/Secretary and will work on.
Preparing proposals in consultation with STSP President and secretary, to obtain funds from various funding organization for society activities.
Ensuring all proposals for funding are submitted within the timeline specified.
Ensuring the funds received for each project are spent to activities specified in the submitted proposals and within the approved amount.
Maintaining all documentations required for each project and communicating actions and issues to the board members.
Working with the STSP treasurer in maintaining all financial transactions and creating monthly financial report for all current projects.
Maintaining and updating the STSP web page periodically and also helping seniors to solve basic computer issues.
Supporting in organization of daily activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:

Diploma in Accounting with three years of work experience in a computerized accounting environment or six years of work experience in a computerized accounting field.
Basic computer skills with proficiency in Word, Excel and Power point.
Experience on designing, updating troubleshooting websites.
Effective interpersonal, communication and organizational skills
Working knowledge of community resources, services for seniors in Peel and relevant government programs and policies
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

Salary and benefits: Negotiable and according to the experience
Duration of engagement: Minimum of one year on part time basis with possible extension. Minimum 20 hours per week working hours required.

Deadline for application: December 30, 2021
Please forward your application with your updated resume by email to
info@peeltamilseniors.ca

Nadarajah Moorthy
Secretary
Cell: 416 473 5380, nmoorthy10@gmail.com

# ரொறன்ரோ பிராந்திய பொலிஸ் அதிகாரி செலுத்திய உத்தியோகபூர்வ வாகனம்...

(கடைசிப் பக்கத் தொடர்ச்சி)

இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை அவென்யூ வீதி மற்றும் செயின்ட் கிளேயர் வீதி மேற்கு சந்திப்பில் சுமார் இரவு 9 மணியளவில் இந்த சம்பவம் நிகழ்ந்ததாக மாகாண காவல்துறை கண்காணிப்பு குழு வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒன்றாறியோவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையின் படி, போலீஸ் வாகனம் முதலில் 84 வயதான ஆண் ஓட்டுநர் மற்றும் 79 வயது பெண் பயணியுடன் ஒரு வாகனத்தை மோதியது. இருவரும் பலத்த காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அதன்பின்னர் அந்த போலீஸ் வாகனம் மேலும் இரண்டு வாகனங்கள் மீது மோதியது. அந்த வாகனத்தில் இருந்தவர்களுக்கு அதிஸ்டவசமாக காயம் எதுவும் ஏற்படவில்லை.

பொலிஸ் அதிகாரி ஓட்டிச் சென்ற வாகனத்தில் பயணித்த மற்றுமொரு அதிகாரியும் இருவரும் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கை விசாரிப்பதற்காக ஐந்து புலனாய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஒன்றாறியோவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது. சம்பவத்தை நேரில் கண்டவர்கள் 1-800-787-8529 என்ற எண்ணில் புலனாய்வாளர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# இந்திய முப்படைகளின் தளபதி பிபின் ராவத்... உட்பட 13 பேர் உடல்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி



இந்நிலையில் பிபின் ராவத் உள்பட 13 பேரின் உடல்களும் தமிழ்நாட்டின் குன்னூரிலிருந்து வீதி மார்க்கமாக கோவை மாவட்டம் சூலூர் விமானப் படை தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. பின்னர் ராணுவ விமானத்தில் 13 பேரின் உடல்களும் டெல்லிக்கு நேற்று இரவு 7.35 மணியளவில் கொண்டு செல்லப்பட்டன. தலைநகர் டெல்லியில் விமான நிலையம் அருகே பொதுமக்களின் அஞ்சலிக்காக 13 பேரின் உடல்கள் வைக்கப்பட்டன. விமானம் நிலையப் பகுதிக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி பிபின் ராவத் உள்பட 13 பேரின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் பிபின் ராவத்தின் புதல்விகளுக்கும் மற்ற ராணுவ அதிகாரிகளின் உறவினர்களுக்கும் பிரதமர் மோடி ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து டெல்லியில் உள்ள பிபின் ராவத்தின் இல்லத்தில், இன்று காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பொதுமக்கள் அஞ்சலிக்காக பிபின் ராவத் உடல் வைக்கப்பட உள்ளது. பின்னர் பகல் 12:30 மணியில் இருந்து 1:30 மணி



வரை ராணுவத்தினர் அஞ்சலி செலுத்துவார்கள் பின்னர் பிபின் ராவத் அவரது மனைவி இருவர் உடல்களும் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு டெல்லி கன்டோன்மென்டில் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட உள்ளது பின்னர் டெல்லியில் முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதி சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாக் கவிஞர் கழகத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் குரு அரவிந்தன் நடத்திய "சிறுகதை எழுதுவது எப்படி?" — பயிற்சிப்பட்டறை

-பவானி தர்மகுலசிங்கம்



எமது கனடாக் கவிஞர் கழகமானது ஒவ்வொரு மாதத்தின் கடைசிக் கிழமையிலும் தமிழறிஞர்கள், படைப்பாளிகள் மற்றும் கலைஞர்களை அழைத்து மெய்நிகர் வழியாகச் சிறப்புரைகளையும், கலந்துரையாடல்களையும் நடத்தி வருகின்றது.

அதன்படி, சென்ற செப்ரெம்பர் மாதம் இருபத்தைந்தாம் திகதி சனிக்கிழமை எமது கழகத்தின் இணைய வழிக் கலந்துரையாடல் காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரபல எழுத்தாளரும், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவருமான குரு அரவிந்தன் அவர்களின் "சிறுகதை எழுதுவது எப்படி?" என்ற பயிற்சிப்பட்டறை இடம் பெற்றது. முதலில் கழகத்தின் தலைவர் திரு. கந்த ஸ்ரீ பஞ்சநாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து பொருளாளர் திரு. குமரகுரு. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுத்தாளர் குரு அரவிந்தனை அறிமுகம் செய்து வைத்தார்.

அடுத்து, "கவிஞர்களும் எழுத்தாளராகலாம்" என்ற தலைப்பில் குரு அரவிந்தன் "சிறுகதை எழுவது எப்படி? ஏன் அதிக மக்களால் அவை விரும்பி வாசிக்கப்படுகின்றன?" என்பவற்றுக்கான விளக்கங்களை அளித்தார். சிறுகதையின் தொடக்கம், அதன் வளர்ச்சி, இன்றைய நவீன சிறுகதைகள் பற்றிய உதாரணங்களையும் இலகு நடையில் எடுத்துச் சொன்னார்.

மேலும் அவர் தனது உரையில் சிறுகதைகள் எவ்வாறு எழுதப்படவேண்டும் எனவும், அவை எவ்வாறு வாசகர் உள்ளங்களைச் சென்றடையும் என்னும் பொருளிலும் பின்வரும் வழி முறைகளைக் கூறினார்.

அழகான தலைப்புடன் கதை புனையப்பட்டால் அது வாசகர்களை உடனே கவர்வதோடு, மேலும் அதற்கேற்றவாறு ஓவியம் அல்லது படம் இணைக்கப்பட்டால் இன்னும் நன்றாக அமையுமென்றும், படைப்பில் இலகு நடையும் உண்மைத் தன்மையும் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். பொதுவாக ஐந்து அல்லது ஆறு பக்கங்களில் சிறுகதை அமைவது நல்லது என்றும், சிலவற்றை ஒரு பக்கத்திலும் முடிக்கலாம் என்றும், கற்பனைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதேவேளை உண்மையான சம்பவமாக இருக்குமிடத்து, கதாபாத்திரங்கள் - இடங்களின் பெயர்கள் மாற்றப்படுதல், வாசகர்கள் நம்பும்படியாக சூழ்நிலைகள் அமைதல், கருப்பொருளோடு கதையானது ஒத்துப் போதல், அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற ஆவலை வாசகரிடத்தில் தூண்டுதல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறியதுடன், மேலும் பல விதி முறைகளையும் மொழிந்தார். எழுத்துநடை மிகவும் முக்கியம் என்றும், வாசகர்களுக்காகவே கதைகள் எழுதப்படுவதால், அவர்களுக்கு அவை பிடித்திருந்தால் அவர்கள் படைப்பாளிகளின் வாசகர்களாகி விடுவார்கள் என்றும் கூறினார்.

மேலும் அவர் தனது உரையின்போது, முந்திய காலங்களில் படைப்புக்கள் ஏடுகளிலும், தாள்களிலும் கையால் எழுதியே அச்சகத்துக்கு அனுப்பப்பட்டு வந்தன என்றும், இன்று இந்த முறைகள் நீங்கித் தற்போது தொழில்நுட்ப வசதிகள் மேம்பட்டிருப்பதால், படைப்புக்களின் தொகை அதிகரித்ததோடு வாசகர்களின் எண்ணிக்கையும் மேலோங்கியுள்ளது என்றும் நவின்றார்.

தனது படைப்புக்களான ஈழ யுத்தம், முதல் காதல் கதைகள் வரை வெளிவந்த நூல்களைக் குறிப்பிட்டார். அவரது வெளியீடுகளான "என் காதலி ஒரு கண்ணகி", சதிவிரதன், தங்கையின் அழகிய சிநேகிதி, நீர் மூழ்கி நீரில் மூழ்கி, அம்மாவின் பிள்ளைகள், எங்கே அந்த வெண்ணிலா?, உறங்குமோ காதல் நெஞ்சம்?, உன்னருகே நான் இருந்தால் போன்ற சில சிறுகதைத் தொகுப்புக்கள், மற்றும் நாவல்களின் பாத்திரங்கள் பற்றியும் குறிப்பிட்டார். இவரது "சொல்லடி உன் மனம் கல்லோடி" என்ற நாவல் "சிவரஞ்சனி" என்ற பெயரில் திரைப் படமாக்கப்பட்டதையும் குறிப்பிட்டார். அவற்றுக்குக் கிடைத்த விருதுகள், பரிசில்கள், அவை வெளி வந்த இதழ்கள், ஏடுகளின் விபரங்களையும் எடுத்துச் சொன்னதோடு, நாமும் இவ்வாறு ஆக்கங்கள் புனைய வேண்டுமென்றும், கவிஞர்களான எமக்கு இது விடயம் மிகவும் இலகுவானது என்பதோடு, சில வரிப் பாடல்களையும் இவற்றில் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்குமென்றும், தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தவர்களுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது. அவர்கள் கேட்ட வினாக்களுக்குக் குரு அரவிந்தன் மிகத் தெளிவாகப் பதில்கள் வழங்கினார். ஆர்வம் உள்ளவர்கள் சிறுகதைகளை எழுதிச் செயலாளரிடம் கொடுத்தால், கனடாக் கவிஞர்கள் எழுதிய முதல் சிறுகதைத் தொகுப்பாக அதை வெளியிடமுடியும் எனவும் குறிப்பிட்டார். தமிழர்கள் ஆவணப்படுத்துவதில் எப்பொழுதும் பின்தங்கியே நிற்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, இது போன்ற ஆவணங்களை ஒன்றுபட்டுக் கூட்டாக வெளியிடுவதானது, புலம் பெயர்ந்த இந்த மண்ணில் எமது இருப்பை அடுத்த தலைமுறைக்குத் தெரியப்படுத்தப் பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் கருத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து கழகத்தின் செயலாளர் திருமதி பவானி தர்மகுலசிங்கம் அவர்களின் நன்றி உரையுடன் இணைய வழிக் கலந்துரையாடல் இனிதே முடிவுற்றது.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# கூட்டமைப்பு புதுடில்லிக்கு போகுமா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

அமெரிக்காவும் கூட்டமைப்பை அழைத்தது. இந்தியாவும் கூட்டமைப்பை அழைத்திருக்கிறது. இந்த இரண்டு அமைப்புகளிலும் வித்தியாசங்கள் உண்டு. இந்த இரண்டு அழைப்புகள் தொடர்பான செய்திகள் மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் வெளிவந்திருக்கின்றன. இந்த இரண்டு அழைப்புகளையும் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

ஒரு பிராந்திய பேரரசும் உலக பேரரசும் தமிழ் தரப்பு பிரதிநிதிகள் அழைக்கின்றன என்று சொன்னால் இரண்டு பேரரசுகளுக்கும் தமிழ் மக்களை ஏதோ ஒரு விதத்தில் எதற்காகவோ கையாள வேண்டிய ஒரு தேவை வந்து விட்டது என்று பொருள். அதேசமயம் இந்தியாவின் அழைப்பு எப்பொழுது வந்திருக்கிறது என்ற காலகட்டத்தையும் இங்கு பார்க்க வேண்டும்.

அமெரிக்காவுக்குப் போன சுமந்திரன் திரும்பி வந்த கையோடு இந்த அழைப்பு வந்திருக்கிறது. அதோடு டெலோ இயக்கம் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து முன்னெடுத்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் தேங்கிப் போயிருக்கும் ஒரு காலகட்டத்தில் இந்த அழைப்பு வந்திருக்கிறது. மூன்றாவதாக பசில் ராஜபக்ச இந்தியாவுக்கு சென்று திரும்பியிருக்கும் ஒரு காலகட்டம் இது.

பசில் ராஜபக்சவின் இந்திய விஜயம் உதவி பெறும் நோக்கிலானது என்று வெளியில் காட்டப்பட்டது. அவருக்கு அங்கே உதவிகள் கிடைத்திருக்கின்றன. தவிர உலக வங்கி அனைத்துலக நாணய நிதியம் போன்றவற்றிடமும் உதவி பெறுமாறு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. இவை தவிர இலங்கை அரசாங்கம் இந்தியாவோடு ஏற்றுக்கொண்ட உடன்படிக்கைகள் சிலவற்றை இதுவரையிலும் நிறைவேற்றவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் விட முக்கியமாக பசில் ராஜபக்சவை பிரதமர் மோடி சந்திக்கவில்லை. ஒரு சிறிய நாட்டின் அமைச்சரை ஒரு பேரரசின் பிரதமர் கட்டாயம் சந்திப்பார் என்றில்லை. ஆனால் பசில் ராஜபக்ச யார் என்றால் சாதாரண அமைச்சர் மட்டுமல்ல. கோத்தாபய அரசாங்கத்தின் மாற்றத்தின் முகம் அவர். அவர் பிரதமர் மோடியை சந்திக்க கேட்டு அது நிராகரிக்கப்பட்டதா? அல்லது அவ்வாறு சந்திக்கும் நிகழ்ச்சி நிரல் எதுவும் அவருடைய விஜயத்தில் உள்ளடக்கப்படவில்லையா? என்பதையும் பார்க்கவேண்டும்.

ஆனால் இங்கு முக்கியம் என்னவென்றால் பசிலை சந்திக்காத பிரதமர் மோடி கூட்டமைப்பை சந்திக்க கேட்டிருக்கிறார் என்பதுதான். கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாக இவ்வாறான சந்திப்பு எதிர்பார்க்கப்பட்டது. இந்த வாரம்தான் புதுடில்லி அதற்குரிய அழைப்பை விடுத்திருக்கிறது.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதைப் போல இந்தியாவின் அழைப்பும் அமெரிக்காவின் அழைப்பும் ஒன்றல்ல. ஏனெனில் அமெரிக்காவின் அழைப்பு முழுத் தமிழ் பிரதிநிதித்துவத்தையும் வருமாறு கேட்டதாக தெரியவில்லை. அப்படி கேட்டிருந்தால் தமிழ்தேசிய பரப்பில் உள்ள ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஒரு குழுதான் போயிருக்கும். அதே சமயம் அது கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ தூதுக்குழு அல்ல. ஏனென்றால் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் இணைக்கப்படவில்லை. அதுபோலவே அது தமிழரசுக்கட்சியின் குழுவும் அல்ல. என்றால் தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு அந்த பயணம் பற்றி அதிகம் தெரியாது. எனவே அமெரிக்கா எப்படிப்பட்ட ஒரு குழு தன்னிடம் வர வேண்டும் என்பது குறித்து தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கவில்லை.

ஆனால் புதுடில்லியின் அழைப்பு அத்தகையது அல்ல. அது தெளிவாக கூட்டமைப்புத் தலைவர்கள் என்று கேட்டிருக்கிறது. எனவே பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஒரு குழுவை டெல்லிக்கு அனுப்பவேண்டும் என்ற தெளிவான ஓர் அழைப்பு அது.

இந்த அழைப்புக்கூட தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகளையும் நோக்கி வைக்கப்பட்ட அழைப்பாக தெரியவில்லை. கூட்டமைப்பை நோக்கித்தான் அழைப்பு வந்திருக்கிறது. எனவே கூட்டமைப்போடு எதையோ உரையாட இந்தியா விரும்புகிறது என்று பொருள்.

ஏற்கனவே டெலோ தொடங்கிய முன்முயற்சிகள் தேங்கி நிற்பதற்கு காரணம் சம்பந்தரும் சுமந்திரனும்தான். அந்த முயற்சிகளில் இணைவதற்கு இருவரும் தயாரில்லை. தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரும் தயாரில்லை. 13ஆவது திருத்தத்தை இந்தியாவிடம் கேட்க வேண்டாம் என்பது அவர்களுடைய நிலைப்பாடு போல தெரிகிறது. 13 ஐத்தாண்டிய ஒரு தீர்வை அவர்கள் எதிர்பார்ப்பதாக தெரிகிறது. அதனால்தான் டெலோவின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் இணைய முடியாது என்ற ஒரு கருத்து தமிழரசுக் கட்சிக்குள் நிலவுகிறது. ஆனால் அது மட்டும் ஒரு காரணம் அல்ல. சிறிய பங்காளிக் கட்சியின் பின்செல்ல தமிழரசுக் கட்சி தயார் இல்லை என்பதும் ஒரு காரணம்தான். அதோடு மேற்கு நாடுகளை நோக்கி சென்றால் தீர்வின் பருமன் அதிகரிக்கும் என்று தமிழரசுக்கட்சி நம்புகிறதோ தெரியவில்லை. இவை தவிர மற்றொரு காரணமும் உண்டு. இந்தியாவை நோக்கிச் சென்றால் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதிகள் கோவப்படுவார்கள், பயப்படுவார்கள் என்று சம்பந்தர் கருதுகிறாரோ தெரியவில்லை. அதாவது சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தை கோபப்படுத்தாமல், பயமுறுத்தாமல் ஒரு தீர்வைப் பெற வேண்டும் என்று அவர் நம்புகிறார் போலும். இது காரணமாகவே டெலோ இயக்கம் தமது முயற்சிகளுக்கு தலைமை தாங்குமாறு சம்பந்தரைக் கேட்டபோது சம்பந்தர் தொடர்ச்சியாக அந்த அழைப்பை உதாசீனம் செய்கிறார்.

ஆனால் இதில் 13வது திருத்தம்தான் பிரச்சினை என்றால் அல்லது டெலோ இயக்கம் அதைச் செய்வதுதான் பிரச்சினை என்றால் டெலோ விடுத்த அழைப்பை ஏற்று அந்த முயற்சிகளுக்கு தலைமை தாங்கி வேறுவிதமான ஒரு அழைப்பை இந்தியாவை நோக்கி முன்வைத்திருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு தெரிவைக் குறித்து ஏன் சம்பந்தரும் சுமந்திரனும் சிந்திக்கவில்லை? அவர்கள் இந்தியாவை ஒரு அழுத்தப்பிரயோக சக்தியாக உள்ளே கொண்டுவர விரும்பவில்லையா?

அவ்வாறு அந்த முன்முயற்சிகளை உதாசீனம் செய்வது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக இந்தியாவுடனான உறவுகளை பாதிக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது. என்பதனால்தான் சுமந்திரன் தனது அமெரிக்க விஜயத்தின் பொழுது இந்தியாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அதிகம் பேசினார். இப்படிப்பட்டதொரு பின்னணியில்தான் கூட்டமைப்பை டெல்லிக்கு வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழரசுக்கட்சி ஆச்சந்திப்பை ஒத்திவைத்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழரசுக் கட்சியின் தலைவரின் தனிப்பட்ட ஒரு வைபவம் என்று கூறப்படுகிறது. அதோடு நாடாளுமன்றத்தில் பட்ஜெட் விவாதம் நடைபெறும் ஒரு காலகட்டத்தில் அதில் பங்குபற்றி வாக்களிக்கவேண்டும் என்பதனாலும் சம்பந்தர் டெல்லிச் சந்திப்பை ஒத்தி வைக்கக் கேட்டதாக கூறப்படுகிறது.

இத்தகவல் சரியாக இருந்தால் மாவை சேனாதிராஜா இல்லாமல் ஒரு தூதுக்குழு போகக்கூடாது என்று சம்பந்தரும் சுமந்திரனும் சிந்திக்கிறார்களா? அந்தளவுக்கு மாவைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களா? இல்லையே கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னரான நிலைமைகளை தொகுத்துப் பார்த்தால் மாவை சேனாதிராஜா வை சம்பந்தரும் சுமந்திரனும் அந்தளவுக்கு மதிப்பதாக தெரியவில்லை. அவரை ஒரு பொம்மைபோல முன் நிறுத்தி பல விடயங்களை சுமந்திரனும் சம்பந்தனும்தான் செய்து வருகிறார்கள். மூத்த கட்சியும் மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட கட்சியுமான தமிழரசுக் கட்சியின் இப்போதிருக்கும் சீரழிவுகளுக்கு தலைவராக மாவைதான் முதல் பொறுப்பு. அதற்கடுத்தபடியாக சுமந்திரனும் சம்பந்தரும் பொறுப்பு. இவை தவிர கட்சி இவ்வாறு சீரழிவதை சகித்துக் கொண்டிருக்கும் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பொறுப்பு. எனவே மாவை அந்த குழுவில் இடம் பெற வேண்டும் என்பதற்காக அந்த பயணத்தை ஒத்தி வைப்பது என்பது கொஞ்சம் மிகைப்படுத்தப்பட்ட ஒரு தகவலாக தெரியவில்லையா? அவர் அப்படிப் போனாலும்கூட அப்படிப்பட்ட சந்திப்புகளில் திருப்திகரமான மாற்றங்களை ஏற்படுத்தும் விதத்தில் உரையாடக்கூடிய ஒருவரா என்ற கேள்விக்கும் பதில் வேண்டும்.

மேலும் பட்ஜெட் விவாதத்தை முன்வைத்தே புதுடில்லி சந்திப்புக்கான நாட்களை ஒழுங்கு படுத்தியதாகவும் தகவல் உண்டு. முன்பு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி 7ஆம் திகதி இந்திய வெளியுறவு அமைச்சரையும், 8ஆம் திகதி பிரதமரையும் சந்தித்த பின் உடனடியாக கூட்டமைப்பு நாடு திரும்பி பட்ஜெட் வாக்களிப்பில் பங்கெடுக்க கூடிய விதத்தில்தான் சந்திப்பு ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டதாக தகவல் உண்டு. மேலும், நிதியமைச்சரான பசில் ராஜபக்சவே பட்ஜெட் விவாத இடைவெளிக்குள்தான் இந்தியா போய் வந்திருக்கிறார். எனவே, சம்பந்தரும் சுமந்திரனும் இந்தியாவின் அழைப்பை சிறிது ஒத்தி வைப்பதற்கு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்களா ?என்ற கேள்விக்கும் விடை அவசியம். இவ்வாறு தனது அழைப்பு நிராகரிக்கப்பட்டால் இந்தியா மீண்டும் அவர்களை அழைக்குமா என்பதையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.


சம்பந்தர் இவ்வாறு இந்தியாவின் அழைப்பை நிராகரித்தது குறித்து ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரிடம் பின்வரும் தொனிப்பட பகிடியாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார் "இப்படி ஒரு துணிவான தலைவரின் கீழ் செயற்படுவதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் 150 கோடி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைவரின் அழைப்பை 137 வாக்குகளால் வெற்றி பெற்ற ஒருவர் ஒத்தி வைக்கக் கேட்பது என்பது எவ்வளவு துணிச்சலான விடயம்?" என்று.

### வீணாவின் கவிக்கணை

ஏட்டுப்படிப்பை கற்கும் வயதில் கற்றுவிடு,
உனக்கு அனுபவ பாடத்தை கற்பிக்க
இங்கு அந்த உலகமே காத்துக்கிடக்கு,
ஏட்டுப்படிப்பு, உன் அடுத்த தலைமுறை
தலை நிமிர வைக்கும்,
வாழ்க்கைப்படிப்பு, அடுத்தவர் போடும்
வஞ்ச வலையில் இருந்து உன்
வம்சத்தையே காத்திடும்,
ஆக மொத்தத்தில் ஏட்டுப்பாடத்துடன்,
வாழ்க்கைப்பாடமும் இருந்திட வேண்டும்
வாழ்க்கை சிறக்க!!!

# இந்திய முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் உடலுக்கு பிரதமர் மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அஞ்சலி

## காஷ்மீர் பள்ளி மாணவர்கள் அஞ்சலி




குன்னூர் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உடலுக்கு பிரதமர் மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

கோவை சூலூர் விமான நிலையத்திலிருந்து நீலகிரியில் உள்ள வெலிங்டன் ராணுவக் கல்லூரி ஆய்வுக்காக நேற்று காலை ஒரு ஹெலிகாப்டரில் ராணுவத் தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரின் மனைவி, பிபின் ராவத் உதவியாளர், பாதுகாப்பு கமாண்டோக்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 14 பேர் பயணித்தனர்.இந்த ஹெலிகாப்டர் தரையிறங்குவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னதாக விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் முப்படை தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி உள்ளிட்ட 13 பேர் பலியாகினர். விபத்தில் வருண் சிங் என்ற வீரர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளார். அவர் தற்போது தீவிர சிகிச்சைக்காக பெங்களூரு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த 13 பேரின் உடலும் டெல்லிக்கு கொண்டுவரப்பட்டது. இதில் முப்படை தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா ராவத், பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் லக்பீந்தர் சிங் லிட்டர், ஸ்டாஃப் ஆஃபீஸர் லெஃப்டினன்ட் கர்னல் ஹர்ஜிந்தர் சிங் ஆகியோர் உடல் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏனையோரின் உடல்கள் அறிவியல் பூர்வாமாக அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் டெல்லி பாலம் விமானப் படை தளத்திற்கு கொண்டு வரப் பட்ட உடல்களுக்கு பிரதமர் மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், ராணுவ தளபதி ஜெனரல் எம்.எம்.நரவனே, கடற்படை தளபதி சீஃப் அட்மிரல் ஆர்.ஹரி, விமானப் படை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர்.சவுத்ரி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

### முப்படை தலைமை தளபதிக்கு காஷ்மீர் பள்ளி மாணவர்கள் அஞ்சலி

ஹெலிகாப்டர் விபத்தில் 12 பேருடன் உயிரிழந்த முப்படை தளபதி ஜெனரல் பிபின் ராவத்துக்கு காஷ்மீரில் பள்ளி மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.தமிழகத்தின் நீலகிரியில் உள்ள குன்னூர் மலைப்பகுதியில் புதன்கிழமை நண்பகல் ராணுவ ஹெலிகாப்டர் மோசமான வானிலை காரணமாக மரத்தில் மோதி கீழே விழுந்து நொறுங்கி தீக்கிரையானது.ஹெலிகாப்டர் விபத்தில் முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி மதுலிகா ராவத் மற்றும் 11 பேர் உயிரிழந்தது நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், காங்கிரஸை சேர்ந்த ராகுல் காந்தி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள், தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெலிங்டனில் உள்ள ராணுவ மருத்துவமனையில் இருந்து சென்னை ரெஜிமென்ட் மையத்துக்கு எடுத்து வரப்படுகிறது. பின்னர் டெல்லி கொண்டு செல்லப்படுகிறது. நாளை டெல்லியில் ராணுவ மரியாதையுடன் பிபின் ராவத் உயிரிழந்த மற்றவர்களுக்கும் ராணுவ மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெற உள்ளதாக நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.காஷ்மீரில், ஜம்மு நகரத்தின் பள்ளி மாணவர்கள் இன்று ஜெனரல் பிபின் ராவத்துக்கு அஞ்சலி செலுத்தினர். பிபின் ராவத்தின் படங்களை ஏந்தியும் மெழுகு வர்த்தி ஏற்றி மாணவர்கள் சோகமே உருவாக காட்சியளித்தனர்.

ஏஎன்ஐயிடம் பேசிய பள்ளி ஊழியர் ஒருவர் ஏஎன்ஐயிடம் கூறியதாவது: ''ஜெனரல் ராவத் தன்னை முழு உலகிற்கும் ஒரு முன்மாதிரியாகக் காட்டிக் கொண்டார். சிப்பாயாக மட்டுமின்றி உன்னத மனிதராக அவர் விளங்கினார். அவர் சர்ஜிக்கல் ஸ்டிரைக்கில் இந்தியாவை மிகச் சிறப்பாக வழிநடத்தினார்.அவர் இந்திய எதிர்ப்புப் படைகளுக்கு முன்னால் அவர் சுவர் போல் நின்றார். இது ஒரு சோகமான இழப்பு, அதைத் தாங்குவது கடினம். முழு நாடும் அவரது இழப்பில் துக்கத்தில் உள்ளது. விபத்தில் உயிர் பிழைத்த ராணுவ வீரருக்காக நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம்'' என்று தெரிவித்தார்.

மற்றொரு பணியாளரான பராஸ், ''தேசம் ஒரு பெரிய இழப்பை சந்தித்துள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில் நமது பாதுகாப்புப் படைகளை ஒருங்கிணைத்த ஒரு பெரிய தொலைநோக்கு பார்வையாளர் ஒருவரை நாம் இழந்ததால் மிகுந்த அதிர்ச்சியில் இருக்கிறோம். இதிலிருந்து நமத்தை தேசத்தைக் கட்டியெழுப்ப நீண்ட காலம் எடுக்கும். இந்த சோகம் அனைவரையும் ஒன்று சேர்க்கும் என்று நிச்சயம் என்னால் சொல்ல முடியும்'' என்றார்.பள்ளி மாணவி பூமி தாக்கூர் தலைமைத் தளபதி இழப்பிற்கு இரங்கல் தெரிவித்தார். இதுகுறித்து ஏஎன்ஐயிடம் மாணவி கூறியுள்ளதாவது:''இது பாதுகாப்புப் படைகளுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தேசத்திற்கும் சோகமான செய்தி. ஜெனரல் பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி 11 அதிகாரிகளுடன் காலமானார் என்ற செய்தியைக் கேட்டது மிகவும் வருத்தமாக இருந்தது. இந்த மாபெரும் சோகம் திடீரென்று நடந்தது. 2016 சர்ஜிக்கல் ஸ்டிரைக்கில் அவர் நிறைய பங்களித்தார். இது பாதுகாப்புப் படைகளுக்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும் சோகமான செய்தி'' என்றார்.

# பேரறிவாளனை முன்கூட்டியே விடுவிக்க கோரிய வழக்கு; மத்திய அரசு இனியும் காலம் தாழ்த்த கூடாது: 3 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு உத்தரவு



பேரறிவாளனை முன்கூட்டியே விடுவிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கில் மத்திய அரசு இனியும் காலம் தாழ்த்தக் கூடாது என அறிவுறுத்தி யுள்ள உச்ச நீதிமன்றம், இந்த வழக்கை ஜனவரி மாதத்துக்கு தள்ளிவைத்துள்ளது.முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திகொலை வழக்கில் சிறைதண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் முன்கூட்டியே விடுவிக்கக் கோரி தமிழக அமைச்சரவை கடந்த 2018 செப்.9ம் தேதி தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பி வைத்தது. ஆனால் அந்த தீர்மானம் மீது தமிழக ஆளுநர் இதுவரையிலும் எந்த முடிவும் எடுக்கவில்லை.

இந்நிலையில், தன்னை இந்த வழக்கில் இருந்து முன்கூட்டியே விடுவிக்கக் கோரி பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு, நீதிபதிகள் எல்.நாகேஸ்வர ராவ், பி.ஆர். கவாய், பி.வி.நாகரத்னா அமர்வில் விசாரணைக்கு வந்தது.அப்போது பேரறிவாளன் தரப்பில் மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கரநாராயணன் ஆஜராகி, ''பேரறிவாளன் உள்ளிட்டோரை முன்கூட்டியே விடுவிக்க தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்டது. தற்போது இந்த விஷயத்தில் ஆளுநருக்கு தனிப்பட்ட அதிகாரம் இல்லை என்பதால் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் ரீதியாகதொடர்ந்து காலதாமதம் செய்யப்படுகிறது.

எனவே இந்த வழக்கில் உச்ச நீதிமன்றமே தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அதுவரை பேரறிவாளனை ஜாமீனில் விடுவிக்க வேண்டும்'' என்றார்.அப்போது, மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜராகி, இந்த வழக்குக்கு விசாரணையை அடுத்த மாதத்துக்கு தள்ளிவைக்க வேண்டும் என்று அவகாசம் கோரினார்.அதற்கு அதிருப்தி தெரிவித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:இந்த வழக்கு உரிய முடிவெடுக்கப்படாமல் ஆண்டுக்கணக்கில் நடந்து வருகிறது. இதுதொடர்பாக ஆளுநர் முடிவெடுப்பார் எனமுதலில் கூறப்பட்டது. அதன்பிறகு குடியரசுத் தலைவர்தான்இதுதொடர்பாக முடிவெடுக்க முடியும் என்று கூறி கோப்புகளும்அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகும் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இந்த விஷயத்தில் தமிழக ஆளுநரின் தாமதம் ஏற்புடையது அல்ல. இந்த விவகாரத்தில் தற்போதைய நிலை என்ன என்பது கேள்விக்குறியாகி உள்ளது. அரசியலமைப்பு சட்ட அத்தியாயம் 72ன்படி குடியரசுத் தலைவருக்கு உண்டான தனிப்பட்ட அதிகாரம் குறித்தும் கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது.எனவே, இந்த விஷயத்தில் மத்திய அரசு இனியும் தாமதம் செய்யாமல் தகுந்த முடிவை எடுக்க வேண்டும். இவ்வாறு அறிவுறுத்தி, விசாரணையை வரும் ஜனவரி மாதத்துக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.


# முப்படைத் தளபதி பிபின் ராவத் உடலுக்கு முதல்வர் ஸ்டாலின் நேரில் அஞ்சலி



ஹெலிகாப்டர் விபத்தில் பலியான முப்படைத் தளபதி பிபின் ராவத் உடலுக்கு முதல்வர் ஸ்டாலின் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே நடைபெற்ற விபத்தில் முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்து குறித்து நேரில் கேட்டறிய சென்னையில் இருந்து விமானம் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு 7 மணியளவில் கோவை விமான நிலையம் வந்தார். அங்கிருந்து, சாலை மார்க்கமாக வெலிங்டன் ராணுவப் பயிற்சிக் கல்லூரி வளாகத்துக்கு 9 மணியளவில் முதல்வர் சென்றடைந்தார்.

இரவு குன்னூரில் தங்கிய முதல்வர், இன்று (9ம் தேதி) காலை 8 முதல் 10 மணிக்குள் எம்.ஆர்.சி பேரக்ஸ் இடத்துக்கு வந்து பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேரின் உடல்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.



# ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் மூத்தமகன் செ. கணேசலிங்கன் மறைந்தார்

**- திருமலை நவம்**

ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் மூத்தமகன் மாக்ஸிய சிந்தனைகளின் ஞானி ஈழத்து இலக்கியப்போக்கை தன் எழுத்துக்களால் ஆண்ட மூத்த ஆளுமை செ.கணேசலிங்கம் மறைந்தார் என்ற செய்தி என்னைப்போல் எத்தனையோ இலக்கிய நெஞ்சங்களுக்கு இடிவிழுந்த செய்தியாக இருக்கும். நீண்டபயணம், சடங்கு, செவ்வானம் என்ற அற்புதமான நாவல்களை ஈழத்து இலக்கியத்துக்கு தந்து ஈழத்து இலக்கியத்தை ஒரு உலகத்தளத்துக்கு நிலை நிறுத்திய இலக்கிய ஆளுமை கணேசலிங்கம். தனது 93 வயதில் மறைந்துபோனது துயர் நிறைந்த செய்திமட்டுமல்ல ஈழத்து இலக்கியம் விதவைக்கோலத்துக்கு போய்விட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

கணேசலிங்கம் என்ற ஜம்பவானை நான் முதல் முதல் சந்திக்கும் வாய்ப்பை 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அந்த சம்பவம் நிகழ்ந்தது. திருகோணமலை முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சர் அமைப்பென்ற பெயரில் நல்லை அமிழ்தன் தலைமையில் இயங்கிவந்த அமைப்பின் எழுத்தாளர் மகாநாடு இடம் பெற்றவேளையில் ஈழத்து இலக்கியம் பற்றி கட்டுரையொன்றை வாசிப்பதற்காக அவர் திருகோணமலைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இவர் பற்றிய மனப்பதிவு ஏலவே எனக்கு இருந்தமைக்கான காரணம் இவரது புரட்சிகரமான நாவல்களான "சடங்கு" "நீண்டபயணம்" "போர்க்கோலம்" "செவ்வானம்" போன்றவற்றை படித்திருந்த காரணத்தினால் எமது சந்திப்பு ஒரு ஆரோக்கியமான சந்திப்பாக இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து பேராதனைப்பல்கலைக்கழகத்தில் ஒருமாணவனாக கற்றுக்கொண்டிருந்த காலத்தில் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக 1976 தேர்ந்தெடுக்கப்பட்ட வாய்ப்பின் காரணமாக ஈழத்து இலக்கியவாதிகளை அழைத்து கலந்துரையாடல்களை நடாத்திய காலத்தில் கணேசலிங்கம் அவர்களை அழைத்து ஈழத்து இலக்கியம், புரட்சிகர கலை இலக்கியம், மாக்ஸிய இலக்கியம், பற்றிய பல கலந்துரையாடல்களை நடத்தியதன் காரணமாக அவருக்கும் எனக்குமிடையே இருந்த நட்பு வலுவாகியது. நான் தங்கியிருந்த அக்பர் மண்டபம் அருணாசலம் மண்டபத்தில் என்னுடனேயே தங்கி மாணவர் உண்ணும் உணவை வேண்டி உண்டு நட்பை மதித்த ஒரு மனிதநேயனாக என்னை ஆட்கொண்டார். இடையில் அவருடைய இந்தியப் புலம் பெயர்வு காரணமாக தொடர்புகள் அறுந்துபோயின.

அவருடைய இறப்பு செய்தியை பத்திரிகையில் படித்தபோது ஈழத்து இலக்கியம் ஒரு ஆளுமையை இழந்துவிட்டது என்று வேதனைப்படுவதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

உருப்பிராய் என்ற ஒரு யாழ்ப்பாண கிராமத்தில் 1928 ஆம் ஆண்டு பிறந்து தனது கல்வியை உருப்பிராய் பாடசாலை யாழ் பரமேஸ்வராக்கல்லூரி ஆகியவற்றில் பயின்று இங்கிலாந்து தேசத்து உயர் கல்வியை (லண்டன் மெட்றிக்குலேஸன) பரீட்சையில் தேறி அரச பதவிகள் பலவற்றை வகித்து இலக்கியத்தை நேசித்த ஒருவராக வாழ்ந்து கடந்த 4.12. 2021 தனது 93 வயதில் சென்னையில் காலமாகியுள்ளார்.

கணேசலிங்கத்தின் இலக்கியப்பார்வையும் பதிவுகளும் மாக்ஸிய சிந்தனையின் போற்றபட்டவையாகவே இருந்தது என்பது இலக்கிய உலகம் நன்கறியும்.

கலை இலக்கியங்கள் யாவும் மேல்மட்ட அமைப்பை சார்ந்தவையாகும் இவை என்றும் அடிப்படை அமைப்பான பொருளாதார அமைப்புக்கு சேவை செய்வதாகவே அமையும். வர்க்க சமூதாயம் தோன்றிய காலத்திலிருந்து ஆளும் வர்க்க நலன்பேணும் கலை இலக்கியங்களே சமூக அந்தஸ்தை பெற்று வளர்க்கப்பட்டு வந்தததை எளிதில் அறிய முடியும். நிலவுடைமைக்காலத்தில் மன்னர்கள் நிலப்பிரபுக்களை வைத்தே காவியங்கள் படைக்கப்பட்டன. கைத்தொழில் புரட்சியின்பின் மூலதனம் ஆதிக்கம் பெறத்தொடங்கியது. கலை இலக்கியத்திலும் புரட்சி ஏற்படவே செய்தது.

இலக்கியம் என்ற மேல்மட்ட அமைப்பை எடுக்கும்போது கவிதை சிறுகதை நாவல் நாடகம் கட்டுரை வசன கவிதை ஆகிய கலை உருவங்களையே நாம் கருதுகிறோம் இக்கலையுருவங்கள் அனைத்தும் நிலவுடமை முதலாளித்துவத்தால் பெற்றெடுக்கப்பட்ட கலை உருவங்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அவை அத்தகைய சமூதாய அமைப்பை நிலை நாட்டுவதற்காகவே எழுந்தன என்ற மாக்ஸிய சிந்தனையை தனது ஆதார சுருதியாகக்கொண்டு அடிப்படை கொள்கையாக வைத்துக்கொண்டு ஒரு இலக்கியவாதியாக வாழ்ந்து காட்டியவர் கணேசலிங்கம்.

சிறுகதையாளனாக, நாவல் ஜம்பவனாக மாக்ஸிய சிந்தனை சிற்பியாக, பத்திரிகை மற்றும் சஞ்சிகை ஆசிரியராக பல தளங்களின் தனது ஆளுமையை பதித்தவர். இவரது இலக்கியப்பயணம் 1950 ஆம் ஆண்டு ஆரம்பமாகிறது. தினகரனில் மன்னிப்பு என்னும் தலைப்பில் சிறுகதையை எழுதியதன் மூலம் அப்பயணம் ஆரம்பமாகிறது. இதன்பின் "சுதந்திரன்" "தினகரன்" "புதுமை" "இலக்கியம்" "சாந்தி" "சரஸ்வதி" "தாமரை" போன்ற பத்திரிகைகளிலும் ஏடுகளிலும் தொடர்ந்து எழுதி வந்துள்ளார்.

தனது பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு அரச துறைக்குள் நுழைந்தவர் ஆரம்பத்தில் வடபுலத்தில் "கம்யுனிஸ்ட் கார்த்திகேசன்" என்று அழைக்கப்பட்டவரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிறந்த ஆசிரியர்களுள் ஒருவராக அறியப்பட்டவருமான தோழர் மு. காத்திகேசனுடனான தொடர்பு இவரை பொதுவுடமைத்தத்துவத்துக்குள் ஈர்த்துவிடுகிறது. தோழர் காத்திகேசன் மாக்ஸிஸ லெனிஸத்தையும் அதன் அடிப்படையிலான பட்டாளிவர்க்க அரசியலையும் தனது ஆயட்கால இலக்காகக்கொண்டு அதற்காக வாழ்ந்து காட்டியவரோடு இவருக்கு ஏற்பட்ட தொடர்பு இடதுசாரிச சிந்தனைகளோடு எழுத முற்பட்ட கே. டானியல் என்.கே. இரகுநாதன் டொமினிக் ஜீவா கவிஞர் பசுபதி சுபையிர் இளங்கீரன் நீர்வைப்பொன்னையன் இ.முருகையன் பிரேம்ஜி அகஸ்தியர் சில்லையூர் செல்வராஜன் அ.ந. கந்தசாமி ஆகிய இளந்தலைமுறையினருடன் இவருக்கு இருந்த உடன்பாடு ஈடுபாடு ஈழத்து இலக்கியபபரப்பில் பலவற்றை படைக்க இவருக்கு உறுதணை புரிந்தது.

இவர் தனது வாழ்நாளில் 26 மேற்பட்ட நாவல்களையும் 9 சிறுகதைத் தொகுதிகளையும் 11 சிறுவர் நாவல்கள் 20 மேற்பட்ட கட்டுரை நூல்களையும் ஆக்கித்தந்துள்ளார். கணேசலிங்கத்தின் ஆரம்பகால நாவல்களான நீண்ட பயணம் (1966) சடங்கு 1967 செவ்வானம் 1967 போர்க்கோலம் தரையும் தாரைகையும் பிற்கால நாவல்களான ஈனத் தொழில், ஒருமனிதனின் கதை, அவலங்கள், அடைப்புக்கள் 1998, மரணத்தின் நிழலில், நகரமும் சொர்க்கமும். போன்ற புகழ்பெற்ற நாவல்களை ஆக்கி தந்துள்ளாார். வர்க்க முரன்பாடுகள் பெண்ணிய விடுதலை பெண்ணிய சிந்தனைகள் சாதிய கொடுமைகள் முதலாளித்துவ கெடுபிடிகளை ஆகியவை இவரின் நாவல்களில் ஆழமாக அலசி ஆராயப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் முலாம் பூசப்பட்ட கதா பாத்திரங்களாக அவை அமைந்தன.

இவர் எழுதிய முதல் நாவலான நீண்ட பயணம் 1966 இரண்டாவது நாவலான சடங்கு 1966 மூன்றாவது நாவான செவ்வானம் 1967 ஆகிய மூன்று நாவல்களும் ஈழத்து பத்து சிறந்த நாவல்களில் முதலிடம் பெறுபவையென ந. சுப்பிரமணியம் புகழ்ந்துள்ளார். பேராசிரியர் கைலாசபதி இவை பற்றி குறிப்பிடுகையில் ஒரே குழுவைச்சேர்ந்த ஒரே பிராந்தியத்தை யாழ்ப்பாணத்தை கதைக்களமாகக்கொண்ட நிலமானிய அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்புக்கு மாறும் சமூதாயத்தை சித்தரிக்கும் நவால்களாக மூன்று நாவல்களும் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். நீண்ட பயணத்துக்கு முன்னுரையை இந்திய புகழ் பெற்ற எழுத்தாளர் அகிலனும் செவ்வானம் நாவலுக்கு பேராசிரியர் கைலாசபதியும் முன்னுரை எழுதியிருப்பது சிறப்பம்சமாகும்.

நீண்டபயண நாவல் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகையில் 1956 முன்னைய பின்னைய ஆண்டுகள் இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டுகளாகும். அக்கலத்தில் யாழப்பாணத்திலுள்ள சிறு கிராமம் ஒன்றில் ஏற்படும் மாற்றத்தை எழுத முனைந்தேன்.ஒடுக்கப்பட்டவர்கள் ஒரு கல்துாரத்தை கடக்க முற்படுகின்றனர்.சுரண்டல் ஏற்றதாழ்வுகள் ஆதிக்கவெறி ஆகியன மனிதரிடையே இருக்கும்வரை போராட்டம் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். மனிதவுரிமைப்போராட்டம் ஒரு நீண்ட பயணம் என்று கூறியிருந்தார். ஆசிரியர்.

சாதிப்போராட்டம் உக்கிரம் பெற்றிருந்த காலத்தில் குறிப்பாக மாவட்டபுர ஆலய போர் வேகம் கொண்ட காலத்தில் செல்லத்துரை சரஸ்வதி என்ற பாத்திரங்களை தன் நாவலில் உருவாக்கி யாழ்ப்பாண பேராட்டத்தை யதார்த்தபூர்வமாக தன் நாவல் மூலம் சித்தரித்துகாட்டியிருந்தவர் கணேசலிங்கம் நீண்ட பயண நாவலில் செல்லத்துரையன் என்ற பனைத் தொழிலாளிமீது காதல் உணர்வுடன் அக்கறை காட்டுபவர்களாக மூன்று பெண்கள் சித்திரிக்கப்படுகிறார்கள் பக்கத்துவீட்டு கற்பகம் அடுத்து அவன்மீது தணியாத அன்பும் அக்கறையும் கொண்டவளாக செம்பாட்டு பள்ளர் வகுப்பை சேர்ந்த வள்ளி இன்னொருத்தி வெள்ளாளப் பெண் சரஸ்வதி.

இவரது நீண்டபயண நாவல் 1966 ஆண்டுக்கான சாகித்திய விருதையும் மரணத்தின் நிழலில் என்ற நாவல் 1994 ல் தமிழ்நாட்டு இலக்கிய விருதையும் பெற்றதோடு மலேசியப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்கு சடங்கு நாவல் ஒருபாட நூலாகவும் அயலவர்கள் என்ற நாவல் சென்னை பல்கலைக்கழக முதமாணிப்பட்டப்படிப்புக்கு துணை நூலாகவும் அங்கீகரிக்கப்பட்டு கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேன்பறிப்போர் என்ற நாவல் ஆங்கிலத்தில் மொழிபெயாப்பு செய்யப்பட்டுள்ளது, இவரது நாவல்களை ஆராய்ந்து பல மாணவர்கள் முனைவர் பட்டத்தையும் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளனர்.

நாவல் இலக்கியத்தைப்போலவே சிறுகதை படைப்பதிலும் ஆளுமைமிக்க ஒருவராக காணப்பட்டவர் கணேசலிங்கம் ஒன்பது சிறுகதை தொகுதிகளை வெளியட்டுள்ள இவரது சிறுகதைகள் ரஸ்யமொழி உட்பட்ட பிறமொழிகளில் மொழிபெயாக்கப்பட்டுள்ளது கொடுமைகள் தாமே அழிவதில்லை என்ற சிறுகதைத் தொகுதியிலுள்ள கதைகள் பலரது பாராட்டைப் பெற்ற சிறுகதைகளாகும். ஈழத்துசிறுவர் இலக்கியவளர்ச்சியில் இவரது பங்கும் பணியும் கனதியும் காத்திரம் நிறைந்ததுமாக கணிக்கப்படுகிறது. சிறுவர் சிந்தனைகளை பெருக்கும் வகையில் இவரால் எழுதப்பட்ட பல நூல்கள் உலக அதிசயங்கள் உலக சமயங்கள் உலக சிந்தனையாளர்கள் உலக மகா காவியங்கள் என பல பரப்பில் படைத்துள்ளார்.

ஈழத்து கவிதையிலக்கியம் புதுப் பொலிவு பெறவைத்ததில் கணேசலிங்கம் ஆசிரியராக இருந்து நடாத்திய குமரன் சஞ்சிகைக்கு அளப்பரிய பங்குண்டு. 1970 களில் தமிழகத்தில் வானம்பாடி என்ற கவிதைச் சஞ்சிகையொன்று வெளிவந்த காலத்தில் மு. மேத்தா காமராஜன் அப்துல்ரகுமான் அக்கினிபுத்திரன் போன்றோர் புதுக்கவிதைகளில் பலபுதுமைகளை செய்த காலம். இவ்வடிவம் உடைப்பெடுத்து ஓடத் தொடங்கியபோது மரபு விரும்பிகளும் பண்டிதர்களும் புலவர்களும் புதுக்கவிதையின் வரவை கடுமையாக எதிர்த்தார்கள் அக்கலத்தில் 1970 குமரன் என்ற ஏட்டைத் தொடங்கி ஈழத்திலும் அதற்கு அளப்பரிய ஆதரவை நல்கியவர் கணேசலிங்கம்.

அவ்வேட்டில் நூற்றுக்கணக்கான புதியவர்கள் புதுக்கவதைகளை எழுதினார்கள். மட்டுநகர் சாருமதி. அனுராதபுரத்திலிருந்து பேனாமனோகரன் அன்புஜவர்சா ரஞ்சினி ரத்தினம், திருமலை நவம், ஈழக்குயில் இத்ரீஹ் கல்முனை பூபால் சுபத்திரன் செங்காவலன் வித்தியாபதி மாதுங்கன் ஷெல்லிதாசன், சுகன்ஜா, மாத்தளை செல்வா, அன்புதீன், நல்லை அமிழ்தன் கனகபாலதேவி மொழிவரதன் மலையன்பன்-லோகேந்திரலிங்கம், நக்கீரன், மாத்தளை ராஜலிங்கம் பாலமுனை பாறுாக், புதுவை இரத்தினதுரை ஜாவீது கணேஸ், என ஏராளமான புதிய தலைமுறையினரும் பழைய தலைமுறையினரும் எழுதினர்.

இத்தகைய இலக்கிய பேராண்மையை ஈழத்து இலக்கிய உலகம் இழந்துவிட்டது என்பது கவலைக்கு அப்பாற்பட்ட மறைவாகும்.



# டார்ச் லைட்டின் வெளிச்சம் எவ்வளவு தூரம் பரவும்?

வே.பாலகிருஷ்ணன், இ.கா.ப
(மண்டலக் காவல்துறைத் தலைவர், மத்திய மண்டலம், திருச்சி)

காவிரியில் வெள்ளம் கரைபுரண்டோடுவதை காண்பது கண்கொள்ளா காட்சியாகும். வறண்டு புற்களும் பற்றைகளும் கணப்படும் காவிரியில் நீர் ஆர்பரித்து நுரையுடன் ஓடுவதை கண்டால், டெல்ட்டா மாவட்ட தமிழர்கள் அதிலும் குறிப்பாக திருச்சி நகர் வாழ் மக்கள் அடையும் உவகைக்கு எல்லையில்லை. தொன்றுதொட்டே தமிழக கலாச்சாரம் மற்றும் இலக்கியங்களில் காவிரிக்கு தனியிடம் உள்ளது.

எனினும் நீண்ட காலத்திற்கு பிறகு காவிரித்தாயின் சீற்றம் கலக்கத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. இம்முறை தமிழகத்தில் நவம்பர் டிசம்பர் மாதங்களில் பெய்த மழையளவு வழக்கத்திற்கு மாறாக மிகவும் அதிகமாக இருந்தது. இயல்பை விட அது சுமார் 80மூ அதிகம் என்று வானியல் ஆய்வு மையத்தின் முதற்கட்ட அறிக்கைகள் கூறுகின்றன.

மழை வெள்ளம் என்று வரும் போது மீட்பு பணி மிகவும் சவாலானது, சிக்கலானது. பல்லாயிர்க்கணக்கானவர்களின் உயிர் மற்றும் உடைமைகளை காப்பாற்ற சில நூறு காக்கிச்சட்டையினர் தமது உயிரைப் பணயம் வைத்து இரவு பகல் என்று பார்க்காமல் ஓய்வின்றி உழைக்கின்றனர்.

பிரச்சனை என்று வந்தால் மட்டுமே பகவானையும், பட்டாளத்தாரையும் மக்கள் நினைவு கூர்வார்கள் என்று இந்தியாவில் ஒரு செலவடை உண்டு. அதே போன்று காக்கிச் சட்டையினர் என்று அழைக்கப்படும் காவல்துறையினர். கடும் விமர்சனங்களுக்கு அப்பாற்பாட்டு கடமை என்பதை மட்டுமே மனதில் நிறுத்தி செயல்படுபவர்கள் தான் இந்த காக்கிச் சட்டையினர்.

இம்முறை பெய்த கடும் மழை வெள்ளத்தால் காவிரியின் கொள்ளிடம் ஆற்றில் திடீரென உருவாகிய தீவுகளில் திக்குத் தெரியாமல் சிக்கியிருந்த எழுபது கால் நடைகளை, அவை கரையேற வழி தெரியாமல் நின்று கொண்டிருந்ததை பார்த்து அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த முருகன், வயது (30) என்பவர் மனிதர்களே தவிக்கும் போது மாடுகள் முக்கியமா என்று எண்ணாமல் யார் உரிமையாளர் என்றும் யோசிக்காமல் சாதுரியமாக ஒரு மாட்டை மெதுவாக பிடித்து தண்ணீரில் நடந்து கரை ஏறியபோது அனைத்து மாடுகளும் அவற்றைப் பின்தொடர்ந்து, எப்படி மந்தையாக மாட்டிக் கொண்டனவோ, அதே மந்தையாக கரை தேடி உயிருடன் வந்தன. இது நடந்தது 19.11.2021 அன்று. அந்த முருகன் என்பவருக்கு என்னுடைய பாராட்டு மடலைக் கொடுத்தேன். இதுபோன்று எண்ணற்ற மெய்சிலிர்க்கும் சம்பவங்களில் காவல்துறையும், பொதுமக்களும் சேர்ந்து வெள்ளத்திலிருந்து மக்களையும் மக்களைச் சார்ந்த மற்ற உயிரினங்களையும் காத்த கதைகள் எழுத விளைந்தால் அது நிறைவு பெறாத தொடர்கதையாக இருக்கும். அந்த தொடர்கதையை ஒன்றிணைத்து கருத்துக்களாக மழைக்காலங்களில் மக்கள் பணியில் காவல்துறை எப்படி செயல்படுகிறது என்பதை இக்கட்டுரையில் எடுத்துரைக்கிறேன்.



பருவமழை பொய்த்தாலும், மெய்த்தாலும் காக்கி உடை காவலர்கள் பொய்த்தல் என்பது பொதுவாக மக்களால் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஒருபக்கம் காவல்துறையை எவ்வளவு தான் விமர்சனம் செய்தாலும், இக்கட்டானச் சூழலில் காவல் துறைதான் முன்வந்து நிற்கும் என்பது மக்களுக்கும் தெரியும். காலநிலைக்கும் காக்கிக்கும் என்ன சம்மந்தம் என்று எண்ணி குற்றம் நடந்தால் கண்டுபிடிப்பதும் நடக்காமல் தடுப்பதும் மட்டுமே எம்பணி என்று நினைத்து காவல்துறை இருந்து விடுவதில்லை. ஏனெனில் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏதேனும் பங்கம் எந்தவகையில் வந்தாலும் அதை வராமல் தடுப்பதும் வந்தால் மக்களைக் காப்பதும் காவல்துறையின் முதலாய கடமை மற்றும் பணி என்பதை மனதளவில் முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்படுவது தான் தமிழ்நாடு வல்துறை. மாநில பேரிடர் மீட்புப்படை ஒவ் மாவட்டத்திலு சிறிதளவு இருந்தாலும் பெரும்பான்மையான மீட்பு பணிகள் காவல்நிலையத்தில் உள்ள காவலர்களாலே மேற்கொள்ளப்படுகிறது.

பருவ மழை தொடர்பான முன்அறிவிப்பு வந்தவுடனே அதற்கான ஆயத்த பணிகளில் ஈடுபட்டு கடந்த காலங்களில் வெள்ளம் வந்த இடங்கள் மட்டும் இல்லாமல் இந்த முறை வரைப்படத்தில் பாதிப்பு பதிவு ஏற்பட்டிருக்கின்றன ஏற்படுவதற்கு செய்து என்பதை கடந்த மனதில் வாய்ப்புள்ள இடங்களையெல்லாம் காலங்களில் கொண்டு எந்தவிதமான அதுபோன்றப் கூகுள் பாதிப்புகள் பாதிப்புகளைத் தடுப்பதற்குத் தேவையானப் பணிகளைக் கண்டறிந்து எப்பொருள் யார் யார் இடத்தில் உள்ளது என்பதை பட்டியலிட்டு தயார் செய்துகொள்கிறோம்.

படகுகள், கனரக மீட்பு வாகனங்கள், பொறியியல் சாதனங்கள், வெட்டும் மற்றும் உடைக்கும் கருவிகள் வைத்திருப்போரின் விலாசங்களை விவரமாக காவல் நிலைய பதிவேட்டில் பதிந்து அவர்களின் அலைபேசி எண்களை சேகரித்துத் தயாராக இருக்கும்படி அழைப்பு விடுத்து வைத்திருக்கின்றோம்.

மேற்சொன்ன புள்ளிவிபரங்கள் அடிப்படையில் வருவாய் துறையுடன் இணைந்து முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் ஒலி பெருக்கி மூலம் சொல்லித் தேவையான இடங்களில் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவது, இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள சுவர் பற்றிய விவரங்களைச் சேகரித்து அந்த பகுதி மக்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு அப்புறப்படுத்த அறிவுறுத்துவது, சிறுவர்கள், சிறுமிகள் ஆழம் தெரியாமல் மூழ்கி இறந்த நீர் நிலைகளெல்லாம் எச்சரிக்கை பலகை வைப்பது என அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கின்றோம்.

இதோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் கண்காணிப்பாளர் அலுவலத்தில் வெள்ள கட்டுபாட்டு அறை ஏற்படுத்தி பாதிப்பு ஏற்படக் கூடிய இடங்களை நுண்ணறிவு பிரிவு மூலம் சேகரித்து தொடர்ந்து மழை நிலவரத்தையும், தண்ணீர் தேங்குவதால் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் அறிந்து கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவித்து அங்கிருந்து போக்குவரத்து காவலர்களுக்கும், மீட்புப்பணி குழுவுக்கும் தகவல்களை உடனடியாக தெரிவித்து மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோம்.



இந்தக் காக்கும் கடமைகளைத் தாண்டி மழை நீரால் பாதிக்கப்பட்டு உணவு கிடைக்காமல் பசியில் தவிக்கும் மக்களுக்கு தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் உணவு கொடுத்து மருத்துவ தேவை இருந்தால் அதையும் ஒருங்கிணைந்து மக்களின் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராகவே காவல் துறையினர் மாறிவிடுகின்றனர்.

இடர்பாடுகள் எத்தனை ஒருபக்கம் இருந்தாலும் இதுபோன்ற நிகழ்வுகள் அரசு, தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட ஒரு வாய்ப்பாகவும் காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையே பாசத்தின் அடிப்படையிலான நட்புறவை வலுபடுத்தவும் இது போன்ற நேரங்கள் உதவியாய் இருக்கின்றது. ஒரு பக்கம் இது போன்ற சேவைகளைக் காவலர்கள் செய்தாலும் இன்னொரு பக்கம் சரியான மீட்புப்பணி நடைபெறாத பட்சத்தில் இயல்பாக ஏற்படும் மக்கள் போராட்டங்களைக் கனிவோடும், அதே நேரம் சட்டத்தின் கண்டிப்போடும் சமாளிப்பதும் காவல்துறையின் இன்னொரு பக்கம் ஆகும்.

வெள்ளம் புகுந்துவிட்டால், குடிநீர் முதல் மருத்துவம் வரை ஏழை, பணக்காரர் என்று எல்லோருக்கும் பிரச்சனையாக இருந்தாலும், ஏழைகள் மற்றும் சரியான வீட்டு வசதிகள் இல்லாத குடிசைப் பகுதி மக்கள் இது போன்ற நேரங்களில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த நேரத்தில் காவல்துறை சாதாரண நேரங்களில் செய்யும் கடமையைத் தாண்டி விளிம்பு நிலையில் இருக்கும் மக்களுக்கு அதிகமான பணிகளை மேற்கொள்கிறது. இதுமாதிரியான இடர்பாடு நேரங்களில் சமூக நீதியை மனதில் கொண்டு துன்பம் அதிகம் இருக்கும் பகுதிகளில் காவல்துறையின் பணியை அதிகம் முடுக்கி விடுவது, காவல்துறையை நிர்வகிக்கும் அதிகாரிகளின் கடமை.

இது போன்ற நேரங்களில் தொற்று நோய் பரவாமல் இருக்க குடிநீர் விநியோகம் மற்றும் குப்பைகளை சுத்தம் செய்வது என்பது மிக முக்கியமான பணி, போக்குவரத்து இடைஞ்சல் இல்லாமல் குப்பை அள்ளும் மற்றும் குடிநீர் லாரிகள் செல்ல வழியை ஏற்படுத்திக் கொடுப்பது. இடம் பெயர்ந்த நேரத்தில் வீடுகளில் திருட்டுகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்வது வெள்ளத்தால் ஏதேனும் ஆவணங்கள் தொலைந்து விட்டால் அதன் நகல் பெறுவதற்கு காணாமல் போனதற்கு ஆதாரமாக ரசீது வழங்கி அவற்றின் நகல் பெறுவற்கு உதவி செய்வது எனக் காவல்துறையின் பணிகள் பற்பல.

நான் திருப்பூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளராக 2011ஆம் வருடம் இருந்தபோது சாதாரணமாக சாயப்பட்டறை தண்ணீர் மட்டுமே செல்லக்கூடிய நொய்யல் ஆற்றில் இரவோடு இரவாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கிக் கொண்ட ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்கு அரசு இயந்திரம் தவித்துக் கொண்டிருந்த போது இரவு 1 மணிக்கு நான் முன்னின்று நீரில் இறங்கி மீட்புப்பணியைத் துவங்கியவுடன் பொதுமக்களும் அரசு அதிகாரிகளும் உடனடியாக களத்தில் இறங்கிக் காலைக்குள்நூற்றுக் கணக்கானோரைக் கரை மீட்டு வந்த நிகழ்ச்சி இன்னும் நீங்கா நினைவாக உள்ளது. காவல்துறையை வழிநடத்தும் உயர் அதிகாரிகள் முன்னின்று மீட்பு பணியை எடுத்துச்செல்வதன் முக்கியத்துவத்தை இதன் மூலம் உணரலாம். பொதுமக்கள் படும் இடையூறுகள் எல்லாம் காவல்துறை குடும்பத்திற்கும் ஏற்படும். அவர்கள் குடும்பத்தை பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் காவலர்கள் கவலை இன்றி வேலை பார்ப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டும். அதற்கு உயரதிகாரிகளின் பங்களிப்பு மிக முக்கியம்.




ஆக, தமிழகக் காவல்துறை குறை தீர்க்கும் குடிமைத் துறையாக இதுபோன்ற இயற்கை மற்றும் பேரிடர் நேரங்களில் செயல்படுவது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டதும் அதன் மூலம்மறா காவல்துறைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதும் நிஜம்.

Toronto District School Board

# MIDDLE FRENCH IMMERSION (Grade 4 Entry)

விண்ணப்பம் திறக்கப்படும் திகதி: January 3, 2022
விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி: January 28, 2022

தற்போது பிரெஞ்சு திட்டத்தில் இல்லாத தரம் 3 மாணவர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Learn more at
www.tdsb.on.ca/French

Kerala Kottakal Arya Vaidyasala Products Available



AAYUSH WELLNESS CENTER
Body. Mind. Soul.
Mississauga & Brampton

Ayurveda, - Massage Therapy & Physiotherapy
Lady Doctor & Therapist

You are in experts hand

**Traditional Kerala Ayurveda Treatments**

- Shirodhara - Third Eye Treatment
- Abhyanga- Full Body Massage
- Kizhi
- Pizhichil
- Panchakarma
- Rejuvenation Theraphy
- Clinical Yoga Training

**we are specialized in**

- Pain Management
- Arthritis
- Spine & Joint
- Spondylitis
- Headache and Migraine
- Stress, Strain and Depression
- Ligament, tissue and sport injuries
- Skin Diseases

Weekend and Late Evening Appointments available All 7 days

Call us Today:
905-279-9777
Mobile:
647-629-8841
www.aayushwellnesscenter.ca

We speak your language:
English, Malayalam, Tamil, Hindi

79 Dundas St. W, Suit 108, Mississauga, L5B 1H7

Dr. K.C. Hareendran, BAMS, PhD, DNM (CANADA
Ayurveda & Naturopath Physician
Dr. Amrutha Rajeev BAMS, MD (Ayurveda)

www.facebook.com/aayushwellnesscenter www.twitter.com/aayushwellnesscenter


நீங்கள் வர்த்தகத்தில்
இருக்கிறீர்கள் என்பதை
பொதுமக்கள் அறிந்துகொள்ளவும்,
உங்கள் தொலைபேசி
இலக்கத்தினைத் தேடி அலையாது
உடன் பெற்றுக்கொள்ளவும்...
விளம்பரத்திற்கு இன்றே அழையுங்கள்
செந்தியின்...
தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
www.tamilsguide.com
info@tamilsguide.com | 416-615-4646


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE
Serving the Tamil Community of Greater Toronto
உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.
கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.
உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.
CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759
இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
Pre-Arranging – A Wise Choise
FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death
EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா




இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா மற்றும் பாரம்பரிய உணவுகள்...



தேன் நெல்லி
நாட்டு சக்கரை
கருப்பட்டி

கனடாவில் Tasty Tamila தயாரிப்புகள் கிடைக்கும் இடங்கள்:-
Shankar & Co (Kennedy & Eglinton)
Gunam Supermarket (Morningside & Sheppard)

வியாபார தொடர்புகளுக்கு +1 647 762 9512 +91 7845 00 6977



# கனடிய மக்களை ஆச்சரியப்படுத்திய பல வடிவப் பனிக்கட்டிகள்

- குரு அரவிந்தன்

கனடாவில் பனிக்காலம் ஆரம்பித்து விட்டது. ரொறன்ரோவில் சென்ற கிழமையில் இருந்து பனி கொட்டத் தொடங்கியிருக்கின்றது. மனிற்ரோபா ஏரியின் கிழக்குக் கரையோரத்தில் உள்ள தண்ணீர் சென்ற வாரம் உறை நிலை எய்திய போது, சிறிய பந்துகள் போன்று மாற்றமடைந்திருப்பது அவதானிக்கப்பட்டது. இதற்கு இயற்கையான காலநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம் என நம்புகின்றார்கள்.

வின்னிப்பெக்கில் இருந்து 200 கிலோ மீட்டர் வடமேற்கே இந்த ஏரி இருக்கின்றது. 200 கிலோ மீட்டர் நீளமான இந்த ஏரி கனடாவின் 14வது பெரிய ஏரியாகவும், உலகின் 33வது பெரிய ஏரியாகவும் இருக்கின்றது. சுமார் 30 மில்லியன் டொலர் பெறுமதியான மீன்கள் வருடா-வருடம் இங்கே பிடிக்கப்படுகின்றன. ஸ் ரீப்றொக் என்ற இப்பகுதியில், இந்த ஏரி நீர் ஒரு போதும் இப்படி மாற்றம் அடைந்ததில்லை. சாதாரணமாக பனிக்காலத்தில் மேற்பரப்பு உறைந்த நிலையில் தட்டையாகக் காணப்படும், ஆனால் இம்முறை ஏரி-யின் மேற்பரப்பில் இப்படி வித்தியாசமான சிறு உருண்டைகள் தோன்றியிருப்பது அங்கிருக்கும் மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கின்றது. மதநம்பிக்கை உடையவர்கள் இதற்கு வேறுகாரணங்கள் சொல்லலாம், அறிவியல் சார்ந்த கருத்துக்களைக் கேட்டபோது அவர்கள் தெரிவித்த கருத்து என்வென்றால்,



ஏரியின் தண்ணீர் உறை நிலைக்குச் செல்லும் போது, மேற்பரப்பில் குளிர் காற்று வீசினால், அதனால் மேல் மட்டத்தில் சிறிய அலைகள் தோன்றும். அப்படித் தோன்றும் போது, அவை திரண்டு சிறு கற்கள் போல மாறி, பனிப்பந்துகளாக மறிவிடலாம். காற்றின் வேகத்தையும், உறைநிலை அடைய எடுக்கும் நேரத்தையும் பொறுத்து அவற்றின் உருவ அமைப்புக்கள் மாறுபடலாம். இந்த இரண்டு நிலையும் ஒரே சமயத்தில் நடந்தால் இப்படி மாறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக அல்பேர்ட்டா பல்கலைக்கழக பேராசிரியரும், பனிப்பாறை நிபுணருமான ஜெவ் கவன்னாக் இது பற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

சமீபத்தில் சட்பரி பகுதியில் உள்ள வானபிட்ரி (Wanapitei River) ஆற்றங்கரையில் தண்ணீர் உறைந்தபோது, மிகவும் வித்தியாசமாக பனிக்கட்டிகள் பான்கேக் வடிவத்தில் வட்டம் வட்டடமாக இருந்ததாகச் சட்பரியைச் சேர்ந்த டக் ஜோடோயின் என்பவர் தெரிவித்தார். ஒட்டாவாவில் பனிப் பொழிவின் போது "றோள்ஸ்" வடிவத்தில் பனிக் கட்டிகள் இருந்ததாக டேவிட் பிலிப்ஸ் தெரிவித்தார். குறைந்தது 45 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசினால்தான் மென்மையான பனிப்படலம் உருண்டு உறையும் போது, இப்படி றோள்ஸ் வடிவம் பெற்றிருக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். சிறிய குச்சிகள் வடிவத்திலும் பனி உறையும்போது மாற்றமடைவதுண்டு. "துருவப் பகுதிகளில் இது போன்ற நிகழ்வுகள் நடக்கலாம், ஆனால் இது போன்ற மாற்றங்களை இதுவரை இங்கே கண்டதில்லை" என்று மனிற்ரோபா பல்கலைகழக பேராசியரான யூலியான ஸ்ரோவ் தெரிவித்தார்.



எல்லாப் பொருட்களும் மூலக்கூறுகளால் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பதை அடர்த்தி என்று சொல்வார்கள். அந்தவகையில், பூஜ்ய டிகிரி செல்சியஸில்தான் பனிக்கட்டிகள் உறை-யும் என்பதால், தண்ணீரைவிட அவை அடர்த்தி குறைவாக இருக்கின்றன. அதனால்தான் பனிக்கட்டிகள் தண்ணீரில் மிதக்கின்றன. கனடாவி-ல் பனிக்காலத்தில் ஆறுகள், குளம், குட்டைகள், எரிகள் உறைநிலைக்குச் செல்வது காலாகாலமாய் நடந்து கொண்டே இருக்கின்றது. இக்காலத்தில் இது போன்ற பல வடிவங்களில் பனிக்கட்டிகளைக் கனடாவில் காணமுடியும். கோடை காலத்தை விடப் பனிக்காலத்தை மகிழ்ச்சியோடு விரும்பி வரவேற்கும் பலர் இங்கே இருக்கிறார்கள். பனிக்கால விளையாட்டு வீரர்களும் இதில் அடங்குவர்.




DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6


416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

# எழுத்தாளர் செ. கணேசலிங்கன் காலமானார்



யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டு, தற்போது சென்னை வடபழனியில் உள்ள தனது மகளின் இல்லத்தில் வசித்துவந்த தோழர் கணேசலிங்கன் கடந்த சனிக்கிழமையன்று (04.12.2021, காலை காலமாகி-னார்.

இலங்கை முற்போக்கு இலக்கியத்தின் மிக முக்கியமான ஆளுமையாக விளங்கிய எழுத்தாளர் செ.கணேசலிங்கன், 40க்கும் மேற்பட்ட நாவல்கள் மற்றும் சிறுகதை, சமயம், சமூகவியல், அரசறிவியல், பெண்ணியம், கலை, திறனாய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் 70க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

தோழர் கணேசலிங்கன் அவர்களின் பூதவுடல் சனிக்கிழமை (04.12.2021) பிற்பகல் 5.00 மணியளவில் சென்னையில் தகனம் செய்யப்பட்டது.

-----

*தோழர்செ.கணேசலிங்கம் அவர்களின் ஆளுமையை நினைவு கூரும் வண்ணமாக பி.தயாளன் எழுதிய கட்டுரை கீழே வெளியிடப்படுகின்றது:*

## "ஈழத் தமிழ் நாவல் இலக்கிய முன்னோடி" செ.கணேசலிங்கன்

"கலை, இலக்கியம், நாடகம், வெகுசன ஊடகம், தீண்டாமை, சுரண்டல், வன்முறை, சித்திரவதை, சிறுவர் மீதான கொடுமை, பெண்கள் மீதான கொடுமை, ஆதிக்கம், தேசிய இனப் பிரச்சினையால் தமிழ் மக்கள் குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் தோன்றியுள்ள அவலங்கள். தொழில்மயமாக்கலும், நகரமயமாக்கலும், நவீனமயமாக்கலும் தோற்றுவித்துள்ள மாறுதல்களும், பிரச்சினைகளும், மனித பலவீனங்களை வளர்த்துச் சுரண்டும் சந்தைப் பொருளாதார வியாபாரங்கள். நுகர்வுப் பண்பாட்டின் மனித விரோதப் போக்கு, பன்னாட்டு நிறுவனங்களின் மேலாதிக்கம், நவீன ஏகாதிபத்தியச் சுரண்டலின் பன்முகப் பரிமாணங்கள், உலகமயமாதல் என்ற பெயரில் நடைபெறும் அராஜகம். இப்படியான பல்வேறு விடயங்கள் பற்றிய விளக்கங்களாகவும், விமர்சனங்களாகவும் செ.கணேசலிங்கன் எழுத்துக்கள் அமைந்துள்ளன" எனப் பேராசிரியர் சி.தில்லைநாதன் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

"மனிதனைப் பிணைத்திருக்கின்ற அடிமைச் சங்கிலியைத் தகர்த்தெறிவதற்கான எழுச்சி நசுக்கப்பட்டு, மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு, அவர்களது விடுதலைக்கான போராட்ட உணர்வைத் தட்டி எழுப்பி உத்வேகப்படுத்தும் பண்பு மானிட நேயப்படைப்பாளிகளிடமுண்டு. சமூக, பொருளாதார அரசியல் விடுதலைக்கான போராட்டத்தை ஒரு பெரும் சக்தியாக திரட்டுவதற்கு மக்களுக்கு உத்வேகத்தைக் கொடுப்பவனே மானிடநேயப் படைப்பாளி. தோல்வியிலும், அடிமை மனப்பான்மையிலும் நீண்டகாலமாகப் பீடிக்கப்பட்டு, விரக்தியடைந்த நிலையிலுள்ள மக்களின் ஆத்மாவைத் தட்டி எழுப்பி விழிப்படையச் செய்து போராட்டப் பாதையில் அவர்களை இட்டுச் செல்லும் வல்லமை படைத்தவனே மனிதநேயப் படைப்பாளி".

மேலும், "மனித குலத்திற்கு விசுவாசமாக நடப்பது, மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவது, கசப்பான உண்மையானாலும் அதனைத் துணிவுடன் கூறுவது, மனிதர்களின் உள்ளத்திலே எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை ஊட்டி அதனை உறுதிப்படுத்துவது, அதைக் கட்டுவதிலே அவர்களுக்குள்ள ஆத்மசக்தியைப் பலப்படுத்துவது, உலக சமாதானத்துக்கும், சாந்திக்குமாகப் போராடுவது, எங்கெல்லாம் சமாதானத்துக்கான குரல் ஒலிக்குமோ அங்கெல்லாம் சமாதான வீரர்களை அந்தரங்க சுத்தியுடன் ஆதரிப்பது. முன்னேற்றத்திற்கான உண்மையான நேர்மையான முயற்சியில் மக்களை ஒன்று திரட்டுவது இதுதான் மானிடநேயனின் கடமை. "என்று" டான் நதி அமைதியாகப் பாய்கின்றது" என்ற உலகப் புகழ்பெற்ற நாவலைப்படைத்த மிகையில் ஷொலகோ கூறியதை உள்ளத்தில் ஏற்று இலக்கியம் படைத்தவர் செ.கணேசலிங்கன்.

செ.கணேசலிங்கன் இலங்கையில் யாழ்ப்பாணம் அருகில் உள்ள உரும்பிராய் என்னும் கிராமத்தில் 09.03.1928 ஆம் தேதியன்று, க. செல்லையா-இராசம்மா தம்பதியரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

தமது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் கிராமத்து கிறிஸ்துவப் பள்ளியில் கற்றார். சந்திரோதய வித்தியாசாலையில் ஆறாவது வகுப்பு பயின்றார். பின்னர், யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் சேர்ந்து எச். எஸ்.சி. பயின்று சிறப்பாகத் தேர்ச்சி பெற்றார். மேலும், இவர் லண்டன் மெட்ரிகுலேசன் தேர்விலும் தேர்ச்சியடைந்தார். நாள்தோறும் காலையில் வயலில் விவசாய வேலைகளை செய்த பின்னர், கல்லூரிக்கு நடந்தே சென்று படித்தார். இவர் கல்வியில் மிகத் திறமை பெற்ற மாணவராக விளங்கியதால் சிறப்பு வகுப்பேற்றம் செய்யப்பட்டார்.

எச்.எஸ்.சி. எனும் தேர்வில் தேர்ச்சியடைந்த பின் 1950 ஆம் ஆண்டு இலங்கை அரசின் பாதுகாப்புத்துறையில் எழுத்தராக பணியில் சேர்ந்து கொழும்பு மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களில் 1981 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார்.

மகாத்மா காந்தி 30.01.1948 அன்று படுகொலை செய்யப்பட்டதையொட்டி தமது உரும்பிராய் கிராமத்தில் நண்பர்களுடன் இணைந்து நினவேந்தல் கூட்டம் நடத்தினார். அந்த நினைவேந்தல் கூட்டத்தில், "மகாத்மா காந்தியின் உடல் யமுனா நதிக்கரையில் இப்போது எரியூட்டப்பட்டிருக்கும், அவர் மறைந்தாலும் அவரது கொள்கைகளை நாம் கடைபிடிப்பதனால் இங்கே நிலவும் சாதிவெறி ஒழிக்கப்பட வேண்டும். இங்குள்ள கோவில்கள் தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கூறப்படும். மக்களுக்குத் திறந்துவிடப்பட வேண்டும்." என்று தீவிரமாக உரையாற்றினார்.

மேலும் "மகாத்மா காங்கிரஸ்" என்னும் சங்கத்தை அமைத்து அதன் செயலாளராகப் பணியாற்றினார். அச்சங்கத்தின் மூலம் தீண்டாமை ஒழிப்புக்காகவும், கோவில்களில் அனைத்து சாதி மக்களும் வழிபட உரிமை வேண்டும் என்பதற்காகவும் பரப்புரையில் ஈடுபட்டார்.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1949 ஆம் ஆண்டு இந்திய அரசால் தடைசெய்யப்பட்டது. அப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் முக்கியமாணவராக விளங்கிய ப.ஜீவானந்தம் தோணி மூலம் கோடியக்கரை வழியாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். செ.கணேசலிங்கனும், குலவீர சிங்கமும் ப. ஜீவானந்தத்தை அழைத்துக் கொண்டு உரும்பிராய் கிராமத்திற்குச் சென்றனர். அக்கிராமத்தில் தீண்டாமை ஒழிப்பு குறித்து தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியி-ல் கூட்டம் நடத்தினர். அக்கூட்டத்தில் ப. ஜீவானந்தம் உரையாற்றினார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கார்த்திகேயனின் தொடர்பு செ.கணேசலிங்கனை மார்க்சிஸ்ட் சிந்தனையுடையவராக்கியது. மார்க்சிய பொருள்முதல்வாத சிந்தனையால் பெரி-தும் கவர்ந்து ஈர்க்கப்பட்டார். மார்க்சிய தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு கற்றறிந்தார்.

கொழும்பில் 1956 ஆம் ஆண்டு உலக சமாதான மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு உலகப் புகழ்பெற்ற சிலி நாட்டுக்கவிஞர் பாப்லே நெருடா வருகைபுரிந்தார். அவரை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பில் பிரதான வீதியில் உள்ள மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றிட ஏற்பாடு செய்தது. அக்கூட்டத்திற்கு செ.கணேசலிங்கன் தலைமை தாங்கினார் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

"தினகரன்" இதழில் 1950 ஆம் ஆண்டு "மன்னிப்பு" எனும் சிறுகதை எழு-தியதன் மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமானார்.

நல்லவன், சங்கமம், ஊமைகள், காதல் உறவல்ல - பகைமை உறவு, ஒரே இனம், கொடுமைகள் தாமே அழிவதில்லை. செ.கணேசலிங்கன் சிறுகதைகள் முதலிய சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

செ.கணேசலிங்கனின் சிறுகதைகளில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வர்க்கப் பிரச்சனைகள் குறித்தும், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் போலித் தனங்கள். ஊழல்கள், கொடுமைகள், அடக்குமுறைகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. அடக்கு முறைக்கும், சுரண்டலுக்கும், அநியாயங்களுக்கும் எதிராக மக்கள் போராட வேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், பெண்களின் பிரச்சனைகளை முன் வைத்தும் சிறுகதைகள் எழுதியுள்ளார். பெண்கள் சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்படும் நிலையை, பொருளாதார ரீதியாக மட்டுமின்றிப் பாலியல் ரீதியா-கவும் பல்வேறு சுரண்டல்களுக்கு உட்படுகிற நிலையை, உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமையான அவல நிலையில் துன்புற்று அல்லற்படும் துர்ப்பாக்கியத்தை இவரது சிறுகதைகள் சித்தரித்துக் காட்டுகின்றன.

"இலக்கியம் வாழ்க்கையை அதன் வரலாற்றோடும், வளர்ச்சியோடும் ஒட்டிச் சித்தரிக்க வேண்டும். தனி மனித வாழ்வு சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்து இருப்பதையும் சமுதாயத்தின் வளரும் தேயும் சக்திகளைப் புலப்படுத்துவதையும் சித்தரிப்பதே உயர்ந்த இலக்கியமாகும். இத்தகைய இலக்கியம் படைப்பதற்கு எழுத்தாளன் முதலில் மனித இனத்தை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அவனுக்கு எதிர்காலத்தைப் பற்றிய தெளிவும் நம்பிக்கையும், திராணியும், பொறுப்புணர்ச்சியும் இருத்தல் வேண்டும் "என" ஒரே இனம்" எனும் சிறுகதை-த் தொகுப்பில் செ.கணேசலிங்கன் இலக்கியவாதியின் சமூகக் கடமையை தெளிவுபடுத்தியுள்ளார்.

செ. கணேசலிங்கன் சுதந்திரன், தினகரன், புதுமை இலக்கியம், சாந்தி, சரஸ்வதி, தாமரை முதலான இதழ்களில் சிறுகதைகள் எழுதியுள்ளார். இவரது, "சாயம்" என்ற சிறுகதை இலங்கைச் சிறுகதை தொகுப்பில் இடம்பெற்று, அத்தொகுப்பு ருஷ்ய மொழியில் வெளியிடப்பட்டது.



"சாயம்" என்னும் சிறுகதையில், "தேயிலையின் நிறம்" தொழிலாளர்களின் தோலின் நிறம். அதனுள்ளே ஒடுவது இரத்தம். தேயிலைச் சாயத்தின் நிறம் இரத்தம். வெளிநாடுகளில் தேயிலை-யை விற்றுப் பணம் திரட்டுகின்றீர்கள் என்று எண்ணுங்கள். தேயிலைச் சுவைப்பவர்களெல்லாம் எமது இரத்தத்தைச் சுவைக்கிறார்களென்னு கருதுங்கள். தேயிலைக்காகத் தமது இரத்தத்தைத் தானம் செய்து இரத்தம் சுண்டிப்போய் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கும் எம் வர்க்கத்தினரை வெளியே பாருங்கள் - என சுரண்டப்பட்ட ஏழைத் தொழிலாளர்களின் உதிரத்தால் விளைந்ததே நாம் சுவைக்கும் தேயிலை என்பதை சித்தரிக்கிறார்.

"சீக்கரமாய் வந்துவிடு" என்னும் சிறுகதையில் வரும் ஒரு உரையாட-லில், "ஆசியாவிலேயே எங்கள் நாட்டிலேயே ஜனநாயகம் நிலவுவதை மேல் நாடுகளெல்லாம் ஒப்புக் கொள்கின்றன".

அதைப்பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? எனக் கேட்கிறார் ஒருவர், அதற்கு "ஏழைகள் அப்படியே இருக்கிறார்கள். தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகத் தெரியவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடைவ அவர-வர் விரும்பிய ஒரு பெட்டிக்குள் ஓட்டுப் போடச் செய்துவிட்டு ஜனநாயக ஆட்சி நடப்பதாகச் சொல்லுவதால் என்ன பயன் ? உங்கள் நாட்டிலுள்ள சாதாரண மனி-தன் ஒருவனைப் பிடித்து உனக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடைவ ஓட்டுப் போடும் சுதந்திரம் வேண்டுமா அல்லது நிரந்தரமான தொழிலும் வசதியான வீடும் வேண்டுமா என்று கேட்டுப் பாருங்கள்" என இன்றைய சமூக அரசியல் நிலை-மையை படம் பிடித்து காட்டுகிறார்.

செ.கணேசலிங்கன் மலையாகத் தோட்டத் தொழிலாளர்களது பிரச்சனைகளை மையமாகக் கொண்டு சில சிறுகதைகளை எழுதியுள்ளார். மலையகத் தோட்டத் துரைமார்களும் பிற அதிகாரிகளும் தீண்டாமைக் கொடுமைகள் குறித்த செய்திகளைக் காட்சிப்படுத்துவதுனூடாக கதையம்சம் கட்டமைக்கப்பட்டுள்ளது. ...

இலங்கை அரசு "நீண்ட பயணம்" நாவல், யாழ்ப்பாணக் கிராமங்களில் நிகழும் தீண்டாமைக் கொடுமைகள் குறித்த செய்திகளைக் காட்சிப்படுத்துவதுனூடாக கதையம்சம் கட்டமைக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட சாதி மக்களை கோயில்களில் கயிறு கட்டி எல்லைப் படுத்துதல். பொதுக்கிணற்றில் குடிநீர் எடுக்க விடாமல் தடுத்தல். சட்டை முதலிய மேலாடைகள் அணியவிடாமல் தடுத்தல். பெயர் பதிவின்போது கந்தசாமியைக் கந்தன் என்றும், வேலுப் பிள்ளையை வேலன் என்றும் பதிவு செய்தல். இப்படியாக உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் மீது நிகழ்த்திய அடக்குமறை கொடுமைகள் பற்றிய விவரணங்களுடன் இந்நாவல் விரிகின்றது.

"நீண்ட பயணம் நாவல் தமிழ் நாவல் உலகில் புதிய வடிவமாக அமைகி-றது. நிலவுடைமைக் கொடுமையின் சாதியம் மற்றும் உழைப்புச் சுரண்டல் ஆகிய தன்மை, இயல்பாக குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டு மொழியில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. மேலும், உழைக்கும் மக்களின் விடுதலைக்கான ஆக்க இலக்கியமாக "நீண்ட பயணம்" நாவலை உருவாக்கியுள்ளார் என்று கருத முடியும்." என சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறை பேராசிரியர் வீ.அரசு தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

(தொடர்ச்சி _19_ பக்கம்)

(_18__ பக்கத் தொடர்ச்சி)

"நீண்ட பயணம்" நாவலுக்கு இலங்கை அரசு 1966 ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசு வழங்கியது.

"செவ்வானம்" இந்நாவல் தமிழகத்தில் புரட்சிர இலக்கியத்தை அறிமுகப்படுத்தியது. அரசியல், பொருளாதாரம், சமூகப் பின்னணியிலேயே நாவல் விரிகிறது.

"சமகால அரசியலின் நேரடி விமர்சனம் என்ற வகையிலும், உழைக்கும் வர்க்கத்தின் அரசியலை முன்னெடுத்த முக்கிய ஆக்கம் என்ற வகையிலும் "செவ்வானம்" நாவலுக்கு ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் மட்டுமின்றிப் பொதுவான அனைத்துத் தமிழ் கூறும் நல்லுலகின் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க வரலாற்று முக்கியத்துவம் உள்ளது" என செ. கணேசலிங்கனின் "செவ்வானம்" நாவல் குறித்து பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் பாராட்டி புகழ்ந்துரைத்துள்ளார். "சடங்கு" நாவல் தனிமனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், போலித்தனமான சடங்கு சம்பிரதாயங்களைக் கட்டிக் கொண்டு உழலும் நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதிகளின் அறிவீனத்துக்கு சாட்டையடி கொடுக்கிறது.

"சடங்கு" நாவலில் பல விஷயங்களை செ. கணேசலிங்கன் எள்ளி நகையாடுகிறார். மணமக்களை ஒன்று சேர்த்து வைப்பதற்கு முன்னர் பழமைவாதிகள் திருமணத்தில் படாடோபத்தையும், ஆடம்பரத்தையும், மரபுகளையும், சடங்கு சம்பிரதாயங்களையும் கவனிக்கின்றனர். மணமக்களின் மன இசைவு, கருத்தொற்றுமை ஆகியவற்றைக் கவனிப்பதில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

"சடங்கு (சுவையடட) என்பது உண்மையில் ஒரு சமூக நடைமுறையே. அதற்கு ஒரு பண்பாட்டு வலுவுண்டு சடங்குகள் மூலமே மக்கள் தங்கள் சமூக இருப்பை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். சடங்கில் ஒருவரே ஆற்றுபவராகவும், பார்வையாளராகவும் இருக்கும் சுவாரசிய நிலையுண்டு. இந்த நிலைதான் சடங்குக்கும் சமூக இருப்புக்குமான தொடர்பை இறுகப்பிணைத்து விடுகிறது." என பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி கருத்துரைத்துள்ளார்.

"திருமணம் என்பது இருவரது மனமொத்த வாழ்வின் பிணைப்பாகக் கருதப்படாது இரு குடும்பங்களின் இணைப்பாக எண்ணப்படுகிறது. இது இங்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் பொதுவானது, வாழப்போகும் இருவரது அக உணர்வுகள் அங்கு புறக்கணிக்கப்பட்டு, புறச்சடங்குகள் மட்டுமே உயர்வாக நடத்தப்படுகின்றன. இப்போக்கினை திருமணச் சடங்கின் போது மட்டுமல்ல மரணச் சடங்கின் போது பார்க்கலாம்".

"ஒருவரின் அகால மரணத்தின் அடிப்படைக் காணங்களைக் கூட எவரும் ஆராய்வதில்லை. மரணச் சடங்குகளை முறைப்படியும் சிறப்பாகவும் செய்வதிலேயே ஆர்வம் காட்டுவர். மரணத்தின் காரணங்களை ஆராய்ந்து அந்நிலை மீண்டும் நிகழாது காக்க முன்னிற்பவனே மனிதன் மனிதாபிமானமுள்ள வீரன் அவனே புதிய உலகின் சிருஷ்டி கர்த்தா" என "சடங்கு" நாவலின் முன்னுரையில் செ. கணேசலிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

"கணேசலிங்கனது நாவல்கள் கடந்த பத்தாண்டுக் கால ஈழத்து வரலாற்றைச் சித்தரிக்கின்றன் அதே நேரத்தில் அவ்வரலாற்றின் விளைபொருளாகவும் அமைந்து காணப்படுகின்றன. திட்டத் தெளிவான வரலாற்று வளர்ச்சிக் கிரமத்தைக் காட்டாதுவிடினும், நீண்ட பயணம், சடங்கு, செவ்வானம் ஆகிய மூன்று நாவல்களும் நிலமானிய அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்பிற்கு மாறும் சமுதாயத்தைச் சித்தரிக்கின்றன. கிராமப்புற உழைப்பாளிகளிலே துவங்கி, நகர்ப்புற கைத்தொழிலாளரின் விழிப்புடன் முடிவடைகின்றன. அந்த வகையில் இவற்றை மூன்று நாவல்களின் தொகுதி எனலாம்." என "செவ்வானம்" நாவலின் முன்னுரையில் பேராசிரியர் கலாநிதி. க.கைலாசபதி குறிப்பிட்டுள்ளார்.

"போர்க்கோலம்", "மண்ணும் மக்களும்" ஆகிய நாவல்கள் தமிழக அரசு நூலகங்களில் வைக்கப்படாமலும், தமிழகத்தில் விற்பனை செய்யப்படாமலும் தடை செய்யப்பட்டமை, இவரது எழுத்துக்களின் செல்வாக்கு, தாக்கம், ஈழத்தை மட்டுமின்றித் தமிழகத்தையும் அச்சுறுத்தியதை நமக்கு உணர்த்துகிறது. அதே வேளை இந்நாவல்கள் தமிழக இடதுசாரி இலக்கிய இயக்கத்திற்கு பெரும் உந்து சக்தியாகப் பயன்பட்டன. "போர்க்கோலம்" நாவல் சாதியக் கொடுமைகளையும், நிலப்பிரபுத்துவ ஆகிக்கத்தையும் தோலுரித்து காட்டுகிறது.

"நாங்கள் உங்களிடம் பிச்சை கேட்கிறோம் என்று நினைக்க வேண்டாம். எமது உரிமைகளையெல்லாம் நாங்கள் உங்களிடமிருந்து தயவோடு எதிர்பார்க்கவில்லை. கோவில், தேத்தண்ணிக்கடைகள் (தேநீர் கடைகள்) போன்றவையெல்லாம் பொது இடங்கள். மனித இனமான எங்களுக்கும் அங்கே நுழைய உரிமை இருக்கு. நாமாகவே நுழைவோம். இப்போது எமக்குப் பயந்து பூட்டி வைக்கிறீர்கள். உந்தப் (உங்கள்) பூட்டையெல்லாம் உடைத்து நாங்கள் நுழையிற காலம் தூரத்திலில்லை." (போர்க்கோலம் நாவல் பக்கம் 49).

முதலாளித்துவம் தன் சுயநல இலாபத்திற்காக இன்றைய உலகமக்களின் நலனையும், எதிர்கால மக்களின் நல் வாழ்வையும் கருத்திற் கொள்ளாது பூமியின் இயற்கை வளங்களை அத்துமீறி சூரையாடி வருகிறது. மேலும், உலகின் 25 சதவீத மக்களுக்காக இயற்கை வளங்கள் பன்னாட்டு நிறுவனங்களால் அழிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல், மாசுபடுதல், சுகாதாரக்கேடுகள் முதலியவற்றை உருவாக்கிறது. இப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாவல் "நரகமும் சொர்க்கமும்" ஆகும்.




சுரண்டலின் மூலம் தனிச்சொத்துடைமையைக் காப்பாற்றி, உற்பத்திச் சாதனங்களைத் தன்னுடையதாக்கி, வளர்ந்து வரும் முதலாளிகள் ஒருபுறம், அவர்களின் சுரண்டலைத் தாங்க முடியாது நசிந்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள் மறுபுறம், இவர்கள் இருவரிடையேயும் அகப்பட்டு, தரையை மறந்து தாரகைகளைப் பிடித்து மாலையாக்க விரும்பும் மத்தியதர வர்க்கத்தினரின் வளர்ச்சியையும், வாழ்வையும் யதார்த்தமாகக் காட்டக்கூடிய நாவல் ஒன்று எழுது முற்பட்டேன் "அந்த நாவல் தான் - தரையும் தாரகையும்" என அந்நாவலின் முன்னுரையில் குறிப்பிட்டு உள்ளார்.

உலக அளவில் ஏகாதிபத்தியம் தனது பண்ட விற்பனைக்கு எவ்வாறு சந்தையை உருவாக்குகிறது. கிராமப்புறத்தில் மக்கள் தங்கள் சொந்த உழைப்பில் தயாரித்து பயன்படுத்திய சீயக்காய்த் துளைக்கூட ஏகாதிபத்திய உலகம் எவ்வாறு ஒரு சந்தைப் பண்டமாக மாற்றுகிறது. பண்ட உற்பத்தியில், விற்பனையில் பெண் எப்படி சுரண்டப்படுகிறாள் என்பதை "உலகச் சந்தையில் ஒரு பெண்" என்ற நாவல் மிக அழகாகச் சித்தரிக்கிறது.

"இரண்டாவது சாதி" நாவல், பெண்களை முதலாளித்துவம் கவர்ச்சிப் பண்டமாக்கி சந்தைப்படுத்தலையும், பாலியல் பேதத்தை முன்வைத்து பெண்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதையும், பெண்களின் உரிமைகளை மறுப்பதையும் விவரிக்கிறது. மேலும் ஆண் சாதியிலும் பார்க்க மனித உயிரினத்தின் படைப்பாற்றல் கொண்டவளாக பெண்கள் இருந்த போதும் உலகம் முழுவதும் இரண்டாவது சாதியாகவே கருதப்படுகிறாள் என்பதை விவரிக்கிறது.

"கோடையும் பனியும்" இந்நாவல் மொழி, மதம், பண்பாடு, நாகரீகம், கலாச்சாரம், அரசியல் முதலியவைகளின் அடிப்படைகள், சமூகத்தில் நிலவும் செல்வாக்கு, அவைகளின் போலித் தன்மைகள் குறித்து பேசுகிறது.

"இலட்சியக் கனவுகள்" இந்நாவல் இலங்கையில் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பலம் மற்றும் பலகீனம் பற்றி விவரிக்கிறது. மேலும், சிங்கள இராணுவம் தமிழீழத்திற்காகப் போராடியவர்களையும், தமிழ் மொழி பேசும் குடிமக்களையும், தமிழ்ப் பெண்களையும் கொடுமை செய்து, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொன்றழித்ததை விரிவாகப் பதிவு செய்துள்ளது.

"கூட்டுக்கு வெளியே" இந்நாவலில் தனிச் சொத்துடைமையின் பல்வேறு அம்சங்கள் வெவ்வேறு வடிவங்களில் இடம் பெறுவதை விளக்குகிறது. அதாவது, மனிதன் தனது பாதுகாப்பு, தனது குடும்பத்தின் பாதுகாப்பு எனத் தனிச் சொத்தைச் சேர்க்கிறான். அதற்கு எல்லையற்று, போட்டா போட்டிச் சமூகத்தில் தனிச் சொத்து சேர்ப்பதே தனது வாழ்க்கை முழுவதும் குறிக்கோளாகக் கொள்கிறான். மேலும், எப்படியும் பணம் சேர்க்கலாம் என்ற சுயநலப் போக்கும் வலுப்பெற்றது. லஞ்சம், ஊழல், திருட்டு, கொலை, கொள்ளை மூலம் பணம் சேர்த்து, சமூக அந்தஸ்து பெறுவோர் கூட்டம் பெருகிவருகிறது. இதனால் நேர்மை, வாய்மை, நாணயம், ஒழுக்கம், பண்பாடு மனிதாபிமானம் மறைகிறது. அதனால் தனது சுதந்திரச் சிந்தனையை, தனது ஆத்மாவை இழப்பதை மனிதன் உணர்வதில்லை. சுயநலம் அவனது குடும்பத்தோடு ஒன்றிவிடுகிறது. தனிச் சொத்து சேர சேர சமூக விழிப்புணர்வு குன்றிவிடுகிறது என்பதை எடுத்துரைத்துள்ளார்.

"ஒரு பெண்ணின் கதை" இந்நாவல் உயிரியல், உளவியல், சமூக வாழ்வியல் அடிப்படையில் ஆணுலகும், பெண்ணுலகும் வேறுபடுவதையும் விவரித்துக் கூறுகிறது. இது ஒரு பெண்ணின் கதை அல்ல. பெண்ணினத்தின் பயங்கரமான கதை. பெண்கள் பற்றிய பல பொய்மைகளை இந்நாவல் உடைத்தெறிகிறது.

"பொருளாதார நிலையில் வீட்டிலே பெண்ணின் உழைப்பு மதிக்கப்படுவதில்லை. கூலி தரப்படுவதில்லை. வெளியே உழைப்பினும் கணவன் குடும்பத்தினரது கட்டுப்பாட்டில் அவளது கூலி அபகரிக்கப்படுகிறது. அரசியலில் வாக்குரிமை இன்று வழங்கப்பட்டபோதும் ஆண் பிரதிநிதிகளுக்கே பெண்ணும் வாக்களிக்க நேரிடுகிறது. அமைச்சரவையிலோ, நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ அடிமைகளின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டிய நிலையுள்ளது. பெண்களுக்கு கற்பிக்கப்படும் கருத்தியல்கள், வேலைப்பணிகள் வேறாக உள்ளன. ஆண்கள் படைத்த கடவுள், மதப் போதனைகளே அவர்களுக்கு ஊட்டப்படுகின்றன. ஆணாதிக்கம், வன்முறையுடன் அவளை அடிமைப்படுத்துகிறது. குடும்பம் என்ற தனித்தனிச் சிறைகளில் பெண்கள் அடைக்கப்பட்டிருப்பதால், பாட்டாளிகளைப் போல் ஒன்று திரண்டு, பொருளாதார அரசியல் மாற்றத்திற்காகப் போராட முடியாதுள்ளது. கர்ப்பம், மகப்பேற்றுத் துன்பம், வேலைப் பிரிவினைகள் வேறு பெண்களை விரட்டுகின்றன" என நாவலின் முன்பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து சமூக உற்பத்தியில் ஈடுபட்டு பொருளாதார விடுதலையைத் தேட வேண்டும். பாட்டாளிகளுடன் இணைந்து விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு புதிய சமத்துவ சமுதாயத்தைப் படைக்க முன் வரவேண்டும். இன்றைய நிலையில் ஆண்கள், பெண்களை நெருங்கிய நண்பராக, தோழராக ஏற்க வேண்டும். ஆண்கள் இதனால் இழக்கப்போவது ஏதுமில்லை. உலகின் பாதிப்பங்கினரான பெண்கள் சில ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டதால் மனித ஒடுக்கம் சமூகம் இழந்தவை எண்ணிலடங்காதவை என்பதை இந்நாவலில் எடுத்துரைத்துள்ளார்.

"ஒரு குடும்பத்தின் கதை" இந்நாவல் உலகத்தில் சராசரியாக ஆண்கள் எட்டு மணி நேரம் உழைக்கும் போது பெண்கள் பதினைந்து மணி நேரம் உழைக்க நேரிடுகிறது என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. மேலும், அனைத்து மதங்களும் பெண்களின் விடுதலைக்கும், சம உரிமைக்கும் தடையாக உள்ளன. கூலி தரப்படாத விரக்தியான வேலைகளில் பெண்கள் ஈடுபடுத்தப்படுவதால், சமூகத்தின் உயர்வான நிலையை மறந்து தாழ்வு மனப்பான்மைக்கு தள்ளப்படுகின்றனர் என்பதை விவரிக்கிறது.

"ஈனத்தொழில்" இந்நாவல் சார்ந்த சில குறிப்புகளில் செ.கணேசலிங்கன் கீழ்க்கண்ட கருத்தை பதிவு செய்துள்ளார். "இன்று ஆளும் வர்க்கத்தின் வன்முறை வடிவமான அரசுகள் கூலிப்படைகளை வைத்து மனித இனத்தை அச்சுறுத்துவதோடு கொலையும் செய்யும் ஈனத் தொழிலைச் செய்வதைக் காண்கிறோம். இராணுவம் என்ற கூலிப்படையைத் திரட்டி, நவீன ஆயுதங்கள் கொடுத்து, மனித இனத்தின் ஒரு பகுதியினரைக் கொல்லும் ஈனத் தொழிலில் அரசுகள் ஈடுபட்டுள்ளன. மிக ஈனத்தனமாக மனிதர்களைக் கொலை செய்வதற்கு சட்ட ரீதியாக அனுமதி அளித்துவிட்டு இராணுவப் படையினரிடம் ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது வியப்பானதே".

"நீ ஒரு பெண் "இந்நாவலில்," பொருளாதார, அரசியல், சட்டம் சார்ந்த சமத்துவம் வேண்டுவது மட்டுமல்ல, பெண்ணினத்திடையே ஒரு கலாச்சாரப் புரட்சியும் ஏற்பட வேண்டும். "நீ ஒரு பெண்" என இனங்காட்ட இயலாதபடியாக ஆண்கள் போன்று புறநிலை அணிப்படுத்தல்மட்டுமல்ல, தமது உடல் தமது சொத்து பிறருடையது அல்ல என்ற அகநிலை விழிப்புணர்வும் ஏற்படுதல் வேண்டும். பெண்ணினத்திடையே அடிமை நிலையைவிட்டு சமத்துவ நிலையைக் காண விழிப்புணர்வு ஏற்படுத்துவதே என் முக்கிய நோக்கமாகும்." என இந்நாவல் சார்ந்த குறிப்புகளில் தமது நோக்கத்தை அறிவித்துள்ளார்.

"அடைப்புகள்" இந்நாவலை தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறார் உழைப்புச் சுரண்டலை முன் வைத்து படைத்து உள்ளார். இந்நாவலில் சில குறிப்புகள் என்ற பகுதியில், "சிறார் உழைப்பு என்பது வயது வந்தவரின் வாழ்க்கையை உரிய காலத்தின் முன்னர் சிறார் கடைபிடிப்பது. இந்நிலை உடல் நலனையும், மூளை வளர்ச்சியையும் பாதிப்பது. சில வேலை குடும்பத்திலிருந்தும் பிரிப்பது. நல்ல எதிர்காலம் கிட்டாது, கல்வி, தொழில் நுட்பப் பயிற்சிக்கும் வாய்ப்பில்லாது போய்விடுகிறது." என உலகத் தொழிலாளர் கழகத்தின் அறிக்கை கூறுகிறது. ஆனால், நடைமுறையில் அவை பின்பற்றப்படுவதில்லை.

சிறார் உழைப்பு நிலவுவதற்கு முக்கிய காரணங்கள், கிராமங்களில் நிலவும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், கல்விக்கு வாய்ப்பின்மை, அறியாமை, விழிப்புணர்வின்மை ஆகியவைகள் முதன்மையாக விளங்குகின்றன என்பதை எடுத்தியம்பி உள்ளார்.

தீப்பெட்டி மருந்துகளால் ஏற்படும் உடல் நலப் பாதிப்புகள், காற்றோட்டமில்லாத தொழிற்சாலைகள், மாசுபட்ட காற்றை சுவாசிப்பதால் மயக்கம், வாந்தி, மூச்சுத் திணறல், சுவாசக்கோளாறு, நுரையீரல் பாதிப்பு முதலிய நோய்கள் ஏற்படுகிறது. விபத்தினால் உயிரிழப்பு ஏற்படுதல், காயங்கள் ஏற்பட்டு ஊனமடைதல், தொடர்ந்து குனிந்து கொண்டே வேலை செய்வதால் முதுகுவலி உண்டாகுதல், பாதுகாப்பில்லாத குடிநீர், நல்ல சத்துணவு இன்மை, குடிசை வீடுகள், தரமான கழிப்பறைகள் இல்லாதது, நோய் எதிர்ப்புச் சக்தியின்மை, நல்ல மருத்துவ வசதியின்மை ஆகியவற்றால் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறார்கள் மிகவும் பாதிக்கப்படுவதையும், மிகக் குறைந்த கூலிக்கு உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவதையும் இந்நாவலில் விரிவாக விவரித்துள்ளார். மேலும் சமூகத்தில் வறுமை நிலையை ஒழிக்காமல் சிறார் தொழிலாளர் என்ற பிரச்சனையைத் தீர்க்க முடியாது, அனைத்துச் சிறார்களுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

"தாய் வீடு" இந்நாவலில் பெண்ணியம் குறித்து பேசப்படுகிறது பெண்கள் மீது மூன்று சுமைகள் ஏற்றப்படுகின்றன. அதாவது உழைப்பு, வீட்டு மனைவி, தாய் ஆகியச் சுமைகளாகும். நில உற்பத்தி வளர்ச்சியடைந்து தனிச் சொத்துடைமை ஏற்பட்டதும் ஆணினம் தனிச் சொத்தாக வீட்டுக்குள் பெண்ணையும் கொண்டனர். குடும்பம் என்ற நிறுவனம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. எழுத்திலுள்ள சட்டங்களைக் காட்டிலும், எழுதாச் சட்டங்கள் பலம் வாய்ந்தவையாக உள்ளன. மனித இனம் பெண்ணடிமைத் தனத்துடன் தோன்றவில்லை. அதன் வரலாறு அடிமைத்தளையுடன் முடியப் போவதுமில்லை என்ற பெண்விடுதலை கருத்துக்களை இந்நாவல் முன்வைக்கிறது.

(தொடர்ச்சி _20_ பக்கம்)

(_19_ பக்கத் தொடர்ச்சி)

"நான்கு சுவர்களுக்குள்" இந்நாவல் குடும்பத்தில் நடைபெறும் வன்முறையை உலகளவில் பொதுமைப் படுத்திய போதும், இந்தியப் பெண்கள் மீதான வன்முறையையே சுட்டிக் காட்டுகிறது. முக்கியமாக நான்கு சுவர்களுக்குள் ஒடுக்கப்பட்ட குடும்ப அமைப்பு அது உலக நாகரிகம் சின்னமாக, புனிதமாக இன்றும் பேணப்படுகிறது. மதம், பரம்பரையான பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகள், இவற்றைப் பேணிக்காப்பாற்றும் அரசுகள் உள்ளன. கலாச்சாரம் சார்ந்த சட்டங்கள் அரசால் இயற்றப்படும் சட்ட விதிகளைக் காட்டிலும் பலம் வாய்ந்தவைகளாக உள்ளன என்பதை நாவலாசிரியர் விவரித்துள்ளார்.

"சிறையும் குடிசையும் "இந்நாவல் பெருநகரங்களில் அமைந்துள்ள சேரிப்பகுதிகள், நாகரிக நகரங்களை ஒட்டியுள்ள சிறைகள் எனச் சித்தரிக்கிறது. ஆரம்பத்தில் மேல்நாடுகளில் குற்றம் செய்தவரைத் திருத்தும் நோக்குடன்" திருத்தல் வீடுகள்" அமைக்கப்பட்டன.

கைதிகளைத் தனிக் கொட்டடியில் அடைப்பது உடலை மட்டுமல்லாமல் மூளையையும், உளவியல் ரீதியாகப் பாதிப்படையச் செய்வது பற்றி முதலாளித்துவ அரசுகள் கவலைப்படுவதில்லை. குற்றங்களுக்கு தண்டனையல்லாது மனிதருக்கு உடலுக்கும், மூளைக்கும் தண்டனை தருவதாகும். "கம்பி எண்ணுவது என்ற மரபுச் சொல்லும் அதன் பின்னரே ஏற்பட்டது.

ஒரு நாட்டில் லட்சம் மக்களுக்கு எத்தனை பேர் சிறையில் உள்ளனர் என்பதை வைத்து அந்நாட்டின் பண்பாடு, நாரிகத்தை கணிக்க முடியும் என்பது சமூக ஆய்வாளர்களின் கூற்று.

வேலையற்றவரை வெளியேயும் உள்ளேயும் வைப்பதன் மூலம் நாட்டின் சமூகத்து உழைப்பாளரைச் சமநிலைப்படுத்தவும் முடிகிறது. சிறைப்பட்டவரின் உழைப்புக்குக் குறைந்த கூலியே வழங்கப்படுகிறது. அவர்கள் சிறையில் தொழிற்சங்கம் அமைத்துப் போராட முடியாது. சிறகொடிந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், சிறையில் உள்ளவர்கள் வாக்குரிமையையும் இழந்து விடுகின்றனர். சிறைச் சாலையில் உள்ள நடைமுறைகள், கொடுமைகள், வன்முறைகள் மற்றும் மதத்திற்கும், சட்டங்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை வரலாற்று ரீதியாக இந்நாவல் எடுத்துரைக்கிறது.

"வன்முறை வடுக்கள்" இந்நாவல், வதை என்பது உடலால் மட்டும் ஏற்படுவதல்ல, மூளையிலும் ஏற்படுகிறது. உடல் துன்பமும் மூளையையே பாதிக்கிறது. அவ்வேளை பிற சிந்தனைகள் ஏற்பட மறுக்கின்றன. சத்துணவில்லாத குழந்தைகளும், தக்க மருத்துவ வசதியின்றி ஏழைகளும் இயற்கையாக மரணமடைவதில்லை வன்முறையால் கொல்லப்படுகிறார்கள் என்பதே உண்மை. மனிதனைக் கொல்வதற்காகத் துப்பாக்கிகளுக்கும், குண்டுகளுக்கும் அரசு செலவழிக்கும் பணம் குழந்தைகளின் சத்துணவிற்கும், ஏழைகளின் உணவுக்கும், மருத்துவத்துக்கும் செலவழிக்கப்படுவதில்லை. இதனால் குழந்தைகளும், ஏழைகளும் மறைமுகமான வன்முறையால் கொல்லப்படுகின்றனர். இந்த சமூகப் பிரச்சினையை முன்வைக்கிறது இந்நாவல்.

"விலங்கில்லா அடிமைகள்" இந்நாவல் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையால் இலங்கைத் தமிழரின் குடும்ப அமைப்பில் சமூக அமைப்பில் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு, நாகரிக, நவீன உலகில் வாழ்கிறோம் என நம்பிக் கொண்டிருப்பவர்களும் அறிந்து உணராத அளவில் பல்வேறு வடிவங்களில் வியாபித்திருக்கும் அடிமை நிலையை விரிவாக அலசுகிறது.

"போட்டிச் சந்தையில்" இந்நாவல் உலகமயக் கொள்கைகளால் எவ்வாறு பெண்கள் சுரண்டப் படுகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டது. பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் பண்ட விற்பனையில் பெண்களை ஈடுபடுத்தி போட்டிச் சந்தையின் கால்நடைப் பிராணியாக்குகிறது. பெண்கள் அடிமை நிலைக்கும், பாலியல் சுரண்டலுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள் என்பதை சித்தரிக்கிறது.

"கவர்ச்சிக் கலையின் மறுபக்கம்" நாவலில் சினிமா என்ற கவர்ச்சிக் கலையின் மறுபக்கத்தில், திரைமறைவில் நடைபெறும் "நாடகங்களை" ஓரளவு சுட்டிக்காட்டுகிறார். மேலும், திரைப்படங்களில் மக்களின் சமூகப் பிரச்சனைகள், சமூக வளர்ச்சியை ஒட்டிய போராட்டங்களைப் பிரதிபலிக்காமல் பார்வையாளரின் விழிப்புணர்வை மழுங்கடிக்கவே பாலியலும், வன்முறையும் முதன்மைப்படுத்தப்படுகிறது. பாலியலும், வன்முறையும் பாசிச அரசியலுக்கு வாய்ப்பான கோட்பாடாகும் என்பதையும் எடுத்துரைத்துள்ளார். அதனால் தான் தமிழக மக்கள் தங்கள் முதல்வரை திரையரங்குகளில் தேடும் நிலை இன்றும் தொடர்கிறது.

"ஓர் அரசியலின் கதை" இந்நாவல் தமிழக அரசியலில் மலிந்து காணப்படும் ஊழல்கள், சீர்கேடுகள், மற்றும் போலி வாக்குறுதிகளை நம்பி அரசியல்வாதிகளால் ஏமாற்றப்படும் அப்பாவி மக்கள் குறித்து ஆழமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் சமகால அரசியலை முன்வைத்து இந்நாவலை படைத்துள்ளார்.

"சிவமலரின் சமயம்" இந்நாவலில் சமயம், சாதி, நிற இன வேறுபாடுகள், பெண்ணடிமைத்தனம், பால்நிலை, மொழிவெறி ஆகியன சுயசிந்தனை ஆற்றலைத் தடுக்கும் தூசுப்படலங்கள் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

செ. கணேசலிங்கனின் பல நாவல்களில் பெண்விடுதலை மற்றும் பெண்ணியச் சிந்தனைகளை மிக ஆழமாகவும் தெளிவாகவும் விவாதிக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணின் கதை, ஒரு குடும்பத்தின் கதை, இரண்டாவது சாதி, நீ ஒரு பெண், கவர்ச்சிக் கலையின் மறுபக்கம், குடும்பச் சிறையில், நான்கு சுவர்களுக்குள், புதிய சந்தையில், நரகமும் சொர்க்கமும் ஆகிய நாவல்களில் பெண்கள் எதிர் கொள்ளும் பன்முகப்பட்ட அழுத்தங்கள், பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சனைய மையமாக வைத்து, இளமையின் கீதம், பொய்மையின் நிழலில், விலங்கில்லா அடிமைகள், ஒரு மண்ணின் கதை, வதையின் கதை, அந்நிய மனிதர்கள், வன்முறை வடுக்கள், அயலவர்கள், ஈனத் தொழில், இலட்சியக் கனவுகள் முதலிய நாவல்களை எழுதி அளித்துள்ளார்.

மேலும், மரணத்தின் நிழலில், ஒரு அபலையின் கதை, சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை, அயலவர்கள், செல்வி, தேன் பறிப்போர், கடவுளும் மனிதனும், இரு நண்பர்கள், ஒரு விதவையின் கதை, தாயின் குரல், இருட்டறையில் உலகம், இன்பத்தின் எல்லையில், முகுந்தன் கதை, தீவரவாதி, மனமும் விதியும், சூறாவளிக்கு என்ன பெயர்? எதிர் மறைகளின் ஒற்றுமை, ஒரு களவுக் காதல் கதை, கிழக்கும் மேற்கும், சிவமலரின் சமயம், இருமுகம், தந்தையின் கதை, பறிப்போரும் பண்பாடும், வாழ்வும் கடனும், இரத்த வடுக்கள், இயற்கையும் கடவுளும், மகளிர் மூவர், காதலும் வேட்கையும், சுசிலாவின் உயிரச்சம், மகளிர் இருவர், தோழியர் இருவர், மணோன்மணி காட்டும் ஊழிக்காலம், விமலா கூறும் செவிச் செல்வம், கறுப்பும் வெள்ளையும் உட்பட அறுபத்தைந்துக்கும் மேற்பட்ட நாவல்களை படைத்தளித்துள்ளார்.

செ. கணேசலிங்கன் எழுதிய "தேன் பறிப்போர்" நாவல் ஆங்கிலத்தில் ர்ழநெலிஉைமநசள என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இவரது நாவல்கள் தமிழகத்திலும், இலங்கையிலும் இருபதுக்கும் மேலான மாணவர்கள் எம் பில் ஆய்வுக்கும், முனைவர் பட்ட ஆய்வுக்கும் எடுத்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது "மரணத்தின் நிழலில்" என்னும் நாவலுக்கு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பரிசு வழங்கிச் சிறப்பித்தது. மலேசிய பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பிற்கு ஒரு பாடநூலாக "சடங்கு" நாவல் வைக்கப்பட்டுள்ளது. "அயலவர்கள்" நாவல் சென்னைப் பல்கலைக் கழக முதுகலைப்பட்டப் படிப்பிற்கு பாடநூலாக வைக்கப்பட்டு உள்ளது.

"சிறுவர்க்கான கதைகள் பகுத்தறிவை ஊட்டக்கூடியதாக, சிந்தனையை வளர்க்கக் கூடியதாக, சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பதாக, அறிவியல் மனப்பான்மையை உருவாக்குவதாக அமைய வேண்டும்" என சிறுவர்க்கான கதைகள் குறித்த சிந்தனையை அடிப்படையாக அறிவித்தார்.

உலக அதிசியங்கள், உலகச் சமயங்கள், உலகை மேம்படுத்திய சிந்தனையாளர்கள், உலக மகாகாவியங்கள் கூறும் கதைகள், புதிய ஈசாப் கதைகள், சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள் முதலிய நூல்களை சிறுவர்களுக்காக படைத்து அளித்து உள்ளார்.

ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் செ. கணேசலிங்கனுக்கு முக்கிய இடமுண்டு என்பது இலக்கிய ஆய்வாளர்களின் கருத்தாகும்.

செ.கணேசலிங்கன் 1960 ஆம் ஆண்டு மீனாம்பாள் என்பவரைத் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். குந்தவி, குமரன், மான்விழி என மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

செ.கணேசலிங்கன் 1980 களின் பிற்பகுதியிலிருந்து தமிழகத்தில் சென்னை நகரில் வசித்து வருகிறார்.

இவரது கட்டுரைத் தொகுதிகள் மார்க்சிய பார்வையினை அடிப்படையாகக் கொண்டவை. கலை, இலக்கியம், பெண் விடுதலை, பெண்ணியச் சிந்தனை, பழந்தமிழ் இலக்கியம், சமயம், உளவியல், பயண அனுபவங்கள் எனப் பல்வேறு பிரச்சனைகளை மார்க்சிய பார்வையில் ஆராய்கின்றன.

பொதுவுடைமைச் சித்தாந்தத்தைத் தெளிவாகவும், எளிமையாகவும், விளக்கும் விதத்தில், சாதாரணமானவர்களும் படித்து புரிந்து கொள்ளும் வகையில் மான்விழிக்கு கடிதங்கள், குமரனுக்கு கடிதங்கள், குந்தவிக்கு கடிதங்கள், அறிவுக் கடிதங்கள் எனும் தொகுதிகள் எழுதி வெளியிட்டுள்ளார்.

"குமரன்" இதழ் 1979 ஆம் ஆண்டு முதல் வெளிவந்தது. குமரன் இதழ் மூலம் ஈழத்து இதழியல் வளர்ச்சியில் செ.கணேசலிங்கனுக்கு முக்கிய இடமுண்டு. "குமரன்" இதழ் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார, பன்னாட்டு இதழாக வெளிவந்தது. "குமரன்" இதழின் ஆசிரியராக செ. கணேசலிங்கன் விளங்கினார். கலை இலக்கிய குறிப்புகள், கேள்வி பதில்கள், கவிதைகள், துணுக்குகள், கட்டுரைகள், சிறுகதைகள், இலக்கிய உலகில் எனப் பல பகுதிகள் இதழில் இடம் பெற்றிருந்தன. மேலும், உலகப் புகழ் பெற்ற பிறமொழிக் கதைகள், மார்க்சிய கட்டுரைகள், மார்க்சிய நோக்கிலான இலக்கிய விமர்சனக் கட்டுரைகள், கலை இலக்கியம் குறித்த கட்டுரைகள் வெளியிடப்பட்டது.

குமரன் பதிப்பகம் மூலம் நூற்றுக்கணக்கான நூல்களை தமிழ்நாட்டிலும், கொழும்பிலும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

செ. கணேசலிங்கன் தமிழகத்திற்கு புலம் பெயர்ந்த பின்னர் The Hindu ஆங்கில நாளிதழில் புத்தக மதிப்புரைகள் எழுதியுள்ளார்.

பெண்ணடிமை தீர, கலையும் சமுதாயமும், அழகியலும் அறமும், பல்சுவைக் கட்டுரைகள் முதலிய கட்டுரை நூல்களையும் எழுதி வழங்கியுள்ளார்.

மு. வ. நினைவுகள், கைலாசபதி நினைவுகள், பாலுமகேந்திரா நினைவுகள் முதலிய நூல்களை படைத்துள்ளார்.

நவீனத்தமும் தமிழகமும், பகவத் கீதையும், திருக்குறளும், கனவுகளின் விளக்கம், குறள் கூறும் பாலியல் கோட்பாடு, மாக்கியவல்லியும் வள்ளுவரும், பெண்ணியப் பார்வையில் திருக்குறள், சித்தர் சித்தாந்தமும் சூபிசமும், அர்த்த சாஸ்திரமும் திருக்குறளும்- முதலிய ஆய்வு நூல்களையும் தமிழுலகிற்கு படைத்தளித்துள்ளார்.




"திரும்பிப் பார்க்கிறேன்" என்ற சுயசரிதை நூலையும், சில பயணக் குறிப்புகள் "அமெரிக்கா, இங்கிலாந்து என்ற பயண நூலையும் எழுதி அளித்துள்ளார்.

அபலையின் கடிதம், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை முதலிய நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார்.

"மார்க்சியத் தளம் சார்ந்த படைப்பாளியாக அறிமுகமாகி, சமுதாய விமர்சனப் பாங்கான நாவலிலக்கிய முயற்சிகளுக்கு ஒரு திடப்பாங்கான வடிவமைப்பைத் தரும் வகையில் தொடர்ந்து செயற்பட்டவர் என்பதே செ. கணேசலிங்கன் அவர்களின் வரலாற்று முக்கியத்துவம் ஆகும்." எனப் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் புகழ்ந்துரைத்துள்ளார்.

"மனிதன், மனிதனால் உருவாக்கப்பட்ட சமூகத்தின் தீய, கொடூரமான சக்திகளுக்குப் பலிக்கடாவாகியுள்ளான். மனிதன் சமூகத்தின் தீய சக்திகளால், சுரண்டும் வர்க்கத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு, சுரண்டிச் சூறையாடப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்டு அவலமான துன்ப துயரங்கள் நிறைந்த சோகமயமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறான். மனிதனை இந்தத் தீயசக்திகளைக் கொண்ட சுரண்டும் வர்க்கத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுத்து அவனை மேம்படுத்த வேண்டும். இதுதான் உன்னதமான மானிட நேயம்" இந்த உன்னத மானிடத்துவத்தை செ.கணேசலிங்கன் படைப்புகளில் நாம் காண்கிறோம் என ஈழத்துக் கவிஞர் நீர்வைப் பொன்னையன் புகழ்ந்துரைத்துள்ளார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் கங்கத்தை உருவாக்கி கட்டமைப்பதில் முக்கிய பங்காற்றியவர்.

தமிழறிஞர் மு. வ., முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன், பயண எழுத்தாளர் சோமலே ஆகிய தமிழறிஞர்களுடனும், திரைப்பட இயக்குநர் பாலமகேந்திராவுடனும் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.

"செ. கணேசலிங்கன் கதைகளில் இடம் பெறும் அதிகமான பாத்திரங்கள் அநீதிகளுக்கும், கொடுமைகளுக்கும், சுரண்டலுக்கும் எதிராகப் போராடும் போர்க்குணம் மிக்கவையாக விளங்குகின்றன." எனப் பேராசிரியர் க. அருணாசலம் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

"முற்போக்குச் சிந்தனையுடன் மனிதாபிமானமிக்க படைப்புகளை தந்த செ.கணேசலிங்கன் எழுதுவதைப் போல வாழ்ந்து காட்டியவர். எழுத்தும் வாழ்வும் ஒன்றாகவே உள்ளது." என ஈழத்து எழுத்தாளர் அந்தனி ஜீவா பதிவு செய்துள்ளார்.

"கருத்தை இலக்கியத்தோடு மட்டும் வைத்துக் கொண்டு முற்போக்கு-பிற்போக்கு பேதமற்ற நட்புறவை சகல எழுத்தாளரோடும் கொண்டுள்ள ஒரு - சில-வேளை ஒரே-ஈழத்து எழுத்தாளர் செ. கணேசலிங்கன்" என்று இலக்கு இதழ் (1996 மே) பாராட்டியுள்ளது.

பல்துறைப் புலமை பெற்ற எழுத்துப் போராளி, தமது எழுத்தில் நேர்மையையும், உண்மையையும் வெளிப்படுத்தியவர். ஈழத்து முதுபெரும் அறிஞர். இலக்கிய படைப்பாளிகளுக்கு ஊக்கமளித்து ஆதரிப்பவர், ஆக்க இலக்கியப் படைப்பாளி எனப் பன்முக ஆற்றல் படைத்தவர் செ. கணேசலிங்கன்.

"கலை, இலக்கியங்கள் மயக்க மூட்டும் மதுவாகக்கப்படக் கூடாது. கலை, இலக்கியங்கள் மூலம் நல்ல உயர்ந்த கருத்துகளை மனதில் பதிய வைக்கலாம். புறநிலைப் பண்ட உற்பத்திகள் எவ்வாறு விஞ்ஞான ரீதியாக வளர்க்கப்படுகிறதோ, அதே போல அகநிலை உற்பத்தியான கலை, இலக்கியங்களும் விஞ்ஞான ரீதியாக, மனித சமுதாயத்தை மாற்றி அமைக்கக் கூடிய உந்து சக்தியாக வளர்க்கப்பட வேண்டும்." என கலை இலக்கிய வளர்ச்சி குறித்து செ. கணேசலிங்கன் தமது சிந்தனையை பதிவு செய்துள்ளார்.

"படைப்பாளிகள் சமூகத்தின் ஒரு பகுதிதான். சமூகத்தில் தான் வாழ்கிறான். சமூக நிகழ்வுகளின் பாதிப்புகள் இவர்களது படைப்புகளில் வெளிப்படுகின்றன. கலை, இலக்கியப் படைப்புகள் மக்களின் மனத்தை உழுது, பண்படுத்தி வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் கடமையைச் செய்ய வேண்டும்." என்று படைப்பாளிக்கு அறைகூவல் விடுக்கும் செ.கணேசலிங்கன் தனது 93 வது வயதில் சென்னையில் காலமானார் என்ற செய்தியைப் துயரத்துடன் பகிர்ந்து கொள்கின்றோம். வயதைக் கடந்த பின்னும் தமது எழுத்துப் பணியை சமூகத்துக்கு செய்து கொண்டிருக்கிறார்.

# தமிழ் சினிமாவில், 'மஹாகவி பாரதி' பாடல்கள்

அத்தியாயம் 1 - வீணை மைந்தன்
சுப்பிரமணிய பாரதியாரின் 100வது ஆண்டு நினைவாகவும் டிசம்பர் 11ஆம் நாள் 139 ஆவது பிறந்தநாள் நினைவாகவும் இச்சிறப்பு கட்டுரை இவ்வாரம் ஆரம்பமாகிறது!
– பிரதம ஆசிரியர்

'கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புலவோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.

தமிழ்த்தாயைப் போற்றியும் - தமிழ் மொழியின் சுவையை மெச்சியும் பாரதி பாடிய வரிகளைப் படிக்கும் போது 'பாரதி எழுதிய பாடல்களுமே தீஞ்சுவைக் காவியமாக, தேன் சுவை அமிர்தமாக எனக்கு ருசிக்கிறது் கள்ளும் தீயும் கலந்த கவிதைகள்!' தெள்ளு தமிழ்ப் புலவோர்களுள் ஒருவராக பாரதியும் ஒளிர்கிறார்!

பாரதி வாழ்ந்த காலம் மிகக் குறுகியது. 1882ம் ஆண்டு பிறந்து 1921ம் ஆண்டு தனது 39வது வயதில் அமரராகிறார். அவர் தெய்வபதம் அடைந்து சரியாக பத்து வருடம் கழித்து பேசும் சினிமா அல்லது பாடும் சினிமா ஆரம்பிக்கிறது.
இவ்வாண்டு (2021) பாரதி ஐயாவின் நூறாவது நினைவு ஆண்டு. தமிழகத்திற்குச் சொந்தமான பாரதியைப் பாரதத்தின் பாரதியாக கொண்டாடும் விதமாக - இந்திய மாநிலங்களில் உள்ள அனைத்து பெருநகரங்களில் பாரதியின் நூற்றாண்டு நினைவு கொண்டாடவும் - பாரதியை ஏனைய மொழி பேசும் மாநிலத்தவர்களும் அறிவதற்கான நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
முதல் நிகழ்வு கடந்த மாதம் விசாகப்பட்டினம் (ஆந்திர மாநிலம்) பெருநகரில் ஆரம்பமாயிற்று. ஏனெனில் அங்கு இயங்கி வரும் 'தமிழ் கலை மன்றம்' பாரதி உயிருடன் வாழ்ந்த காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அம்மன்றத்திற்கும் வயது நூறு ஆகிறது, பாரதி மறைந்தும் நூறு ஆகிறது. அதன் காரணமாக விசாகப்பட்டினமும் 'சுந்தரத் தெலுங்கு" பேசும் மாநிலமாக - பாட்டிசைக்கும் தேசமாகப் பெற்றமையாலும் - அங்கு வாழும் தமிழர்களும் - சகோதர மொழிக்கு சொந்தக்காரர்களும் இணைந்து முதலாவது 100வது (பாரதி) நினைவு நாளை கொண்டாடி மகிழ்ந்துள்ளனர். இனி இந்நிகழ்வு இந்திய மாநில நகரங்களில் மாதம்தோறும் கொண்டாடப்படும்.
எனது ஆசை என்னவென்றால் - பாரத தேசம் கடந்து பாரெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் வாழும் தேசங்களில் எல்லாம், கொண்டாடப்பட வேண்டும் என்பதே ஆகும்! பாரதி பாரத தேசத்திற்கு மட்டுமல்ல தேசமெங்குமும் கொண்டாடப்பட வேண்டிய தெய்வீக புருசர் - உலக கவியாவார். இனி கட்டுரையின் தலைப்பிற்கு வருவோம். 'தமிழ் சினிமாவில் பாரதி பாடல்கள்' பின்னாளில் அறிமுகமாகும் தமிழ் சினிமாக்களுக்கு உபயோகப்படும் என நினைத்து பாரதி பாடல்களை இயற்றவில்லை என்பதை முதலில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் அவரது பல பாடல்களை தமிழ் சினிமா சூழ்நிலைகளுக்குப். பொருத்தமாக பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளது. பாரதி தனது பாடல்களை எழுதும் போது அவை இன்ன ராகத்தில் பாடவேண்டும். இன்ன முறையில் இசையமைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் நினைத்து சினிமாவிற்கு எழுதியவரல்ல!

ஆனால், பொதுவாக அவரது பாடல்கள் இன்ன இன்ன ராகங்களுக்குள் அமையும் என்று சில குறிப்புகள் நமக்கு கிடைக்கின்றன. அக்குறிப்புகளுக்கமைய சினிமாவுக்கு இசை அமைத்த இசையமைப்பாளர்கள் கையாளவில்லை. ஆனாலும், இசையமைப்பாளர்கள் பாரதி பாடல்களை இலகுவாக்கி முணுமுணுக்க வைத்துவிட்டார்கள். அவர்களை பாராட்டியே ஆக வேண்டும்.

பாரதியின் பாடல்களை ஆங்காங்கே வெட்டியும், ஒட்டியும் சினிமாக்களில் வரும் சூழ்நிலைக்கு ஏற்றார் போல் தகுந்த முறையில் பயன்படுத்தியுள்ளார்கள். சில பாடல்களை காதலன்,-காதலி பாடுவது போலவும் மிகப்பொருத்தமாக இசை அமைக்கப்பட்டுள்ளது.

காலத்திற்கு காலம் தமிழ் சினிமாவின் எல்லா இசையமைப்பாளர்களும் பாரதி பாடல்களை மிக சிறப்பாகவே இசையமைத்திருக்கிறார்கள்.

பாரதி ஐயா தான் எழுதிய பாடல்கள் என்னென்ன ராகங்களுக்குட்பட்டது என சில குறிப்புகள் நமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரதி நினைவு இல்லத்தில் கிடைத்த குறிப்புகள் மூலம் பட்டியலிடுகிறேன்.

பாரதியின் பாடல்களுள் இடம்பெற்ற ராகங்களாவன
சக்கரவாகம்
பிலஹரி
ஆனந்த பைரவி
நொண்டிச் சிந்து
பைரவி
கேதாரம் - கண்ட காத்
செஞ்சுருட்டி
நாதநாமக்கிரியை
இந்துஸ்தானி - தோடி
வராளி
பூபாளம்
ஆபோகி
வண்டிக்காரன் பாட்டு (தெம்மாங்கு)
ஸ்ரீ ராகம்
கமாஸ்
சரஸ்வதி மனோகரி
நாட்டை
யதுல காம்போதி
பியாக்
கரகரப்பிரியா
நாட்டைக்குறிஞ்சி
சைந்தவி
தண்டகி
கோணாங்கி
ஆகிய ராகங்கள் என குறிப்புகள் எடுத்தியம்புகின்றன!



பாரதியின் பாடல்கள் இடம்பெற்ற முதலாவது திரைப்படம் ஜனவரி 22 1947 இல் வெளியானது! அது என்ன படம்? அடுத்த இதழில் தொடரும்..

*- வீணை மைந்தன்*



## ஜீவன் முக்தி (பகுதி ) 133

# கர்ம ஜென்ன இரகசியம்



'எந்த உயிரும் முக்தி அடையாதவரை அடுத்த உடலை மூன்று சஷங்களுக்குள் எடுத்தாக வேண்டும்' வேத இரகசியம்.
மூன்று சஷணங்கள் என்பதற்குள் ஆழ்ந்த தத்துவார்த்தமான பொருள் உள்ளது.
ஒரு எண்ணத்திற்கும் இன்னொரு எண்ணத்திற்கும் இடைப்பட்ட காலம்தான் ஒரு சஷணம் என்றழைக்கப்படுகிறது.

----------------------------------------------

**1 சஷணம் - இரண்டு எண்ணங்களுக்கு இடையில் இருக்கும் இடைவெளி**

----------------------------------------------

அடுத்த உடலை தேர்வு செய்வது எப்படி?
மூன்றே மூன்று சஷணங்கள்தான் உடம்பில்லாமல் எந்த உயிராலும் தாக்குப்பிடிக்க முடியும். அதற்குள் அடுத்த உடலை எடுத்தே ஆக வேண்டும்.
சுவாசத்தை நாம் தடுத்து நிறுத்தினால், எவ்வாறு மூச்சிற்காக நாம் ஏங்கித் தவிப்போமோ... அதுபோன்று நம் உயிர் அப்போது உடலுக்காக ஏங்கித் தவித்து படாதபாடு படும்.
நம்முடைய விழிப்புணர்வு மிகவும் குறுகியதாக இருந்தால், குறைந்த நேரத்திற்குள் ஏனோதானோவென்று கிடைக்கும் உடலை தேர்ந்தெடுத்துவிடுவோம்.

அது கழுதைதோ, குதிரையோ பிச்சைக்காரனோ அல்லது பணக்காரனோ என்று எதைப் பற்றிய விழிவ்புணர்வு இல்லாமல் நுழைந்து கொண்டு பிறப்பெடுத்துக் கொள்ளும்.

இது நம் சுய முடிவல்ல. வேறு வழியின்றி, மாற்றுவழியின்றி எடுக்கப்படும் முடிவாகும். அதனால் நாம் மீண்டும் மீண்டும் சமஸ்கார சாகரத்தில் சிக்கி, மீண்டும் ஒரே மாதிரியான கஷ்டங்களையே அனுபவித்துக் வருகிறோம்.
ஒருவர் concious death அடைளாதலரை பிறப்பெடுத்தல் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும்.


ஒவ்வொருவரின் விழிப்புணர்விற்கு ஏற்பத்தான் சஷணத்தை முடிவு செய்யும் ஆற்றல் இருக்கும். விழிப்புணர்வு குறையக் குறைய சஷணத்தின் நீளம் குறையும்.
உடலை விட்டு உயிர் பிரிந்தவுடன் மூன்று சஷணங்கள் தான் யோசிக்க முடியும். அதற்குள் ஏதோ ஒரு முடிவெடுத்தான வேண்டும். முடிவெடுத்த உடனேயே, உயிர் உடலுக்குள் நுறைந்துவிடும்.

**நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்.**
உடலை விட்ட உடனே அப்போதுவரை வாழ்ந்த வாழ்க்கை, உங்கள் முன் ஒரு சினிமா படம் போல் தெரியும். அதுபோல் மரணத்திற்குப் பிறகு உங்கள் மொத்த வாழ்வையும் ஒரு குறுகிய திரைப்படம்போல் பார்ப்பீர்கள்.

சாதாரண மூன்று மணி நேர சினிமாவைப் பார்த்தோமென்றால் அதில் ஒரு சில காட்சிகளை மட்டும் மறக்கவே முடியாத அளவிற்கு முத்தாய்ப்பாக
இருக்கும். அதற்குக் காரணம் அது உங்கள் உணர்வைத் தொட்டிருப்பதால், உங்களுக்குப் பிடித்திருப்பதால்தான். அதுபோல் உங்களுடைய 80 வருட வாழ்விலும், ஒரு சில காட்சிகள் மட்டும், மறக்க முடியாத அளவிற்கு ஆழமாய் தொட்டிருக்கும்.

**கர்ம ஜெனன ரகசியம்.**

ஆகாமிய கர்மத்தின்
வலிமையான எண்ணம் AS+AP+AA = அடுத்த உடல். மூன்று எண்ணங்களில் எந்த எண்ணம் ஆழமாக மிகவும் வலிமையானதாக இருக்கிறதோ, அடுத்த உடலெடுக்க காரணம்.
அதில் மூன்று காட்சிகள் சம்பவங்கள், நிகழ்சிகள் மட்டும் மரணத்தின்போது உங்கள் முன்னால் நிற்கும்
அந்த மூன்று காட்சிகளும், மூன்று எண்ணங்களாக ஒரு படச் சுருள்போல் முன்னால் நிற்கும்.
பிறப்பின் சூட்சுமத்தைப் புரந்து கொள்ளுங்கள். உடலை விட்டவுடன் அந்த உயிருக்கு முன்னால் மூன்று நினைவுப் பதிவுகளாக (கர்மங்களை) உங்களுடைய மொத்த சஞ்சித கர்மத்திலிருந்து (AS) ஒரு எண்ணமும், இந்த பிறவியை தேர்ந்தெடுக்க காரணமாயிருக்கும் பிராரப்த கர்மங்களிலிருந்து (AP) ஒரு எண்ணமும், இந்த பிறவியில் புதிதாய் சேகரித்த ஆகாமிய கர்மங்களிலிருந்து (AA) ஒரு எண்ணமும் மொத்தம் மூன்று எண்ணங்கள் எழும்.




**இந்த மூன்று வலிமையான எண்ணங்கள் சேர்ந்துதான் அடுத்த உடலை நிர்ணயிக்கிறது.**

~~AS+AP+AA= Your next body~~

~~நான் அழகாக இருக்க வேண்டும்+நான் பணக்காரனாக இருக்க வேண்டும்+நான் அமெரிக்காவில் பிறக்க வேண்டும்= உங்களுடைய அடுத்த உடலுக்கான வரைப்பு தயாராகிறது.~~

ஒரு சின்ன உதாரணம்
1. இப்போது உங்களுடைய மொத்த சஞ்சித கர்மத் தொகுப்பிலேயே, மிக வலிமையான எண்ணம், நான் அழகாக இருக்க வேண்டும். என்று இருப்பதாக வைத்துக் கொள்வோம்.
உங்களுடைய மொத்த சஞ்சித கர்ம வினையிலிருந்து நீங்கள் தேர்ந்தெடுப்பது AS. =நான் அழகாக இருக்க வேண்டும்.
2. அடுத்து இந்த உடலெடுக்க காரணமாயிருக்கும் பிராரப்த கர்ம வினைகளில், நான் பணக்காரராக இருக்க வேண்டும் என்பது ஆழமாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்.
உங்களுடைய பிராரப்த கர்மவிலிருந்து தேர்ந்தெடுப்பது AP = நான் பணக்காரராக இருக்க வேண்டும்.
3. உடலெடுத்த பின் புதிதாய் சேர்த்த ஆகாமிய கர்ம வினையில் நான் அமெரிக்காவில் பிறக்க வேண்டும் என்பது ஆழமாக இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.
உங்களுடைய ஆகாமிய கர்ம வினையிலிருந்து நீங்கள் தேர்ந்தெடுத்பது AA = நான் அமெரிக்காவில் பிறக்க வேண்டும்.

உங்களுடைய மொத்த சஞ்சித கர்மத்திலிருந்து ஒரு ஆழமான எண்ணம். AS + உடலெடுக்கக் காரணமாயிருக்கும் பிராரப்தததிலிருந்து ஒரு எண்ணம் AP + உடலெடுத்த பின் புதிதாய் சேர்ந்த கர்மங்களிலிருந்து ஒரு எண்ணம் AA = அடுத்த உடலெடுக்க விதையாக இருக்கிறது.

இந்த மூன்று எண்ணங்களில் எது இன்னும் ஆழமாக வலிமையாக இருக்கிறதோ, அது அடுத்த உடலின் முதல் ஆசை வியாகிறது. அதற்கேற்ற மன அமைப்பை உருவாக்கிக் கொள்கிறது.

அந்த விதை, பின் தனக்கேற்ற உடலை தேர்ந்தெடுக்கிறது. இந்த மூன்று எண்ணங்களை வைத்துத்தான் ஒரு ஜீவன் தன் அடுத்த உடலை நிர்ணயிக்கிறது.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

---

மலேசிய மடல்

# *ஜனன்ஏ படையில் டான்ஸ்ரீ கே. ஆர். சோமா*

## *16 வயதிலேயே கற்றுக்கொண்ட தலைமைத்துவப் பண்பு*



நக்கீரன்

**கோ**லாலம்பூர், டிச.08:


மலாயாவில் நேதாஜி தலைமையில் இந்திய இராணுவப் படை எழுச்சியுடன் செயல்பட்ட நேரம் அது மலாயா இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் மலாயா விடுதலையைவிட இந்தியாவின் விடுதலைக்காக முனைப்பு காட்டினர். காரணம், இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டால், அடுத்து மலாயாவும் விடுதலை அடையும் என்ற எதிர்பார்ப்பில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உருவாக்கிய இந்திய தேசிய இராணுவப் படையில் இணைந்து துடிப்புடன் செயல்பட்டனர்.



இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற நேரத்தில் பிரிட்டிஷ் படையை எதிர்ப்பதற்காக சிங்கப்பூரை தலைமையகமாகக் கொண்டு, தென் கிழக்கு ஆசியாவில் ஜப்பானிய இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய இந்திய தேசிய இராணுவப் படை (ஜஎன்ஏ)யில் டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்களும் கர்னல் தகுதியுடன் செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

ஐஎன்ஏ-வில் பாதிக்கு மேற்பட்டோர் தமிழர்களாக இருந்தனர். அவர்களில் மேஜர் ஜெனரல் அழகப்பா, கர்னல் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம், பிரிகேடியர்கள் நாகரத்தினம், எஸ்.ஏ. ஐயர், ஜான் திவி, கேப்டன் டாக்டர் லட்சுமி சைகல் போன்றோர் விர உணர்ச்சியுடன் கடமை ஆற்றிக் கொண்டிருந்தனர்.

அந்தக் காலக்கட்டத்தில் தமிழர்கள் சமைத்துக் கொடுத்த உணவை சாப்பிட்டுவந்த நேதாஜி, மறுபிறவி என்ற ஒன்று இருக்குமானால், நான் அடுத்தப் பிறவியில் தமிழராகப் பிறக்க விரும்புகிறேன் என்றாராம்.



ஜஎன்ஏ-வில் மலாயா தமிழகத் தமிழர்கள் போர்முனையில் முனைப்பு காட்டிக் கொண்டிருக்க, மலாயா யாழ்ப்பாணத் தமிழர்கள் நிதியை பேரளவில் திரட்டிக் கொடுத்தனர்.

இத்தகைய சூழலில், 2-ஆம் உலகப் போர் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. ஜப்பானியப் படைகள் அந்தமான் நிக்கோபார் தீவுகளைக் கைப்பற்றி நேதாஜியிடம் ஒப்படைத்தனர். உடனே, நேதாஜி ஜஎன்ஏ-வின் கட்டுப்பாட்டுக்குள் அந்தமானைக் கொண்டுவந்து, அந்தத் தீவுப் பிரதேசத்தின் ஆளுநராக லோகநாதன் என்னும் மறத் தமிழரை நியமித்தார்.

ஜஎன்ஏ-வில் துடிப்புடன் செயல்பட்ட டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்களுக்கு வயது போதவில்லை என்று கூறி அவரை போர்முனைக்கு அனுப்பவில்லை. அதனால், சிங்கப்பூர்-மலாயாவிலேயேத் தங்கி இராணுவ சீரமைப்பு, ஒழுங்குமுறைப் பணிகளை ஏற்றிருந்தார். கர்னல் தகுதியுடன் பயிற்றுநரனாகப் பொறுப்பேற்றிருந்த அவர், தன்னை-விட வயதில் பெரியவர்களுக்கெல்லாம் பயிற்சி வழங்கிக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில், மத்திய மலாயாவில் முகாமிட்டிருந்தபொழுது, ஒருநாள் மாலை வேளையில் தன்னுடைய தலைமையில் பயிற்சி பெற்று வந்த இராணுவத்தினருடன் சித்தியவான் நகர்ப்பகுதியில் வலம்வந்த நேரத்தில் எதிர்பாராமல் தென்பட்ட ஒரு படக்கடை எடுத்துக் கொண்ட நிழற்படம்தான் இது.

படத்தில் அமர்ந்திருக்கும் டான்ஸ்ரீக்கு அருகில் அதே நாற்காலியில் ஒட்டிக்கொண்டு உட்காந்திருக்கும் சிங்காரம் செட்டியாருக்கு டான்ஸ்ரீயைவிட மூன்று வயது அதிகம் மற்ற இருவரும் ஏறக்குறைய சிங்காரத்தின் வயதுடையவர்கள்.

கூட்டுறவு சங்கம் தொடங்கி முதல் பத்து ஆண்டுகளில் பல்வேறு தடங்கலையும் சிக்கலையும் எதிர்கொண்டுவந்த நேரத்தில், இவர் தலைமை ஏற்றதுடன் இன்று இந்த நிலைக்கு கூட்டுறவு சங்கத்தை செம்மாந்த நிலைக்கு உயர்த்தி இருக்கிறார். ஆனாலும், மஇகா கெடா மாநிலத் துணைத் தலைவர் பதவியை தியாகம் செய்ய வேண்டியிருந்தது.

1945-இல் இந்தப் படம் எடுக்கப்பட்ட நேரத்தில் டான்ஸ்ரீ அவர்களுக்கு 16 வயது.

அந்தமான் தீவைக் கைப்பற்றியபின், ஜஎன்ஏ இந்தியாவை வெற்றி கொள்வதற்குள் போர் முடிந்து விட்டது. அதே ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நேதாஜியும் மர்மமான முறையில் காணாமல் போனார். ஜஎன்ஏ தொடர்ந்து செயல்பட்டிருந்தால், அடுத்த மூன்று ஆண்டுகளில் கேஜர் நிலைக்கு டான்ஸ்ரீ உயர்ந்திருப்பார்.

எது எவ்வாறாயினும், இவரின் தலைமைத்துவ ஆற்றல் 15-16 வயதிலேயே வெளிப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# கடந்தவையும் கடப்பவையும் (13)

- உமா மோகன் -

மாதங்கள் சில கழிய நல்லதொரு
காலமது வருமெனவே காத்திருந்தோம் - வேளையது

வந்திடவே மகிழ்வோடு ஊருக்குள் திரும்புகின்றோம்
எவ்விடத்தில் இருந்தாலும் எம்மிடம் சென்றபின் தான்

புதிதாய் ஒரு புத்துணர்ச்சி வருவதுண்டு - ஆனாலும்
எதுவும் அங்கு இயல்பாக இல்லாமையால்

ஏதையோ இழந்தது போல் பெரும் கலக்கம்,

பாதையிலே சனமும் இல்லை
பழகுதற்கு யாரும் இல்லை

கடைகள் திறக்கவில்லை அங்கு - கால்
நடைகள் கூட வெளியில் இல்லை

பறவைகளும் பறக்கவில்லை உற்ற
உறவுகளும் வீடுகட்குத் திரும்பவில்லை

பாரியோடு பறம்பு மலையையும் பறிகொடுத்த - அவர்
மகளிரின் பரிதவிப்புப் போல் - முன்னர்

இருந்த நிலையை எண்ணி மனம் பதகளித்தது
விழுந்து எழுந்தாலும் பலர் இருந்தார் - வீடுகளில்

நாளடைவில் மறுபடி மக்கள் கூட - பல நாள்
கேளாத சத்தம் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்தது
போல்

நிலம் நீர் ஆகாயம் என அத்தனையும் அதிர பெரும் பலத்தோடு
முன்னேற்றம்

திக்குத்திசை தெரியாத ஓட்டம் - அங்கு
போக்கும் வரவும் நித்தமும் நிகழ

உக்கிர வேளையில் ஒருநாள் பலரும்
பக்கத்து ஊரில் தஞ்சம் - அதிகாலை

வானூர்தி ஒன்று குண்டுப் பதிலாய் துண்டுப்
பிரசுரம் போட ஓடிஓடி ஏந்தி - அவர்

போர்த் தருமம் என்னே என்று வியந்து - பின்
பேர் குறித்த இடங்களுக்கு விரைதும்

நின்மதியாய் இருந்ததுண்டா?

குறித்த பாடசாலைகளும் கோவில்களும் நிரம்பி வழிந்தன - அவர்
எறிந்த கணைகளும் அங்கு தான் விழுந்தன

அன்று போனவர் போக எஞ்சியவர்
அஞ்சி அஞ்சி அங்கேயே இருந்தனர்

இரவு பகல் இடைவிடாத கடும் யுத்தம்
வரவு உணந்தும் பொரும் சத்தம்

கத்தலும் கதறலும் கூக்குரலும் கேட்கிறது
பக்கத்தில் - ஆனாலும்
கோயிலுக்குள் ஆயிரம் பேர் அவர்களுடன்

இருப்பதனால் துணிவு உண்டு - எனினும்
பருவம் அடைந்தவர்க்குப் பாதுகாப்பு பிள்ளை ஒன்று

கையில் தந்தார் வேண்டாம் என்றதுமே
கைமாறியது குழந்தை யார் என்று தெரியாது - எனினும்

அம்மம்மாமாரின் அவசர யுத்தி இது
அங்கு பலருக்கும் அவசரத்திற்கு உதவியது

ஆனாலும் சங்கிலிப் பிணைப்பில் பொண்கள்
யாரேனும் இருக்கவில்லை - அக்காலத்தில்
இருந்ததில்லை.

(தொடரும்)

# இலங்கையில் நுண்கடன் வலையில் சிக்கி 200 பெண்கள் பலி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)




எந்தவொரு ஆய்வுக்கும் உட்படுத்தப்படாத நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று வட்டி செலுத்த முடியாமல் 200ற்கும் மேற்பட்ட இலங்கை பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் கிராமப்புற பெண்களின் உயிரைப் பறிக்கும் நுண்கடன் திட்டம் ஏற்படுத்திய அழிவின் அளவு அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நாட்டிற்கு வந்த ஐ.நாவின் விசேட தூதுவரால் வெளிப்படுத்தப்பட்டது.

"கடனுக்கு அதிக வட்டி விகிதங்கள் வசூலிக்கப்படுவதால் பல பெண்கள் கடனுக்கு இரையாகிறார்கள். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் 200ற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது," என சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் டொமோயா ஒபோகடா கொழும்பில் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், கல்வியாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சுரண்டலுக்கு ஆளானவர்கள் ஆகியோரை அவர் சந்தித்ததாக, ஐ.நாவின் இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தேர்தல் வாக்குறுதியானது இலட்சக்கணக்கான கிராமப்புற பெண்களை கடன் பொறியிலிருந்து காப்பாற்றுவதாகும்.

"சில வங்கிகளுக்கு சட்டப்பூர்வ உரிமை கூட இல்லை, சில நிதி நிறுவனங்கள் கடந்த காலங்களில் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் நாடு முழுவதும் நெருப்பு வட்டியைவிட அதிக வட்டிக்கு வழங்கிய நுண்கடன் காரணமாக, இலட்சக்கணக்கான பெண்கள் அழுத்தத்தில் உள்ளனர். அத்தகைய பெண்களுக்கு விரைவான நிவாரணம் அளிக்கும் வகையில், நியாயமற்ற முறையில் வழங்கப்பட்ட சிறு கடன்கள் இரத்து செய்யப்படும்," என சுபீட்சத்தின் நோக்கு தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதையே ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் வெளிப்படுத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.



"இந்த சுரண்டல் நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் அரசாங்கம் இதுவரை எந்தவொரு பயனுள்ள அல்லது சரியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதில் நான் ஆழ்ந்த கவலையடைகின்றேன். இதன் விளைவாக, அவர்கள் தங்கள் வேலையைத் தடையின்றி தொடர அனுமதிக்கப்படுகிறார்கள்," என டொமோயா ஒபோகடா தெரிவித்துள்ளார்.

தனது விஜயத்தின் போது முன்வைக்கப்பட்ட பல பரிந்துரைகளை, இலங்கை அரசாங்கம் கவனத்தில் எடுத்துள்ளதாக தெரிவித்த விசேட பிரதிநிதி, இந்த கடன் வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு சட்டமியற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகடாவின் இறுதி அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# இவ்வார ராசிபலன்

**10-12-2021 வெள்ளி தொடக்கம் 16-12-2021 வியாழன் வரையும்**

**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாத திட்டங்கள் நிறைவேறும். பூமியால் நன்மை உண்டு. முயற்சிகள் பலன் கொடுக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். வேண்டாத நபர்கள் விலகுவர். அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். வீடு, மனை யோகம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,7,1,2
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,K

**ரிஷபம்:** துணிவோடு செயல்படும் வாரம். சந்தோஷம் அலை மோதும். களைகட்டும் மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவிலோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிட்டும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். ரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடையும். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப்பலன் கூடும். கலைஞர்களுக்கு சாதகமான நாள். வியாபாரம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். இல்லத்தில் அமைதி பெருகும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். வங்கி சேமிப்பு உயரும். விரக்திகள் மறையும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். ஆபத்துக்கள் விலகும். கட்டிடத் தொழில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 8,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,H

**மிதுனம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். தேகப்பலம் கூடும். திருமண தீபம் சுடர் விடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன் சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புகள் விலகும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல்நிலையில் அக்கறை தேவை. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். கர்மவினைகள் அகலும். ஏற்றமான தருணங்கள் அமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 4,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு அதிர்'ட எழுத்துக்கள்: X,K

**கடகம்:** கண்ணியமான புண்ணியம் சேரும் வாரம். தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். தெளிவான முடிவுகளில் திருப்பம் ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். பணவரவு திருப்தி தரும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான நாள். பிரபல்ய ஆசை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப்பெண்களின் எண்ணம் ஈடேறும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். கலைத்தொழில் லாபம் தரும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பெருமிதம் நிறைந்த காலம். மருத்துவச் செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திதி தேவதை, அதிர்ஷ்ட எண்: 2,4,8,6
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,A

**சிம்மம்:** ஆசைப்பட்ட பொருள்கள் சேரும் வாரம். சுப விரயம் ஏற்படும். கல்வியால் பெருமை சேரும். தாய் வழி ஆதரவு பெருகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பாகப்பிரிவினை சுமூகமாகும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். உறவினர்கள் வருகையில் உள்ளம் மகிழும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வெற்றியும் வெகுமதியும் கூடும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. பூமியால் நன்மை உண்டு. ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். கல்வியில் ஆர்வம் கூடும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். எண்ணங்கள் வண்ணமயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,9,1,4
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F

**கன்னி:** நல்லவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். கௌரவம் அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு பெருகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனைவாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். ஊக்கம் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். வீண் வம்பு அகலும். நினைத்தது நிறைவேறும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர்கள். மங்கள் நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர்களின் சந்திப்பு கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அழகு நாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,7,0,1


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,G

**துலாம்:** போட்டிகள் உருவாகும் வாரம். நல்லோர்கள் சந்திப்பு கிட்டும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனை காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கணவன் மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கடன் கச்சைகள் தீரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், மன அமைதியும் கிட்டும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். செய்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பளபாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். பணிவான பேச்சுகள் அவசியம். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். சேமிப்பு உயரும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,7,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K

**விருச்சிகம்:** பயணம் தவிர்க்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சீராகும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளி போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமணம் தள்ளிப்போகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பணிவான பேச்சுக்கள் தேவை. இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிடைக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கௌரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். குலதெய்வ வழிபாடு மேன்மைகள் தரும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும். செய்தொழில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 1,9,2,8
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,F

**தனுசு:** நன்மைகள் பெருகும் வாரம். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கை உண்டு. அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். ஆபரணச்சேர்க்கை உண்டு. மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பாராட்டுக்கள் சேரும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். புதிய சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். மருத்துவச் செலவு குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். தாய்வழி குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. எண்ணங்கள் பலிதமாகும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். பேச்சில் நிதானம் தேவை. கடன் சுமை குறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 4,8,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J

**மகரம்:** தொழில்போட்டி மறையும் வாரம். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும் அற்புதமான காலம். விளையாட்டுத்துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். விரயங்கள் அதிகமாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவப் பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டே' னரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேர்க்கை உண்டு. பட்டம் பதவி வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கமிஷன் தொழில் லாபம் தரும். கடன் தொல்லை தீரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T

**கும்பம்:** இல்லம் தேடி வாய்ப்பு வரும் வாரம். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்யம் கூடும். வியாபார லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர பயணம் லாபம் தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்க்கை தரம் உயரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பொறுப்புகள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 6,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,R

**மீனம்:** தங்க நகைககள் சேரும் வாரம். உடல்நலனில் அக்கறை தேவை. செல்வாக்கு உயரும். மாணவர்களிடம் எச்சிக்கை தேவை. நல்ல செய்தி நாடி வரும். முயற்சிகள் வளர்ச்சி அடையும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். திட்டமிட்ட காரியம் வெற்றியாகும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். மற்றவர்களால் தொல்லை உண்டு. நீண்ட நாளைய கனவு நிறைவேறும். லஷ்மி வழிபாடு மாற்றம் தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,A



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 976



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*"பூரணைக் கிறைவர போற்றி*
*புட்கலை கணவா போற்றி*
*வாரணம் ஏறி எங்கள்*
*வருந்துயர் களைவாய் போற்றி*
*ஆரணச் சுருதி எல்லாம்*
*ஆடல் உருத்திர அண்ணலென்று*
*காரணங் கருதி ஏத்தும்*
*கடவுளே போற்றி போற்றி"*

அசுரர்கள் தேவர்களிடமிருந்து அமுதைப் பறித்து உண்ண முற்பட்டவேளை, தேவர்களின் வேண்டுகோளை ஏற்ற திருமால், மோகினி வடிவங்கொண்டு அசுரர்களை மயக்கி, அமுதத்தினைப் பெற்றுத் தேவர்களுக்கு வழங்கினார். மோகினி அவதாரங்கொண்ட திருமாலுக்கும், சிவனுக்கும் பிறந்த குழந்தைக்கு, தர்மசாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். சபரிமலைக்கோவிலில் முன்பிருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா, பரசுராமர் பிரதிஷ்டை செய்த தர்மசாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹரசுதனின் அவதாரமாக விளங்குகின்றன.

இந்தியா. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து கதிர்காம யாத்திரை செல்பவர்கள், மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதி ஊடாகச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளனர். ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியிலே, கதிர்காமம் செல்வதென்பது மிகவும் கடினமான விடயமாகக் காணப்பட்டுள்ளது. சீரற்ற பாதைகள், காட்டுவழியால் பிரயாணம், வனவிலங்குகளால் ஆபத்து, காட்டுப்பாதையால் செல்லும்போது அப்பகுதி அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயம், எனப் பலவற்றைத் தாண்டியே கதிர்காமத்தை அடைய வேண்டியிருந்தது.

இவ்வாறு செல்வோர் யாவரும் கதிர்காமத்தைச் சென்றடைவதில்லை. பலர் வழியிலுள்ள கிராமங்களிலே தங்கிப் பின்னர், அவற்றையே தமது சொந்த இடமாகக் கொள்வதும் உண்டு. கதிர்காமம் செல்லப் புறப்பட்டுச் சென்ற பலர் இவ்வாறு ஆரையம்பதியிலே தங்கி, அதனையே தமது ஊராகக் கருதி வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம யாத்திரை புறப்பட்ட ஒருவரே, இவ்வாறு தங்கி, ஆரையம்பதியில் ஐயனார் வழிபாட்டை அறிமுகம் செய்தார் என்பது ஐதீகமாகக் காணப்படுகின்றது. பரமநயினார் என்னும் பெயருள்ள ஐயனார் கோயில்கள் காலப்போக்கில் செங்கலடி, தாழங்குடா என்னும் ஊர்களிலும் உருவாக்கப்பட்டன.

ஐயனார் வழிபாடு ஈழத்திலே அருகியே காணப்படுகின்றது. ஆயினும் சப்த தீவுகளுள் ஒன்றாகிய அனலைதீவிலே, மிகப்பெரிய தேரைக் கொண்ட ஐயனார் கோவில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகவும் காணப்படுகின்றது. ஈழத்திலே ஐயனாரை வழிபட்ட மக்கள், புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஐயனாரின் அவதாரமான ஐயப்பன் வழிபாட்டைத் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதன் பிரதிபலிப்பாக ஒவ்வொரு ஆண்டும் ஐயப்பபக்தர்கள் சபரிமலை சென்று தமது வேண்டுதலை நிறைவேற்றி வருகின்றனர்.

ஆரையம்பதியிலே அமைக்கப்பெற்ற ஐயனார் கோயில், பறங்கியர் காலத்தில் மறைந்துவிட்டது. பின்னர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே குறிப்பிட்ட இடத்தில், ஐயனார்வழிபாடு மீண்டும் ஆரம்பமாகியது. இக்காலப்பகுதியில் பந்தலொன்றினை அமைத்து, ஆண்டுதோறும் வழிபாடு நிகழ்த்தி வந்துள்ளார்கள். பின்னர் 1930 ஆம் ஆண்டளவில் ஆலயமொன்றினைக் கல்லினால் மடாலயமாகக் கட்டி வழிபாடு செய்து வந்துள்ளனர். இம்மடாலயம் இரு மண்டபங்களைக் கொண்டதாகக் காணப்பட்டுள்ளது. இம் மண்டபங்களில் ஒன்று கருவறையாகப் பயன்படுத்தப்பட்டது. இங்கு அமைக்கப்பட்ட பீடமொன்றில் சூலம் அமைந்திருந்தது. நாள்தோறும் பிற்பகலில் ஊரவர் பரமநயினாருக்கு அவல், கடலை, ரொட்டி முதலியவற்றைப் படைத்து வழிபடுவது வழக்கமாகும். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வழிபாடுகளும், பஜனைகளும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

1955 ஆம் ஆண்டு மடாலயமாக இருந்த பரமநயினார் ஆலயம் இடிக்கப்பட்டு, நித்திய, நைமித்திய கருமங்கள் செய்யத்தக்க முறையில், மக்கள் கொடுத்த நிதியின் உதவியுடன் ஆலயமொன்று அமைக்கப்பட்டது. கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தம்ப மண்டபம் ஆகிய அம்சங்களைக் கொண்டதாகப் பரமநயினார் கோயில் கட்டி முடிக்கப்பட்டது. 20 அடி உயரம் கொண்டதாகக் கர்ப்பக்கிருகம் அமைக்கப்பட்டது. இது சதுர வடிவில் ஒற்றைத் தளமாக அமைந்த, சிறிய விமானத்தைக் கொண்டுள்ளது. அதன் கிழக்குப் புறத்திலே வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானும், தெற்கிலே யோக தட்சிணாமூர்த்தியின் வடிவமும், அமைந்துள்ளன. மேற்கிலே கருடாரூட மூர்த்தியான மகாவிஷ்ணுவும், வடக்கிலே சிவபெருமானும், விநாயகரும் எழுந்தருளியள்ளனர். நாகதம்பிரான், வைரவர், சண்டேசுவரர், நவக்கிரகங்கள் ஆகிய பரிவார தேவர்களுக்கும், இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகர், வள்ளி தெய்வயானை சமேதரரான சுப்ரமணியர், சந்திரசேகரர், கண்ணகி ஆகியோரின் பஞ்சலோகத்தினாலான எழுந்தருளி விக்கிரகங்களும் இவ்வாலயத்திலே காணப்படுகின்றன.

கர்ப்பக்கிரகத்திலே அமைந்துள்ள பரமநயினாரின் வடிவம், ஆசனநிலையில் இடக்காலை உட்புறமாக மடித்து, வலக்காலைத் தொங்கவிட்ட கோலத்தில் அமைந்துள்ளது. ஒரு கரம் வரதஹஸ்தமாகவும், மறுகரம் செண்டினைத் தாங்கிய நிலையிலும் அமைந்துள்ளது. பரமநயினாரின் வலப்பக்கத்திலே பூரணையும், இடப்பக்கத்திலே புட்கலையும் குவளை மலர் ஏந்திய நிலையில் அமைந்துள்ளனர். பரமநயினாரின் எழுந்தருளி வடிவத்திலே, அவர் ஆசன நிலையிலும், தேவியர் ஸ்தானகநிலையிலும், இருப்பதைக் காணலாம். சுந்திர சேகரர், விநாயகர், முருகன் ஆகியோரின் எழுந்தருளி வடிவங்கள் ஸ்தானக நிலையிலே உள்ளன. 1982 ஆம் வருடம் சிவலிங்கம், மற்றும் உமாதேவியாரின் திருவுருவங்கள் முறையே மகாமண்டபத்தின் கிழக்கிலும், மேற்கிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இக்கோவிலில் வசந்த மண்டபமும் அமைந்துள்ளது. பரமநயினார், பூரணை, புட்கலை, உமாதேவியார் ஆகியோரின் பஞ்சலோக விக்கிரகங்களும் இக்காலப்பகுதியிலே உருவாக்கப்பட்டுள்ளன.

*வளரும்...*








# IN MEMORIAM

## The Late Mr and Mrs. T. Paramanantharajah



**Thiyagarajah (Para) Paramanantharajah**
*Born to Serve: June 11, 1924*
*Called to Eternity: Dec 13, 1984*

**Pooranam (Balesh) Paramanantharajah**
*Born to Serve: March 29, 1932*
*Called to Eternity: Nov 22, 2001*

**Appa and Amma** *every time you fed us - the first scoop that you served us was* **LOVE.** *The second scoop was* **UNITY**. *The third scoop was* **STRENGTH** *and* **COURAGE.** *Many parents do noble things, but both of you have surpassed them all.*

**Appa and Amma** *your affection was a driving force to accomplish and to overcome every hurdle. Whenever we press the replay button the little things that both of you did throughout our lives stands evergreen. When the calamities of the day-to-day routine had got us down, your touch was a cure that no doctor could prescribe.*

**Appa and Amma** *thank you for the sacrifices you have made for us. Thank you for being one of the greatest parents.*

**We Love You Appa and Amma**

*Your Loving Children and Family*

**Siva Para Sivananthan - Nalayini Kumar - Esa Para Esananda - Ganesh Para Ganeshananda**


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Tasty தமிழா
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
தேன் நெல்லி
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பலசரக்குகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 ஆவது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE, TRANSMISSION, RUSTPROOFING, OILCHANGE, TYRES, AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1340 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 10, 2021

# சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இராஜாங்க அமைச்சரை இன்னும் பதவியில் வைத்திருப்பது நாட்டின் நீதித்துறையின் அவலட்சணத்தைக் காட்டுகின்றது



## பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விபரிப்பு

கட அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மதுபோதையில் சென்று அங்கு பல வருடங்களாக விசாரணைகள் எதுவும் இன்றி வாடும். தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இராஜாங்க அமைச்சரை ஜனாதிபதி இன்னும் பதவியில் வைத்திருப்பது நாட்டின் நீதித்துறையின் அவலட்சணத்தைக் காட்டுகின்றது.

இவ்வாறு இலங்கைப் பாராளுமன்றத்தில் விபரித்து தனது கண்டணத்தைத் தெரிவித்தார் பாராளுமன்ற உறுப்பினர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

*(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)*

# நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட கடினயக் குடும்பம் ஒன்றுக்கு 2022 ல் உணவுக்காக மேலதிகமாக பதினைந்தாயிரம் டாலர்கள் தேவைப்படும்

## விலை அதிகரிப்பு தொடர்பான ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன

நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட கனடியக் குடும்பம் ஒன்றுக்குஅடுத்த வருடம் உணவுக்காக மேலதிகமாக பதினைந்தாயிரம் டாலர்கள் தேவைப்படும் எனவும் எனவே நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் 2022 ம் ஆண்டில் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.

இவ்வாறு கனடிய பல்கலைக் கழகங்கள் சில மேற்கொண்ட விலை அதிகரிப்பு மற்றும் உணவு உற்பத்தி தொடர்பான ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. *(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)*

# றொறன்ரோ பிராந்திய பொலிஸ் அதிகாரி செலுத்திய உத்தியோகபூர்வ வாகனம் மூன்று வாகனங்களை மோதித் தள்ளியது

## ஒன்ராறியோவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு அறிவிப்பு

றொறன்ரோ பிராந்திய பொலிஸ் அதிகாரி செலுத்திய உத்தியோகபூர்வ வாகனம மூன்று வாகனங்களை மோதித் தள்ளியதாகவும் இதனால் ஒரு முதியவர் மற்றும் பெண் பலத்த காயங்களுக்கு உள்ளாகியதாகவும் ஒன்ராறியோவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

# உலகில் பல நாடுகளில் இடம்பெறும் இனப்படுகொலைகளை 33 நாடுகள்...

*(முன்பக்கத் தொடர்ச்சி)*







நாடு கடந்த தமிழீழ் அரசாங்கத்தின் இனப் படுகொலை மற்றும் தொகையான அட்டூழியங்களைத் தடுப்பதற்கான அமைச்சும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அவர்களும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நினைவு தின வைபவத்தில் நாடு கடந்த தமிழீழ் அரசாங்கத்தின் இனப் படுகொலை மற்றும் தொகையான அட்டூழியங்களைத் தடுப்பதற்கான அமைச்ர் திரு றோய் விக்னராஜா உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

*(செய்தியும் படங்களும் - சத்தியன்)*

# அக்கினிக்குஞ்சு இணைய இதழ் ஆசிரியர் யாழ். பாஸ்கர் அவுஸ்த்திரேலியாவில் மல்லிகை ஜீவா விருது பெறுகிறார்

மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டு காலத்தில், இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக்ஜீவா நினைவாக அவுஸ்த்திரேயாவில் எழுத்தாளர் லெ. முருக பூபதியின் நூல்கள் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது. இந்த அரங்கில் எழுத்தாளரும் நாடகக் கலைஞரும் நீண்ட காலமாக அவுஸ்திரேலியாவிலிருந்து அக்கினிக்குஞ்சு இதழை வெளியிட்டுவரும் யாழ். பாஸ்கருக்கு மல்லிகை ஜீவா நினைவு விருது வழங்கப்படவுள்ளது.

*(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)*



தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker